# கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை

## கதர், கிராமத் தொழில்கள் மற்றும் கைவினைப் பொருட்கள்

## கொள்கை விளக்கக் குறிப்பு
## 2019–2020

## மானியக் கோரிக்கை எண். 18


## க. பாஸ்கரன்

கதர் மற்றும் கிராமத் தொழில்கள் வாரியத் துறை அமைச்சர்



©
தமிழ்நாடு அரசு
2019

# கொள்கை விளக்கக் குறிப்பு – 2019-2020

## பொருளடக்கம்



| வ.எண் | துறைகள் | பக்கம் எண் |
|---|---|---|
| 1 | பட்டுவளர்ச்சித் துறை | 1-38 |
| 2 | தமிழ்நாடு கைத்திறத் தொழில்கள் வளர்ச்சிக் கழகம் "பூம்புகார்" | 39-59 |
| 3 | தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம் | 60-82 |
| 4 | தமிழ்நாடு பனை பொருள் வளர்ச்சி வாரியம் | 83 |
| 5 | படங்கள் | i-xxv |

# பட்டுவளர்ச்சித் துறை

## அட்டவணை


| வ. எண் | பொருளடக்கம் | பக்கம் எண் |
|---|---|---|
| 1 | பட்டுவளர்ச்சிக் குறிப்பு | 1 |
| 2 | இந்தியாவில் பட்டுத் தொழில் | 3 |
| 3 | தமிழ்நாட்டில் பட்டுத் தொழில் | 4 |
| 4 | பட்டுவளர்ச்சித் துறை | 5 |
| 5 | பட்டுவளர்ச்சித் துறை பணியமைப்பு | 5 |
| 6 | பட்டுவளர்ச்சித் துறையின் செயல்பாடுகள் | 6 |
| 7 | தமிழ்நாட்டில் மல்பெரி பரப்பு | 7 |
| 8 | பட்டுவளர்ச்சித் துறையின் உட்கட்டமைப்பு வசதிகள் | 9 |
| 9 | கச்சாப்பட்டு உற்பத்தி | 24 |
| 10 | பயிர் காப்பீடு | 25 |
| 11 | 2018-2019-ஆம் ஆண்டு நடைமுறைப்படுத்தப்பட்டத் திட்டங்கள் | 26 |
| 12 | பட்டு சுற்றுலா | 33 |
| 13 | பட்டுவளர்ச்சித் துறையின் சாதனைகள் மற்றும் விருதுகள் | 34 |
| 14 | தமிழ்நாட்டில் பட்டுத் தொழில் அபிவிருத்திக்காக மேற்கொள்ளப்படவுள்ள நடவடிக்கைகள் | 36 |
| 15 | 2019-2020-ஆம் ஆண்டிற்கான நிதி ஒதுக்கீடு | 38 |

# தமிழ்நாடு கைத்திறத் தொழில்கள் வளர்ச்சிக் கழகம் “பூம்புகார்”

## அட்டவணை

| வ. எண் | பொருளடக்கம் | பக்கம் எண் |
|---|---|---|
| 1 | முன்னுரை | 39 |
| 2 | விற்பனை நிலையங்கள் | 40 |
| 3 | கண்காட்சிகள் | 40 |
| 4 | உற்பத்தி நிலையங்கள் | 41 |
| 5 | விற்பனை அளவு | 42 |
| 6 | விலைக்கொள்கை | 42 |
| 7 | புதிய நிர்வாகம், சந்தை மற்றும் உற்பத்தி முயற்சிகள் | 43 |
| 8 | தகவல் தொழில்நுட்பம் சாரா முயற்சிகள் | 47 |
| 9 | புதிய வருவாய் முறைகள் | 48 |
| 10 | ஏற்றுமதி | 49 |
| 11 | கைவினைஞர்களுக்கான நலன் | 50 |
| 12 | நகர்ப்புற கண்காட்சித்திடல் | 54 |
| 13 | ஒருங்கிணைந்த கைவினைப் பொருட்கள் மேம்பாடு மற்றும் வளர்ச்சி | 55 |
| 14 | நலிந்த கைத்திறத்தொழில்களுக்கு பொது பயன்பாட்டு மையம் அமைத்தல் | 57 |
| 15 | இலவச உபகரணங்கள் வழங்குதல் | 57 |
| 16 | சென்னை பூம்புகார் விற்பனை நிலையத்தில் கூடுதல் உள்கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்துதல் | 57 |
| 17 | உலக கற்சிற்ப நகரம் | 58 |
| 18 | மாமல்லபுர கற்சிற்பங்களுக்கு புவிசார் குறியீடு | 58 |
| 19 | தொலைநோக்கு பார்வை | 59 |

# தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம்

## அட்டவணை


| வ. எண் | பொருளடக்கம் | பக்கம் எண் |
|---|---|---|
| | முன்னுரை | 60 |
| 1 | வாரியத்தின் நோக்கங்கள் | 61 |
| 2 | நிர்வாகம் | 61 |
| 3 | கதர் | 62 |
| 4 | கதர் நூற்போர் மற்றும் நெசவாளர் நலத்திட்டங்கள் | 65 |
| 5 | வணிக அபிவிருத்தி நிதியுதவி திட்டம் | 69 |
| 6 | கிராமத் தொழில்கள் | 70 |
| 7 | விற்பனை நிலையங்கள் | 76 |
| 8 | பிரதம மந்திரியின் வேலை வாய்ப்பு உருவாக்கும் திட்டம் | 78 |
| 9 | வாரியத்திற்கு சொந்தமான கட்டடங்கள் புனரமைத்தல் | 80 |
| 10 | கதர் மற்றும் கிராமத் தொழில் பொருட்களின் உற்பத்தி மற்றும் விற்பனை | 81 |
| 11 | அரசிடமிருந்து பெறப்படும் நிதியுதவி | 81 |
| | தமிழ்நாடு பனை பொருள் வளர்ச்சி வாரியம் | 83 |

# பட்டுவளர்ச்சித் துறை

பட்டு பல்லாயிரம் ஆண்டுகளாக மக்களை பெரிதும் கவர்ந்து வருகிறது. சாயங்களை ஈர்க்கும் தன்மை, அதிக உறிஞ்சும் தன்மை, குறைவான எடை, மென் தன்மை, விரைவில் மீளும் திறன் மற்றும் அதிகம் நீடித்து உழைக்கும் தன்மை போன்ற ஒப்பற்ற பண்புகளை பட்டு கொண்டுள்ளதால், உலகம் முழுவதும் ஏற்றுக் கொள்ளக்கூடிய "ஆடைகளின் அரசி" என்ற தகுதியை பட்டு பெற்றிருக்கிறது.

சேலைகள், வேட்டிகள், ஆடைத் துணிகள், கழுத்து/தோளணித் துண்டுகள், ஆயத்த ஆடைகள், படுக்கை விரிப்புகள், தரை விரிப்புகள், அறை அலங்கார துணிகள் போன்ற பல்வேறு பட்டுத் துணி வகைகள் பட்டு நூலைப் பயன்படுத்தி உற்பத்தி செய்யப்படுகின்றன. பட்டு நூலை மற்ற நூல்களுடன் கலந்து கலப்புத் துணி வகைகளும் உற்பத்தி செய்யப்படுகின்றன.

பட்டு சீனாவில் கண்டறியப்பட்டு, பின்னர் பட்டுத் தொழில் உலகின் மற்ற பகுதிகளுக்கு பரவியது. சீனாவின் எழுத்துருப் பதிவுகளின்படி ஏறத்தாழ கி.மு.2640-ஆம் ஆண்டில் பட்டு கண்டறியப்பட்டதாகத் தெரிகிறது. பட்டுத் தொழில் ஏறத்தாழ கி.மு.140-ஆம் ஆண்டில் சீனாவிலிருந்து இந்தியாவிற்கு பரவியதாக வரலாற்று நிபுணர்கள் தெரிவித்துள்ளனர்.

கனிஷ்கர் காலத்தில் இந்தியாவிற்கும் ரோமானிய/ கிரேக்க நாடுகளுக்கும் இடையே மிகவும் செழிப்பான பட்டு வர்த்தகம் நடைபெற்றதாக வரலாற்று ஆதாரங்கள் தெரிவிக்கின்றன. சங்க இலக்கியங்களான கலித்தொகை, பரிபாடல் (எட்டுத்தொகை) மற்றும் திருமுருகாற்றுப்படை (பத்துப்பாட்டு)-யிலிருந்து தமிழ்நாட்டில் பட்டு ஆடைகள் பயன்படுத்தப் பட்டிருப்பதை அறிய முடிகிறது.

பட்டு நூலினை உற்பத்தி செய்வதற்காக பட்டுப்புழுக்களை வளர்ப்பது பட்டுவளர்ப்பு எனப்படுகிறது. மல்பெரி சாகுபடி செய்தல், பட்டுப்புழு வளர்த்தல் மற்றும் பட்டு நூற்பு செய்தல் போன்ற செயல்பாடுகளை பட்டுத் தொழில் உள்ளடக்கி உள்ளது. அதிக வேலை வாய்ப்பினை உருவாக்கக் கூடியதாகவும், குறைந்த மூலதனத்தில் அதிக வருவாயினைப் பெற்றுத் தரவல்லதாகவும் இருப்பதால், பட்டுத்தொழில் இலட்சக் கணக்கான மக்களுக்கு வாழ்வாதாரமாகத் திகழ்கிறது. இத்தொழில், பண்ணை மற்றும் பண்ணை சாராத செயல்பாடுகளுடன், கிராமப்புறங்களை அடிப்படையாகக் கொண்டதாகவும், அதிக வேலை வாய்ப்பினை ஏற்படுத்தித் தர வல்லதாகவும் இருப்பதால், இந்தியா போன்ற வேளாண்மையை அடிப்படையாகக் கொண்ட நாடுகளின் சமூக, பொருளாதார வளர்ச்சிக்கு ஒரு மிகச் சிறந்த கருவியாக கருதப்படுகிறது. சுற்றுச்சுழலுக்கு நன்மை புரியக்கூடிய உற்பத்தி முறைகள் மற்றும் அதிக வேலை வாய்ப்புகளை உருவாக்கும் ஆற்றல் போன்ற பண்புகளால், இது மகளிருக்கு அதிகாரமளிக்கக் கூடிய ஒரு கருவியாகத் திகழ்கிறது. இத்தொழில் வறுமை ஒழிப்புத் திட்டங்களில் ஒரு முக்கியமான பங்கு வகிப்பதுடன் வேலை வாய்ப்பைத் தேடி கிராமப்புற மக்கள் நகரங்களுக்கு செல்வதையும் தடுக்கிறது.

ஒரு கிலோ கிராம் பட்டு நூலினை உற்பத்தி செய்வதன் மூலம் பட்டுத் தொழில் 11 மனித நாட்கள் வேலை வாய்ப்பினை (பண்ணை மற்றும் பண்ணை சாரா செயல்பாடுகள் மூலம்) ஏற்படுத்தித் தருவதாக கணக்கிடப்பட்டுள்ளது. மேலும் ஒரு ஏக்கர் மல்பெரி பயிரிடுவதன் மூலம் பட்டுத் தொழில் 5 நபர்களுக்கு ஆண்டு முழுவதும் நேரடி வேலைவாய்ப்பினை ஏற்படுத்தி தருவதாக கணக்கிடப்பட்டுள்ளது. வேலைவாய்ப்பு ஏற்படுத்தித் தருவதாக கணக்கிடப்பட்ட அளவானது மல்பெரி

நடவு செய்யும் நிலையிலிருந்து பட்டு ஜவுளிகள் உற்பத்தி செய்யப்படும் நிலை வரையிலான காலம் ஆகும்.

மேலும் இத்தொழில் ஏற்படுத்தும் வேலைவாய்ப்புகளில் ஏறத்தாழ 55 சதவீதம் மகளிரால் பயன்படுத்திக் கொள்ளப்படுகிறது. இது மகளிருக்கு ஏற்ற தொழிலாகும். விவசாயிகள் 25 - 27 நாட்களில் ஒரு பட்டுப்புழு வளர்ப்பினை மேற்கொண்டு, அதன் விளைபொருளான பட்டுக்கூடுகளை விற்பனை செய்வதன் மூலம் வருவாய் பெற இயலும் என்பதால் இத்தொழில் விவசாயிகள் மாதந்தோறும் வருவாய் பெறுவதை உறுதி செய்கிறது. உற்பத்தி செய்யப்படும் பட்டு ஜவுளிகளின் மொத்த மதிப்பில் ஏறத்தாழ 60 சதவீதம் தொடக்க நிலை உற்பத்தியாளர்களான விவசாயிகளுக்கு திரும்ப கிடைக்கிறது. எனவே, பட்டுத் தொழில் ஒரு கிராமப்புற வருவாய் அளிக்கும் கருவியாக பயன்படுத்தப்படுகிறது.

## 2. இந்தியாவில் பட்டுத் தொழில்

உலக நாடுகளில் மல்பெரி, ஈரி, டசார் மற்றும் மூகா ஆகிய நான்கு வகை பட்டுகளையும் உற்பத்தி செய்யும் சிறப்பு வாய்ந்த தனித்துவத்தை இந்தியா பெற்றிருக்கிறது. உலக அளவில் பட்டு உற்பத்தியில் சீனாவிற்கு அடுத்தபடியாக இரண்டாம் நிலையில் இந்தியா உள்ளது. 2018-2019ஆம் ஆண்டில் உற்பத்தி செய்யப்பட்ட 35,261 மெட்ரிக் டன் மொத்த பட்டு உற்பத்தியில் மல்பெரி பட்டு 71.50 சதவீதமும் (25,213 மெட்ரிக் டன்), டசார் பட்டு 8.4 சதவீதமும் (2,977 மெட்ரிக் டன்), ஈரி பட்டு 19.4 சதவீதமும் (6,839 மெட்ரிக் டன்) மற்றும் மூகா பட்டு 0.66 சதவீதமும் (232 மெட்ரிக் டன்) உற்பத்தி செய்யப்பட்டுள்ளது. இந்தியாவில் கர்நாடகா, ஆந்திரப் பிரதேசம், மேற்கு வங்காளம், தமிழ்நாடு மற்றும் ஜார்க்கண்டு ஆகிய ஐந்து மாநிலங்களில் மல்பெரி பட்டுத் தொழில் மேற்கொள்ளப்படுகிறது.

இந்தியா உலக அளவில் பட்டுத் துணிகளை அதிக அளவில் நுகர்வு செய்யும் நாடாகத் திகழ்கிறது. கச்சாப் பட்டு உற்பத்தியை விட கச்சாப் பட்டுத் தேவை அதிகமாக உள்ளது. தற்போது இந்தியாவின் கணக்கீடு செய்யப்பட்ட கச்சாப்பட்டுத் தேவை ஆண்டொன்றிற்கு 38,200 மெட்ரிக் டன் ஆகும். இதில் 35,261 மெட்ரிக் டன் நம் நாட்டில் உற்பத்தி செய்யப்படுகிறது. மீதமுள்ள கச்சாப்பட்டுத் தேவையினை பூர்த்தி செய்ய சீனாவிலிருந்து கச்சாப்பட்டு இறக்குமதி செய்யப்படுகிறது. இந்தியா ஆண்டொன்றிற்கு சுமார் ரூ.1,493 கோடி மதிப்பிற்கு கச்சாப்பட்டினை இறக்குமதி செய்கிறது (2018-2019).

இந்தியா, ஆண்டொன்றிற்கு ரூ.1,832 கோடி மதிப்பிலான பட்டு ஜவுளிகளை மற்ற நாடுகளுக்கு ஏற்றுமதி செய்கிறது (2018-2019).

**3. தமிழ்நாட்டில் பட்டுத் தொழில்**

தமிழ்நாடு வெண்பட்டு உற்பத்தியில் முன்னோடி மாநிலமாக திகழ்ந்து வருகிறது. தமிழ்நாட்டின் நெசவுத் தொழில் பெரும்பாலும் கைத்தறிகளைக் கொண்டுள்ளது. காஞ்சிபுரம், ஆரணி, கும்பகோணம், சேலம், கோயம்புத்தூர், மதுரை மற்றும் திருநெல்வேலி ஆகியவை மாநிலத்தின் முக்கியமான நெசவுத் தொழில் மையங்களாகும். தமிழ்நாட்டில் தயாரிக்கப்படும் காஞ்சிபுரம் பட்டு சேலைகள் உள்ளிட்ட கைத்தறி பட்டு சேலைகள் நெசவாளர்களின் கைவண்ணத்தில் உலகப் பிரசித்தி பெற்று விளங்குகின்றன. தனித்தன்மை வாய்ந்த காஞ்சிபுரம், ஆரணி, திருபுவனம் பட்டு சேலைகள் மற்றும் சேலத்தில் தயாரிக்கப்படும் வெண்பட்டு வேட்டி ஆகியன புவிசார் குறியீடு எண் பெற்றுள்ளன. மாநிலத்தின் கணக்கீடு செய்யப்பட்ட கச்சாப் பட்டு தேவையான 3,000 மெட்ரிக் டன்னுக்கெதிராக 2,073 மெட்ரிக் டன் உற்பத்தி செய்யப்படுகிறது. அண்டை மாநிலமான கர்நாடகாவிலிருந்து

ஓரளவு பட்டு நூல் கொள்முதல் செய்யப்படுவதுடன் சீன நாட்டிலிருந்தும் பட்டு நூல் இறக்குமதி செய்யப்படுகிறது.

**4. பட்டுவளர்ச்சித் துறை**

தமிழ்நாடு அரசு 1979 ஆம் ஆண்டில் தொழில் மற்றும் வணிகத் துறையின் கீழ் செயல்பட்டு வந்த பட்டுவளர்ச்சிப் பிரிவினை 'பட்டுவளர்ச்சித் துறை' என்ற தனித்துறையாக சேலத்தை தலைமையிடமாகக் கொண்டு செயல்படும் வகையில் மேம்படுத்தியது. பட்டு உற்பத்தியில் தன்னிறைவு அடைதல், தமிழ்நாட்டை வெண்பட்டு மாநிலமாக உருவாக்குதல், தற்போதைய புதிய தொழில்நுட்பங்கள் மூலம் பட்டுவளர்ப்புத் தொழிலில் ஈடுபட்டுள்ளோரது பொருளாதார நிலை முன்னேற உதவுதல், கிராமப்புற, சிறுநகர பகுதிகளில் வேலை வாய்ப்புகளை உருவாக்குதல் ஆகியன பட்டுவளர்ச்சித் துறையின் குறிக்கோள்களாகும். தமிழ்நாட்டில் பட்டுத்தொழில் மேம்பாட்டிற்கான திட்டங்களை பட்டுவளர்ச்சித் துறை இயக்ககம் தயாரித்து, செயல்படுத்தி வருகிறது.

மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்களது ஆற்றல்மிக்க வழிகாட்டுதலின்படி கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை, சென்னை கட்டுப்பாட்டின்கீழ் பட்டுவளர்ச்சித் துறை இயங்கி வருகிறது.

**5. பட்டுவளர்ச்சித் துறை பணியமைப்பு**

பட்டுவளர்ச்சித் துறை சீரிய முறையில் நிரவலாக்கப்பட்ட விரிவாக்க அமைப்புக்கான தொழில்நுட்பப் பணியாளர்கள் மற்றும் அமைச்சுப் பணியாளர்களை கொண்டுள்ளது. மாநிலத்தில் பல்வேறு பட்டு வளர்ச்சித் திட்டங்களை செயல்படுத்துவதற்காக தமிழ்நாடு அரசால் அனுமதிக்கப்பட்டுள்ள பணியிடங்கள் பின்வருமாறு:

| வ.எண். | பதவியின் பெயர் | அனுமதிக்கப்பட்டுள்ள எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | இயக்குநர் | 1 |
| 2 | இணை இயக்குநர் | 4 |
| 3 | துணை இயக்குநர் | 10 |
| 4 | உதவி இயக்குநர் | 27 |
| 5 | பட்டு ஆய்வாளர் | 67 |
| 6 | உதவி பட்டு ஆய்வாளர் | 179 |
| 7 | இளநிலை பட்டு ஆய்வாளர் | 837 |
| 8 | அமைச்சுப் பணியாளர், மற்றோர் | 328 |
| | மொத்தம் | 1,453 |

பட்டுக்கூடுகளுக்கு முந்தைய நிலை, பிந்தைய நிலை செயல்பாடுகளை மேற்கொள்ளப் போதுமான முன்னிணைப்பு மற்றும் பின்னிணைப்புகளுடன் கூடிய உட்கட்டமைப்பு வசதிகளை பட்டுவளர்ச்சித் துறை பெற்றுள்ளது.

## 6. பட்டுவளர்ச்சித் துறையின் செயல்பாடுகள்

தமிழ்நாட்டில் பட்டுவளர்ப்புத் தொழிலை மேம்படுத்த பட்டுவளர்ச்சித் துறையானது கீழ்க்காணும் செயல்பாடுகளை மேற்கொண்டு வருகிறது.

- உயர் விளைச்சல் தரும் மல்பெரி இரகங்களை பயிர் செய்ய விவசாயிகளுக்கு ஊக்கமளித்தல்.
- மல்பெரி சாகுபடி செய்தல், பட்டுப்புழு வளர்த்தல் மற்றும் பட்டுநூற்பு குறித்து பயிற்சி அளித்தல்
- உயர்விளைச்சல் மல்பெரி இரக சாகுபடி, சொட்டு நீர்ப்பாசனம் அமைத்தல், மேம்படுத்தப்பட்ட பட்டுப்புழு வளர்ப்பு உபகரணங்கள் கொள்முதல் செய்தல், தனி பட்டுப்புழுவளர்ப்புக் குடில் அமைத்தல், இளம்புழு வளர்ப்பு மையம் ஏற்படுத்துதல் ஆகியவற்றிற்கு மானிய உதவியளித்தல்.

- தரமான நோயற்ற பட்டு முட்டைகள் வழங்குதல்.
- தொழில் நுட்பப் பரிமாற்றத்தின் மூலம் பட்டுக்கூடு உற்பத்தித் திறனை அதிகரித்தல்.
- பட்டு விவசாயிகளுக்கு பயிர்க் காப்பீட்டுத் திட்டத்தை செயல்படுத்துதல்.
- பட்டுக்கூடு மற்றும் பட்டு நூலுக்கான சந்தை வாய்ப்புகளை ஏற்படுத்துதல்.
- தனியார் மற்றும் கூட்டுறவு அமைப்புகளில் மேம்பட்ட பட்டு நூற்பு / பட்டு முறுக்கேற்றும் அலகுகள் அமைக்க மானிய உதவியளித்தல்.

## 7. தமிழ்நாட்டில் மல்பெரி பரப்பு

தமிழ்நாட்டில் 49,717 ஏக்கர் பரப்பில் 25,237 விவசாயிகளால் மல்பெரி சாகுபடி செய்யப்பட்டு வருகிறது. கிருஷ்ணகிரி, தருமபுரி, சேலம், ஈரோடு, திருப்பூர், வேலூர், நாமக்கல், திண்டுக்கல், திருநெல்வேலி மற்றும் தேனி ஆகிய மாவட்டங்களில் பட்டுவளர்ப்பு தீவிரமாக செயல்படுத்தப்பட்டு வருகிறது. சென்னை நீங்கலாக பிற மாவட்டங்களில் மிதமான அளவில் பட்டு வளர்ப்பு செயல்படுத்தப்பட்டு வருகிறது.

உயர் விளைச்சல் தரும் வி1, எஸ் வரிசை, எம்.ஆர்.2 ஆகிய மல்பெரி இரகங்கள் விவசாயிகளிடையே பிரபலப்படுத்தப்பட்டு வருகிறது. மல்பெரி செடிகளை செழிப்பாக வளரச் செய்வதற்காக இணை வரிசை நடவு முறை விவசாயிகளுக்கு பரிந்துரைக்கப்படுகிறது. பாசன நீரை சிக்கனமாகப் பயன்படுத்துவதற்காக மல்பெரி தோட்டங்களுக்கு சொட்டு நீர்ப் பாசனம் பிரபலப்படுத்தப்பட்டுள்ளது. பட்டுப்புழு வளர்ப்பில் வேலையாட்கள் பயன்பாட்டினை மேம்படுத்துவதற்காக தற்போது தண்டு அறுவடை முறை பின்பற்றப்படுகிறது. தண்டு அறுவடை முறையில் மல்பெரித் தோட்டம் ஒவ்வொரு

புழுவளர்ப்புக்குப் பின்னரும் கவாத்து செய்யப்பட்டு, இடைநிலை சீர்திருத்தங்களும் உரமிடுவதும் மேற்கொள்ளப்படுகிறது.

ஒரு ஏக்கர் பரப்பில் வீரிய இரக மல்பெரி நடவு செய்யும் விவசாயிகளுக்கு ஊக்கத் தொகையாக ரூ.10,500/- பட்டு வளர்ச்சித்துறை வழங்குகிறது. பட்டு வளர்ச்சித் துறையானது மல்பெரி தோட்டங்களில் சொட்டு நீர்ப்பாசனம் நிறுவுவதற்காக ஏக்கர் ஒன்றுக்கு ரூ.33,600/- வீதம் நிதியுதவி வழங்குகிறது.

மல்பெரி நடவு செய்வதிலிருந்து, பட்டுக் கூடுகளை சந்தைப்படுத்துதல் வரையிலான அனைத்து நிலைகளிலும் விரிவாக்கப் பணியாளர்கள் எல்லா வகையான உதவிகளையும் விவசாயிகளுக்கு அளித்து வருகின்றனர்.

## மாவட்ட வாரியான மல்பெரி பரப்பு

| மாவட்டம் | 31.03.2019ல் மல்பெரி பரப்பு (ஏக்கரில்) | | | |
|---|---|---|---|---|
| | இறவை | மானாவாரி | மொத்தம் | விவசாயிகள் |
| கிருஷ்ணகிரி | 8208.70 | | 8208.70 | 4490 |
| தருமபுரி | 4049.60 | | 4049.60 | 2512 |
| சேலம் | 3046.95 | | 3046.95 | 1862 |
| ஈரோடு | 4492.61 | | 4492.61 | 2079 |
| கோயம்புத்தூர் | 3127.50 | | 3127.50 | 1283 |
| திருப்பூர் | 5650.89 | | 5650.89 | 2713 |
| நீலகிரி | 80.00 | | 80.00 | 65 |
| வேலூர் | 3148.00 | 178.10 | 3326.10 | 1778 |
| காஞ்சிபுரம் | 40.50 | | 40.50 | 19 |
| திருவள்ளூர் | 8.00 | | 8.00 | 3 |
| திருவண்ணாமலை | 1105.45 | 164.00 | 1269.45 | 739 |
| நாமக்கல் | 2161.85 | 53.90 | 2215.75 | 1136 |
| கரூர் | 390.00 | | 390.00 | 209 |
| திருச்சி | 1075.05 | | 1075.05 | 560 |
| பெரம்பலூர் | 161.50 | | 161.50 | 79 |
| அரியலூர் | 149.50 | | 149.50 | 73 |
| புதுக்கோட்டை | 640.00 | | 640.00 | 318 |

| மாவட்டம் | 31.03.2019ல் மல்பெரி பரப்பு (ஏக்கரில்) | | | |
|---|---|---|---|---|
| | இறவை | மானாவாரி | மொத்தம் | விவசாயிகள் |
| திருவாரூர் | 221.50 | | 221.50 | 108 |
| தஞ்சாவூர் | 397.00 | | 397.00 | 198 |
| நாகப்பட்டினம் | 99.50 | | 99.50 | 48 |
| விழுப்புரம் | 1120.50 | | 1120.50 | 607 |
| கடலூர் | 442.25 | | 442.25 | 198 |
| மதுரை | 489.00 | | 489.00 | 210 |
| தேனி | 1992.50 | | 1992.50 | 909 |
| விருதுநகர் | 549.00 | | 549.00 | 205 |
| இராமநாதபுரம் | 189.50 | | 189.50 | 94 |
| சிவகங்கை | 337.70 | | 337.70 | 159 |
| திண்டுக்கல் | 3556.25 | | 3556.25 | 1553 |
| திருநெல்வேலி | 1914.75 | | 1914.75 | 797 |
| தூத்துக்குடி | 234.85 | | 234.85 | 100 |
| கன்னியாகுமரி | 240.50 | | 240.50 | 133 |
| **மொத்தம்** | **49320.90** | **396.00** | **49716.90** | **25237** |

2019-2020-ஆம் ஆண்டில் கூடுதலாக 10,000 ஏக்கரில் மல்பெரி சாகுபடி செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது.

## 8. பட்டுவளர்ச்சித் துறையின் உட்கட்டமைப்பு வசதிகள்

ஈரோடு, தருமபுரி, வேலூர், திருச்சி மற்றும் மதுரை ஆகிய இடங்களில் அமைந்துள்ள ஐந்து மண்டல அலுவலகங்கள் மூலமாக பட்டு வளர்ச்சி செயல்பாடுகள் கண்காணிக்கப் படுகின்றன. மாநிலத்தில் உள்ள 19 உதவி இயக்குநர்களால் மல்பெரி விரிவாக்கம் மற்றும் அதனைச் சார்ந்த பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன. பட்டுவிதை ஒருங்கிணைப்புப் பணியினை, ஓசூரிலுள்ள துணை இயக்குநர் அலுவலகம், 5 உதவி இயக்குநர்களின் ஒத்துழைப்புடன் மேற்கொள்கிறது. மாநிலத்தில் உற்பத்தி செய்யப்படும் கச்சாப்பட்டினை வர்த்தகம் செய்யும் பணியை, காஞ்சிபுரத்தில் உள்ள அரசு அண்ணா பட்டு பரிமாற்றகம் மற்றும் அதன் சேலம் கிளை மேற்கொள்கிறது.

மாநில அளவிலான பயிற்சி நிலையம் ஒன்று, துணை இயக்குநர் தலைமையில் ஓசூரில் இயங்கி வருகிறது. இப்பயிற்சி நிலையம், பட்டு உற்பத்தியாளர்கள் மற்றும் துறை அலுவலர்களுக்கு பல்வேறு திட்டங்களின் கீழ் பயிற்சியினை வழங்கி வருகிறது.

மாநிலத்தில் பட்டுத்தொழிலின் வளர்ச்சியினை மேம்படுத்துவதற்காக பின்வரும் இதர உட்கட்டமைப்பு வசதிகள் இருக்கின்றன.

### 8.1 ஆதார பட்டுப்புழு விதை உற்பத்தி அலகுகள்

பட்டுவளர்ச்சித் துறையில் உள்ள ஆதார விதைப் பண்ணைகளில் உற்பத்தி செய்யப்படும் ஆதார விதைக்கூடுகளை பயன்படுத்தி, வர்த்தகரீதியிலான முட்டைத் தொகுதிகள் உற்பத்தி செய்யப்பட்டு, பட்டு விவசாயிகளுக்கு தொடர்ந்து வழங்கப்பட்டு வருகிறது.

மூன்றடுக்கு முறையில் பட்டுப்புழுக்களின் இனப் பண்புகளை பராமரித்து, பட்டு விவசாயிகளுக்கு தேவையான வர்த்தக ரீதியிலான பட்டுப்புழு முட்டைகளை உற்பத்தி செய்வதற்கான ஆதார விதைக்கூடுகளை உற்பத்தி செய்து வழங்க, 19 விதைப் பண்ணைகள் இத்துறையில் உள்ளன.

**விதைப் பண்ணைகள்**

| மாவட்டம் | உதவி இயக்குநர் | வ.எண் | விதைப் பண்ணையின் பெயர் | நிலை | மொத்த பரப்பு (ஏக்கர்) |
|---|---|---|---|---|---|
| கிருஷ்ணகிரி | ஆவலப்பள்ளி | 1 | பேரிகை | பி3 | 3.67 |
| | | 2 | ஆவலப்பள்ளி | பி3 | 11.38 |
| | | 3 | ஓசூர் | பி2 | 44.72 |
| | கல்கொண்டப்பள்ளி | 4 | கல்கொண்டப்பள்ளி | பி3 | 5.65 |
| | | 5 | தளி | பி3 | 3.50 |
| | உத்தனப்பள்ளி | 6 | உத்தனப்பள்ளி | பி2 | 26.24 |
| | | 7 | உளிமங்கலம் | பி2 | 9.80 |
| | | 8 | மேலகிரி | பி2 | 10.20 |
| | கோலட்டி | 9 | கோலட்டி | பி1 | 868.55 |

| மாவட்டம் | உதவி இயக்குநர் | வ.எண் | விதைப் பண்ணையின் பெயர் | நிலை | மொத்த பரப்பு (ஏக்கர்) |
|---|---|---|---|---|---|
| சேலம் | சேலம் | 10 | ஏற்காடு | பி2 | 5.96 |
| ஈரோடு | தாளவாடி | 11 | ஆசனூர் | பி2 | 9.00 |
| | மாதஹள்ளி | 12 | மாதஹள்ளி | பி1 | 785.29 |
| வேலூர் | திருவண்ணாமலை | 13 | அத்தனாவூர் | பி1 | 5.73 |
| நாமக்கல் | நாமக்கல் | 14 | கொல்லிமலை | பி1 | 13.10 |
| தேனி | தேனி | 15 | மயிலாடும்பாறை | பி2 | 10.00 |
| திருநெல்வேலி | தென்காசி | 16 | செங்கோட்டை | பி1 | 42.24 |
| நீலகிரி | குன்னூர் | 17 | குன்னூர் | பி3 | 25.25 |
| | | 18 | மசினகுடி | பி2 | 8.35 |
| | | 19 | மசக்கல் | பி2 | 18.95 |
| | | | **மொத்தம்** | | **1907.58** |

## 8.2 வித்தகங்கள்

வித்தகங்கள் என்றழைக்கப்படும் பட்டுப்புழு விதை உற்பத்தி மையங்கள், பட்டுத் தொழிலின் வளர்ச்சிக்கு ஒரு முக்கிய பங்கினை ஆற்றுகின்றன. பின்வரும் 11 மாநில அரசு வித்தகங்கள் மற்றும் 2 மத்திய பட்டு வாரியத்தால் இயக்கப்படும் தேசிய பட்டுப்புழு விதைக் கழகத்தின் (NSSO) வித்தகங்கள் மூலம் நோயற்ற பட்டு முட்டைகள் தயாரிக்கப்பட்டு விவசாயிகளுக்கு விநியோகம் செய்யப்படுகின்றன.

**வித்தகங்கள்**

| மாவட்டம் | உதவி இயக்குநர் | வ.எண். | வித்தகத்தின் பெயர் | மாநில அரசு / * மத்திய பட்டு வாரியம் | உற்பத்தித் திறன் (இலட்சத்தில்) |
|---|---|---|---|---|---|
| கிருஷ்ணகிரி | ஓசூர் (வித்தகம்) | 1 | ஓசூர் (கலப்பினம்) | மாநில அரசு | 4.00 |
| | | | ஓசூர் (இருசுழற்சி) | மாநில அரசு | 10.50 |
| | | * | ஓசூர் | மத்திய பட்டு வாரியம் | 14.00 |
| | கிருஷ்ணகிரி (வித்தகம்) | 2 | கிருஷ்ணகிரி | மாநில அரசு | 16.00 |
| தருமபுரி | தருமபுரி | 3 | சோகத்தூர் | மாநில அரசு | 3.00 |
| | | * | தருமபுரி | மத்திய பட்டு வாரியம் | 8.00 |
| | பென்னாகரம் | 4 | பென்னாகரம் | மாநில அரசு | 3.00 |

| மாவட்டம் | உதவி இயக்குநர் | வ.எண். | வித்தகத்தின் பெயர் | மாநில அரசு / * மத்திய பட்டு வாரியம் | உற்பத்தித் திறன் (இலட்சத்தில்) |
|---|---|---|---|---|---|
| கோயம்புத்தூர் | கோயம்புத்தூர் | 5 | கோயம்புத்தூர் | மாநில அரசு | 8.00 |
| ஈரோடு | ஈரோடு | 6 | ஈரோடு | மாநில அரசு | 8.00 |
| | தாளவாடி | 7 | தாளவாடி | மாநில அரசு | 4.00 |
| வேலூர் | வாணியம்பாடி | 8 | வாணியம்பாடி | மாநில அரசு | 3.00 |
| திருச்சி | திருச்சி | 9 | திருச்சி | மாநில அரசு | 4.00 |
| திண்டுக்கல் | திண்டுக்கல் | 10 | திண்டுக்கல் | மாநில அரசு | 3.00 |
| திருநெல்வேலி | தென்காசி | 11 | குற்றாலம் | மாநில அரசு | 4.00 |
| | | | **மொத்தம்** | | **92.50** |

## 8.3 பல்நிலை குளிர்பதன அலகுகள்

ஓர் ஆண்டில் ஒரு தலைமுறை, இரண்டு தலைமுறை மற்றும் பல தலைமுறைகளை உருவாக்கும் பட்டுப்புழுக்கள் முறையே ஒரு சுழற்சி இனம், இரு சுழற்சி இனம் மற்றும் பல சுழற்சி இனம் என வகைப்படுத்தப்பட்டுள்ளன. சாதாரணமாக, பல சுழற்சி இனங்களில் பட்டு முட்டைகள் முட்டையிட்ட 10-11 நாட்களிலும், இரு சுழற்சி இனங்கள் மற்றும் ஒரு சுழற்சி இனங்களில் 6-10 மாதங்களிலும் பொரிக்கின்றன.

தமிழ்நாட்டில் உள்ள பட்டு விவசாயிகளால் வெண் பட்டுப்புழு வளர்ப்பு அதிகளவில் மேற்கொள்ளப்படுகிறது. இருசுழற்சி பட்டுப்புழு இனம் ஓர் ஆண்டில் இரு தலைமுறைகளை உருவாக்குகிறது. பட்டு முட்டைகளின் விதை உறக்கத்தினைப் போக்கி அவற்றை நான்கு, ஆறு மற்றும் பத்து மாதங்களுக்குப் பின் பொரிக்கும் வகையில் விவசாயிகளுக்கு விநியோகம் செய்வதற்காக இருசுழற்சி பட்டு முட்டைகள் 2.5°C முதல் 25°C வரையிலான பல்வேறு வெப்ப நிலைகளில் சுமார் 120 முதல் 300 நாட்கள் என முன்னதாக நிர்ணயம் செய்யப்பட்ட காலத்திற்கு பாதுகாப்பாக குளிர்பதன அலகில் பதனம் செய்யப்படுகின்றன. விவசாயிகள் வெற்றிகரமாக பட்டுக்கூடு அறுவடை பெற, பட்டு முட்டைகளைப் பதனப்படுத்திட அதிக பட்ச கவனம்

செலுத்துவது மிகவும் முக்கியமானதாகும். இருசுழற்சியின பட்டு முட்டைகளை ஆண்டு முழுவதும் பதனப்படுத்தி விநியோகம் செய்வதற்காக 40 இலட்சம் பட்டு முட்டைகளை பதனம் செய்யும் திறன் கொண்டு இரண்டு பல்நிலை குளிர்பதன அலகுகள் கிருஷ்ணகிரி மாவட்டத்தில் கிருஷ்ணகிரியிலும் ஓசூரிலும் செயல்படுகின்றன. 2018-2019-ஆம் ஆண்டில் இவ்விரண்டு பல்நிலை குளிர்பதன அலகுகளில் 31.35 இலட்சம் இருசுழற்சி இன பட்டு முட்டைகள் பதனப்படுத்தப்பட்டன. தமிழ்நாட்டில் 90 சதவிதத்திற்கும் அதிகமான விவசாயிகள் இருசுழற்சியின பட்டு முட்டைகளையே வளர்த்து வருகின்றனர்.

கோயம்புத்தூர், ஈரோடு, தாளவாடி, ஓசூர், கிருஷ்ணகிரி, பென்னாகரம், தருமபுரி மற்றும் வாணியம்பாடி ஆகிய பட்டு முட்டை வித்தகங்களில் உற்பத்தி செய்யப்படும் இருசுழற்சி வீரிய பட்டு முட்டைகள் பல்நிலை குளிர்பதன நிலையங்களில் நான்கு, ஆறு, பத்து மாத பதன அட்டவணைப்படி மிகுந்த கவனத்துடனும், பாதுகாப்புடனும் பதனப்படுத்தப்பட்டு, பட்டு விவசாயிகளுக்கு வழங்கப்படுகின்றன.

### 8.4 தொழில்நுட்ப சேவை மையங்கள்

பட்டு விவசாயிகளுக்கு மல்பெரி சாகுபடி, மல்பெரித் தோட்டப் பராமரிப்பு, பட்டுப்புழு வளர்ப்பு மற்றும் பயிர்ப் பாதுகாப்பு முறைகள் குறித்த தொழில்நுட்ப உதவிகளை அவர்களது இல்லம் தேடிச் சென்று வழங்குவதற்காக, மாநிலத்தில் 105 தொழில் நுட்ப சேவை மையங்கள் இயங்கி வருகின்றன. ஒவ்வொரு தொழில் நுட்ப சேவை மையத்திலும் ஒரு உதவி ஆய்வாளர் / ஆய்வாளர் தலைமையில் 5-6 இளநிலை ஆய்வாளர்கள் பட்டு விவசாயிகளது தேவைகளை கவனித்து வருகின்றனர்.

## தொழில் நுட்ப சேவை மையங்கள்

| மண்டலம் | மாவட்டங்கள் | வ. எண். | உதவி இயக்குநர் | தொழில் நுட்ப சேவை மையங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| தருமபுரி | கிருஷ்ணகிரி | 1 | ஓசூர் | 7 |
| | | 2 | தேன்கனிக்கோட்டை | 6 |
| | | 3 | கிருஷ்ணகிரி | 4 |
| | தருமபுரி | 4 | தருமபுரி | 4 |
| | | 5 | பென்னாகரம் | 6 |
| ஈரோடு | சேலம் | 6 | சேலம் | 7 |
| | கோயம்புத்தூர்<br>திருப்பூர்<br>ஈரோடு | 7 | கோயம்புத்தூர் | 4 |
| | | 8 | உடுமலைப்பேட்டை | 5 |
| | | 9 | ஈரோடு | 7 |
| | | 10 | தாளவாடி | 3 |
| | நீலகிரி | 11 | குன்னூர் | 1 |
| வேலூர் | வேலூர்<br>காஞ்சிபுரம்<br>திருவள்ளூர் | 12 | வாணியம்பாடி | 8 |
| | திருவண்ணாமலை<br>மற்றும்<br>வேலூர் மாவட்ட<br>மலைப்பகுதிகள் | 13 | திருவண்ணாமலை | 6 |
| | விழுப்புரம்<br>கடலூர் | 14 | விழுப்புரம் | 4 |
| திருச்சி | திருச்சி<br>புதுக்கோட்டை<br>அரியலூர்<br>திருவாரூர்<br>தஞ்சாவூர்<br>பெரம்பலூர்<br>நாகப்பட்டினம் | 15 | திருச்சி | 8 |
| | நாமக்கல்<br>கரூர் | 16 | நாமக்கல் | 7 |
| மதுரை | திண்டுக்கல்<br>சிவகங்கை | 17 | திண்டுக்கல் | 6 |
| | தேனி<br>மதுரை<br>இராமநாதபுரம் | 18 | தேனி | 5 |
| | திருநெல்வேலி<br>விருதுநகர்<br>தூத்துக்குடி<br>கன்னியாகுமரி | 19 | தென்காசி | 7 |
| | | | **மொத்தம்** | **105** |

## 8.5 அரசு பட்டுப் பண்ணைகள்

பட்டுவளர்ச்சித் துறையின் கீழ் 32 அரசு பட்டுப் பண்ணைகள் செயல்பட்டு வருகின்றன. அவை, 7 அரசு கலப்பின பட்டுப் பண்ணைகள், 5 மாதிரி மல்பெரி பட்டுப் பண்ணைகள், 10 விவசாயிகள் பயிற்சி மையங்கள் மற்றும் 4 இளம் புழுவளர்ப்பு மையங்கள் ஆகும். இவை செயல்முறை மற்றும் பயிற்சி மையங்களாக செயல்பட்டு வருவதுடன் தரமான மல்பெரி நாற்றுகள் மற்றும் ஆரோக்கியமான இளம்புழுக்களை தேவைப்படும் பட்டு விவசாயிகளுக்கு வழங்கி வருகின்றன.

**அரசு பட்டுப் பண்ணைகள்**

| மாவட்டம் | உதவி இயக்குநர் | வ. எண். | அரசு பட்டுப் பண்ணையின் பெயர் | | மொத்த பரப்பு (ஏக்கர்) |
|---|---|---|---|---|---|
| கிருஷ்ணகிரி | தமிழ்நாடு பட்டு வளர்ச்சி பயிற்சி நிலையம், ஓசூர் | 1 | ஓசூர் | செயல் விளக்கம் மற்றும் பயிற்சி மையம் | 2.18 |
| | கிருஷ்ணகிரி | 2 | ஊத்தங்கரை | கலப்பின பட்டுப் பண்ணை | 3.72 |
| தருமபுரி | தருமபுரி | 3 | சித்தேரி | கலப்பின பட்டுப் பண்ணை | 5.79 |
| | | 4 | சோகத்தூர் | விவசாயிகள் பயிற்சி மையம் | 5.84 |
| | பென்னாகரம் | 5 | பாப்பாரப்பட்டி | இளம்புழு வளர்ப்பு பண்ணை | 1.81 |
| சேலம் | சேலம் | 6 | நத்தக்கரை | விவசாயிகள் பயிற்சி மையம் | 14.50 |
| | | 7 | மணியார்-குண்டம் | கலப்பின பட்டுப் பண்ணை | 50.00 |
| | | 8 | புதூர் | கலப்பின பட்டுப் பண்ணை | 6.04 |
| விழுப்புரம் | | 9 | வெள்ளிமலை | கலப்பின பட்டுப் பண்ணை | 6.56 |
| ஈரோடு | தாளவாடி | 10 | தாளவாடி | விவசாயிகள் பயிற்சி மையம் | 18.01 |
| | | 11 | இராமாபுரம் | இளம்புழு வளர்ப்பு பண்ணை | 3.58 |
| | | 12 | கீர்மாளம் | கலப்பின பட்டுப் பண்ணை | 32.82 |
| திருப்பூர் | உடுமலைப்-பேட்டை | 13 | மைவாடி | விவசாயிகள் பயிற்சி மையம் | 20.10 |

| மாவட்டம் | உதவி இயக்குநர் | வ. எண். | அரசு பட்டுப் பண்ணையின் பெயர் | | மொத்த பரப்பு (ஏக்கர்) |
|---|---|---|---|---|---|
| காஞ்சிபுரம் | வாணியம்பாடி | 14 | விச்சந்தாங்கல் | விவசாயிகள் பயிற்சி மையம் | 8.05 |
| வேலூர் | வாணியம்பாடி | 15 | மின்னூர் | விவசாயிகள் பயிற்சி மையம் | 18.70 |
| திருவண்ணா மலை | திருவண்ணா-மலை | 16 | நாடானூர் | இளம்புழு வளர்ப்பு பண்ணை | 1.88 |
| வேலூர் | | 17 | புலியூர் | இளம்புழு வளர்ப்பு பண்ணை | 7.99 |
| கடலூர் | விழுப்புரம் | 18 | நெய்வேலி | விவசாயிகள் பயிற்சி மையம் | 20.00 |
| திருச்சி | திருச்சி | 19 | உப்பிலியாபுரம் | செயல் விளக்கம் மற்றும் பயிற்சி மையம் | 2.60 |
| | | 20 | கலிங்கப்பட்டி | மாதிரி மல்பெரி பட்டுப் பண்ணை | 5.00 |
| | | 21 | கருக்கமடை | மாதிரி மல்பெரி பட்டுப் பண்ணை | 2.11 |
| | | 22 | பச்சைமலை | கலப்பின பட்டுப் பண்ணை | 8.45 |
| | | 23 | மணிகண்டம் | விவசாயிகள் பயிற்சி மையம் | 10.00 |
| தஞ்சாவூர் | | 24 | நாஞ்சிக்-கோட்டை | விவசாயிகள் பயிற்சி மையம் | 4.65 |
| திண்டுக்கல் | திண்டுக்கல் | 25 | சி.கே.புதூர் | மாதிரி மல்பெரி பட்டுப்பண்ணை | 4.93 |
| சிவகங்கை | | 26 | குன்றக்குடி | மாதிரி மல்பெரி பட்டுப்பண்ணை | 6.20 |
| | | 27 | ஓ.புதூர் | செயல் விளக்கம் மற்றும் பயிற்சி மையம் | 10.00 |
| இராமநாதபுரம் | தேனி | 28 | பாண்டியூர் | செயல் விளக்கம் மற்றும் பயிற்சி மையம் | 4.36 |
| திருநெல் வேலி | தென்காசி | 29 | திருநெல்வேலி (இருப்பு) வி.எம்.சத்திரம் | செயல் விளக்கம் மற்றும் பயிற்சி மையம் | 1.88 |
| விருதுநகர் | | 30 | திருவில்லி-புத்தூர் | விவசாயிகள் பயிற்சி மையம் | 10.15 |
| | | 31 | செவலூர் | மாதிரி மல்பெரி பட்டுப்பண்ணை | 12.00 |

| மாவட்டம் | உதவி இயக்குநர் | வ. எண். | அரசு பட்டுப் பண்ணையின் பெயர் | | மொத்த பரப்பு (ஏக்கர்) |
|---|---|---|---|---|---|
| கன்னியா குமரி | | 32 | நாகர்கோவில்/ கோணம் | செயல் விளக்கம் மற்றும் பயிற்சி மையம் | 3.10 |
| | | | **மொத்தம்** | | **313.00** |

## 8.6 இளம்புழு வளர்ப்பு மையங்கள்

பட்டு முட்டை பொரித்து, இரண்டாம் தோலுரிப்பு வரையிலான 7 நாட்கள் புழுவளர்ப்பு, 'இளம்புழுவளர்ப்பு' என்றழைக்கப்படுகிறது. இளம்புழுவளர்ப்பு செய்து அவற்றை விவசாயிகளுக்கு வழங்கும் மையங்கள் 'இளம்புழு வளர்ப்பு மையங்கள்' என்று அழைக்கப்படுகின்றன. சுகாதாரம் பேணுவதிலும், தேவையான தட்ப-வெப்ப நிலைகளைப் பராமரிப்பதிலும் மற்றும் தரமான மல்பெரி இலைகளை உணவாக அளிப்பதிலும் இளம்புழுவளர்ப்பிற்கு சிறப்பான கவனிப்பு தேவைப்படுகிறது. பிரத்யேக உரப் பரிந்துரை மற்றும் கவாத்து அட்டவணை அடிப்படையில் மல்பெரித் தோட்டம் மற்றும் தனி புழுவளர்ப்பு மனை பராமரிக்கப்பட்டு, புழுவளர்ப்பு காலத்தில் இளம்புழுவளர்ப்பு மையங்களில் அதீத கவனம் செலுத்தப்படுகிறது. மாநிலத்தில் வெற்றிகரமான இருசுழற்சி பட்டு வளர்ப்பிற்கு முக்கிய காரணியாக இளம்புழுவளர்ப்புக் கொள்கை திகழ்கிறது. 2018-2019 ஆம் ஆண்டில் 81 சதவீத பட்டு முட்டைகள் இளம்புழுக்களாக விநியோகிக்கப்பட்டுள்ளன.

இளம்புழுவளர்ப்பு மையங்களிலிருந்து இளம்புழுக்களை பெற்று வளர்ப்பதால், பட்டு விவசாயிகளுக்கு புழுவளர்ப்பு காலத்தில் 7 நாட்கள் சேமிக்கப்பட உதவுவதுடன், அதிக பட்டுக்கூடு உற்பத்தி மற்றும் வருமானம் உறுதி செய்யப்படுகிறது. மேலும், பண்ணை அளவில் பட்டுப்புழு வளர்ப்பிற்கான நாட்கள் ஒவ்வொரு புழுவளர்ப்பிலும்

குறைவதால் விவசாயிகள் அவர்களுடைய பண்ணைகளில் அதிக புழுவளர்ப்புகள் மேற்கொள்ள இயலும்.

பட்டு விவசாயிகளுக்கு தேவைப்படும் தரமான இளம்புழுக்களை விநியோகம் செய்திட பிரத்யேகமாக நான்கு அரசு பட்டுப் பண்ணைகள் செயல்பட்டு வருகின்றன.

இவை மட்டுமல்லாது 138 தனியார் இளம்புழு வளர்ப்பு மையங்களும் மாநிலத்தில் செயல்பட்டு வருகின்றன. இந்த இளம்புழு வளர்ப்பு மையங்கள் ஆண்டொன்றிற்கு 88.00 இலட்சம் பட்டு முட்டைகளை இளம்புழுக்களாக வளர்ப்பு செய்யும் திறன் கொண்டவை ஆகும்.

**8.7 பட்டுக்கூடு அங்காடிகள்**

விவசாயிகளால் உற்பத்தி செய்யப்பட்ட பட்டுக் கூடுகளை வர்த்தகம் செய்ய ஏதுவாக துறையின் சார்பில் மாநிலம் முழுவதும் பல்வேறு மாவட்டங்களில் 20 பட்டுக்கூடு அங்காடிகள் அமைக்கப்பட்டுள்ளன. பட்டுக்கூடு வாங்குவோர் (நூற்பாளர்கள்), பட்டுக்கூடு விற்போர் (விவசாயிகள்) அடங்கிய ஒரு குழு பட்டுக்கூடுகளுக்கான நியாயமான விலையினை தினசரி நிர்ணயம் செய்ய உதவுகிறது. வெளிப்படையான பட்டுக்கூடு ஏல நடவடிக்கைகளில் பட்டு நூற்பாளர்கள் பங்கேற்று பட்டுக்கூடுகள் கொள்முதல் செய்யப்பட அங்காடிப் பணியாளர்கள் உதவுகின்றனர்.

விதைக்கூடு வளர்ப்போரிடமிருந்து விதைக்கூடுகள் கொள்முதல் செய்யப்பட்டு, வர்த்தகரீதியிலான பட்டுப்புழு முட்டைகள் உற்பத்தி செய்திட வித்தகங்களுக்கு வழங்கப்படுகின்றன. விதைக்கூடுகள் விற்பனைக்கென மூன்று விதைக்கூடு அங்காடிகள் ஒசூர், தேன்கனிக்கோட்டை மற்றும் கோயம்புத்தூரில் செயல்பட்டு வருகின்றன.

**அரசு பட்டுக்கூடு அங்காடிகள்**

| மாவட்டம் | உதவி இயக்குநர் | வ. எண். | அரசு பட்டுக்கூடு அங்காடியின் பெயர் | |
|---|---|---|---|---|
| கிருஷ்ணகிரி | ஆவலப்பள்ளி | 1 | ஓசூர் | விதை |
| | ஓசூர் | 2 | ஓசூர் | நூற்பு |
| | தேன்கனிக்-கோட்டை | 3 | தேன்கனிக்-கோட்டை | விதை |
| | கிருஷ்ணகிரி | 4 | கிருஷ்ணகிரி | நூற்பு |
| தருமபுரி | பென்னாகரம் | 5 | பென்னாகரம் பாலக்கோடு | நூற்பு |
| | தருமபுரி | 6 | தருமபுரி | நூற்பு |
| சேலம் | சேலம் | 7 | சேலம் | நூற்பு |
| கோயம்புத்தூர் | கோயம்புத்தூர் | 8 | கோயம்புத்தூர் | விதை |
| | | 9 | கோயம்புத்தூர் | நூற்பு |
| ஈரோடு | தாளவாடி | 10 | தாளவாடி | நூற்பு |
| | ஈரோடு | 11 | ஈரோடு | நூற்பு |
| திருப்பூர் | உடுமலைப்-பேட்டை | 12 | உடுமலைப்-பேட்டை | நூற்பு |
| வேலூர் | வாணியம்பாடி | 13 | வாணியம்பாடி | நூற்பு |
| திருவண்ணாமலை | திருவண்ணா-மலை | 14 | திருவண்ணாமலை | நூற்பு |
| திருச்சி | திருச்சி | 15 | திருச்சி | நூற்பு |
| புதுக்கோட்டை | | 16 | புதுக்கோட்டை | நூற்பு |
| திண்டுக்கல் | திண்டுக்கல் | 17 | திண்டுக்கல் | நூற்பு |
| | | 18 | பழனி(இருப்பு) சி.கே.புதூர் | நூற்பு |
| சிவகங்கை | | 19 | சிவகங்கை | நூற்பு |
| தேனி | தேனி | 20 | தேனி | நூற்பு |
| திருநெல்வேலி | தென்காசி | 21 | நன்னகரம் | நூற்பு |
| விருதுநகர் | | 22 | திருவில்லிபுத்தூர் | நூற்பு |
| கன்னியாகுமரி | | 23 | நாகர்கோவில் | நூற்பு |

பட்டுக்கூடுகளின் விற்பனை மதிப்பில் 0.75 சதவீதம் சேவைக் கட்டணமாக விற்போர் மற்றும் வாங்குவோரிடம் இருந்து வசூலிக்கப்படுகிறது.

## 8.8 அரசு பட்டு நூற்பு / முறுக்கேற்றும் அலகுகள்

பட்டுத் தொழிலின் முக்கிய பிரிவான பட்டுக் கூடுகளுக்கு பிந்தைய பிரிவிற்கு துணை புரிவதற்காக, எட்டு அரசு பலமுனை

பட்டுநூற்பு அலகுகள் மற்றும் மூன்று அரசு பட்டு முறுக்கேற்றும் அலகுகள் பட்டு நூற்புத் தொழில் முனைவோருக்கான மாதிரி அலகுகளாக செயல்பட்டு வருகின்றன. அரசு பட்டு நூற்பகங்கள் பட்டுக்கூடு அங்காடி ஏலத்தில் பங்கேற்று பட்டு விவசாயிகளது உற்பத்திப் பொருளான பட்டுக்கூடுகளுக்கு நியாயமான விலை கிடைக்க உதவுகின்றன. இந்த அரசு பட்டு நூற்பு அலகுகள் ஆண்டொன்றிற்கு 24 மெட்ரிக் டன் கச்சாப் பட்டு நூலை உற்பத்தி செய்யும் திறன் கொண்டவை ஆகும்.

**அரசு பட்டு நூற்பு மற்றும் பட்டு முறுக்கேற்றும் அலகுகள்**

| வ. எண் | மாவட்டம் | உதவி இயக்குநர் | அலகின் பெயர் | இடம் |
|---|---|---|---|---|
| 1 | கிருஷ்ணகிரி | ஓசூர் | பட்டு நூற்பு மற்றும் முறுக்கேற்றும் அலகு | ஓசூர் |
| 2 | சேலம் | சேலம் | பட்டு நூற்பு மற்றும் முறுக்கேற்றும் அலகு | சேலம் |
| 3 | ஈரோடு | தாளவாடி | பட்டு நூற்பக அலகு | தாளவாடி |
| 4 | வேலூர் | வாணியம்பாடி | பட்டு நூற்பக அலகு | வாணியம்பாடி |
| 5 | திருநெல்வேலி | தென்காசி | பட்டு நூற்பு மற்றும் முறுக்கேற்றும் அலகு | நன்னகரம் |
| 6 | கன்னியாகுமரி | தென்காசி | பட்டு நூற்பக அலகு | கோணம் |
| 7 | சிவகங்கை | திண்டுக்கல் | பட்டு நூற்பக அலகு | சிவகங்கை |
| 8 | புதுக்கோட்டை | திருச்சி | பட்டு நூற்பக அலகு | புதுக்கோட்டை |

## 8.9 தனியார் பட்டு நூற்பகங்கள்

அரசு பட்டு நூற்பகங்கள் தவிர, 95 காட்டேஜ் பேசின் பட்டுநூற்பு அலகுகள், 33 பலமுனை பட்டுநூற்பு அலகுகள்,

27 சர்க்கா நூற்பு அலகுகள் மற்றும் 3 தானியங்கி பட்டுநூற்பு அலகுகள் ஆகியன தனியார் பட்டுநூற்புத் தொழில் முனைவோரால் நடத்தப்பட்டு வருகின்றன. இந்த தனியார் பட்டு நூற்பு அலகுகள் ஆண்டொன்றிற்கு 479 மெட்ரிக் டன் கச்சாப் பட்டு நூலினை உற்பத்தி செய்யும் திறன் கொண்டவையாகும். தனியார் பட்டு நூற்புப் பிரிவிற்கு இத்துறையால் பல்வகை ஆதரவுகள் வழங்கப்பட்டு வருகிறது. பட்டு விவசாயிகள் நியாயமான விலை பெற்றிடும் வகையில் உள்நாட்டில் உற்பத்தியாகும் பட்டுக் கூடுகள் முழுமையாக பயன்படுத்தப்பட, அதிக எண்ணிக்கையிலான பட்டுநூற்பு அலகுகளை நிறுவிட தொழில் முனைவோர் முன்வரும் வகையில், பல்வேறு வழிகளில் ஊக்குவிக்கப்படுகின்றனர்.

400 முனைகள் கொண்ட மூன்று தானியங்கி பட்டு நூற்பு இயந்திர அலகுகளும், 200 முனைகள் கொண்ட ஒரு தானியங்கி பட்டு நூற்பு அலகும், 25 பலமுனை பட்டு நூற்பு அலகுகளும் 2018-2019ம் ஆண்டில் நிறுவிட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இவற்றுள் இதுவரை 13 பலமுனை நூற்பு அலகுகளில் இயந்திரங்கள் நிறுவும் பணி முடிவுற்றுள்ளது. மீதியுள்ள அலகுகளுக்கு இயந்திரங்கள் கொள்முதல் செய்யும் பணி மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. இந்த பட்டு நூற்பு அலகுகள் ஆண்டொன்றுக்கு 201 மெட்ரிக் டன் கச்சாப்பட்டு நூலினை உற்பத்தி செய்யும் திறன் கொண்டவையாகும். இந்த பட்டு நூற்பு அலகுகள் நிறுவப்பட்ட பின்னர் மாநிலத்தில் பட்டு நூற்பு உற்பத்தித் திறன் 25 சதவிதத்திலிருந்து 35 சதவீதமாக அதிகரிக்கும் என எதிர்பாக்கப்படுகிறது. குறையுள்ள கூடுகளை மாநிலத்திலேயே பயன்படுத்திக் கொள்ளும் வகையில் ஒரு தானியிங்கி டூபியான் பட்டு நூற்பு அலகு நிறுவும் பணியும் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இயந்திரம் கொள்முதல் செய்வது நடவடிக்கையில் உள்ளது.

தமிழகத்தில் தனியார் நூற்புப் பிரிவுக்கு பல்வேறு உதவிகளை துறை வழங்கி வருகிறது. உற்பத்தியாகும் பட்டுக் கூடுகளை முழுமையாக உள்நாட்டிலேயே பயன்படுத்துவதன் மூலம், பட்டு விவசாயிகளின் உழைப்பிற்கேற்ற சிறந்த விலை பெற்றிட ஏதுவாகும்.

### 8.10 தமிழ்நாடு பட்டுவளர்ச்சி பயிற்சி நிலையம், ஓசூர்

பட்டுவளர்ச்சித் துறையின் களப்பணியாளர்களுக்கு புத்தாக்கப் பயிற்சியும் புதிய விவசாயிகள் மற்றும் பட்டு நூற்பாளர்களுக்கு பயிற்சியும் தொடர்ந்து வழங்கப்படுவதற்காக பட்டுவளர்ச்சித் துறை ஓசூரில் அனைத்து உட்கட்டமைப்பு மற்றும் உறைவிட வசதிகளுடன் கூடிய ஒரு பயிற்சி நிலையத்தினை கொண்டுள்ளது.

"பட்டு மலர்" எனும் மாதாந்திர தொழில்நுட்ப இதழ் இப்பயிற்சி நிலையம் மூலம் அச்சிடப்பட்டு இதழ் ஒன்றிற்கு ரூ.2/- என்ற மானிய விலையில் பட்டு விவசாயிகளுக்கு விநியோகிக்கப்படுகிறது. பட்டுவளர்ச்சிக்கு உதவிடும் வகையில் காலத்திற்கேற்ப புதிய தொழில்நுட்பங்கள், மேம்பாடுகள் குறித்து பட்டு விவசாயிகள் அறிந்துகொள்ள இது துணை புரிகிறது.

### 8.11 அரசு அண்ணா பட்டுப் பரிமாற்றகம், காஞ்சிபுரம்

காஞ்சிபுரத்தில் அமைந்துள்ள அரசு அண்ணா பட்டுப் பரிமாற்றகத்தில், மாநிலத்தில் உள்ள பட்டு நூற்பாளர்களால் உற்பத்தி செய்யப்படும் கச்சாப்பட்டு வர்த்தகம் செய்யப்படுகிறது. இப்பட்டுப் பரிமாற்றகம் 1991 ஆம் ஆண்டு முதல் செயல்பட்டு வருகிறது. பட்டு பரிமாற்றகத்திற்கு விற்பனைக்காக எடுத்து வரப்படும் பட்டு காஞ்சிபுரம், மண்டல பட்டு தொழில்நுட்ப ஆராய்ச்சி நிலையத்தால் பரிசோதனை செய்யப்படுகிறது. சேலம் மற்றும் அதன் சுற்று வட்டாரத்திலுள்ள பட்டு நூற்பாளர்கள் மற்றும் முறுக்கேற்றுவோரின் வசதிக்காக அரசு அண்ணா

பட்டுப் பரிமாற்றகத்தின் கிளை சேலத்தில் ஆகஸ்ட் 2018 முதல் செயல்பட்டுவருகிறது. இங்கு விற்பனைக்காக எடுத்துவரப்படும் பட்டு சேலம், பட்டு பரிசோதனை சேவை மையத்தில் பரிசோதனை செய்யப்படுகிறது.

பட்டின் தரம் மற்றும் கச்சாப்பட்டிற்கு நிலவும் சந்தை விலைக்கேற்ப அடிப்படை விலை நிர்ணயம் செய்யப்பட்டு கச்சாப்பட்டு ஏலம் விடப்படுகிறது. பெருநெசவாளர்கள், முறுக்காளர்கள் மற்றும் ''டான்சில்க்'' போன்றோர் வெளிப்படையான ஏலத்தில் பங்கேற்று பட்டினை கொள்முதல் செய்கின்றனர். பட்டுக்கான விற்பனைத் தொகை பட்டுநூற்பாளர்களுக்கு உடனடியாக மின்னணு தீர்வுச் சேவை மூலம் வழங்கப்படுகிறது.

### 8.12 கூட்டுறவுச் சங்கங்கள்

பட்டுவளர்ச்சித் துறையின் கீழ் பட்டு நூற்பாளர்கள் தொழில் கூட்டுறவுச் சங்கம் எனப்படும் 25 தொடக்கக் கூட்டுறவுச் சங்கங்களும், தமிழ்நாடு கூட்டுறவு பட்டு உற்பத்தியாளர் இணையம் (டான்சில்க்) எனப்படும் ஒரு தலைமைக் கூட்டுறவு இணையமும் செயல்படுகின்றன.

### 8.12.1 தொடக்கக் கூட்டுறவுச் சங்கங்கள்

பட்டுத் தொழிலுக்கு தேவைப்படக் கூடிய இடுபொருட்களை உறுப்பினர்களுக்கு வழங்குவது, மூலப்பொருட்களை ஆயத்தப் பொருட்களாக மாற்றுவதற்காக உறுப்பினர்களுக்கு வழங்குவது, ஆயத்தப் பொருட்களை உறுப்பினர்களிடமிருந்து பெற்று அவற்றை நல்ல விலைக்கு விற்பனை செய்வது மூலம் சங்க உறுப்பினர்களுக்கு வேலைவாய்ப்பு அளித்து, பொருளாதார நிலையை மேம்படுத்தச் செய்வது இந்த தொடக்கக் கூட்டுறவுச் சங்கங்களின் செயல்பாடுகளாகும்.

## 8.12.2 தமிழ்நாடு கூட்டுறவு பட்டு உற்பத்தியாளர் இணையம் (டான்சில்க்), காஞ்சிபுரம்

தமிழ்நாடு கூட்டுறவு பட்டு உற்பத்தியாளர் இணையம் (டான்சில்க்), தமிழ்நாட்டிலுள்ள பட்டுக்கூட்டுறவுச் சங்கங்களின் தலைமைக் கூட்டுறவு இணையமாக, 1978-ஆம் ஆண்டில் பதிவு செய்யப்பட்டு காஞ்சிபுரத்தில் இயங்கி வருகிறது. இதன் கிளைகள் ஆரணி, கோயம்புத்தூர், ஈரோடு, காஞ்சிபுரம், கும்பகோணம் மற்றும் சேலம் ஆகிய ஆறு இடங்களில் அமைந்துள்ளன. பட்டு நூற்பாளர்கள், முறுக்காளர்கள் மற்றும் பட்டு நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் இதன் உறுப்பினர்களாக உள்ளனர். அரசு அண்ணா பட்டு பரிமாற்றகத்திலிருந்து இணையம் பெருமளவு பட்டினை கொள்முதல் செய்து, தனது உறுப்பினர்களுக்கு விநியோகித்து வருகிறது.

பட்டு நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள், கதர் மற்றும் கிராமத் தொழில் வாரியம் மற்றும் சர்வோதய சங்கங்கள் போன்ற சான்றளிக்கப்பட்ட நிறுவனங்கள் ''டான்சில்க்'' இணையத்திலிருந்து முறுக்கேற்றிய பட்டினை கொள்முதல் செய்கின்றன. முறுக்கேற்றிய பட்டு நூல் நெசவு செய்யப்பட்டு சேலை, வேட்டி மற்றும் இதர பட்டுப் பொருட்களாக தமிழ்நாடு கைத்தறி நெசவாளர்கள் கூட்டுறவுச் சங்கம் (கோ-ஆப்டெக்ஸ்), கைத்தறி நெசவாளர்கள் கூட்டுறவுச் சங்கங்களின் விற்பனையகங்கள் மற்றும் தனியார் விற்பனை அங்காடிகள் மூலம் விற்பனை செய்யப்படுகின்றன.

## 9. கச்சாப்பட்டு உற்பத்தி

தமிழகத்தில் பட்டு நூல் இருசுழற்சியின (வெண்பட்டு) மற்றும் பலசுழற்சி கலப்பின (மஞ்சள்) பட்டுக்கூடுகளிலிருந்து உற்பத்தி செய்யப்படுகிறது. இருசுழற்சி (வெண்பட்டு) பட்டுக்கூடு ஒன்றின் பட்டு இழை நீளம் 1,000 முதல் 1,200

மீட்டர் ஆகும். எனினும், பலசுழற்சி கலப்பின (மஞ்சள்) பட்டுக்கூடு ஒன்றின் பட்டு இழை நீளம் 700-800 மீட்டர் மட்டுமே. மஞ்சள் பட்டுக்கூட்டின் பட்டு நூலை விட வெண்பட்டுக்கூட்டின் பட்டு நூல் அதிக உறுதியுடனும், நீட்சித் தன்மையுடனும் இருப்பதால் விசைத்தறிகளில் பயன்படுத்தப்படுகிறது.

2018-2019-ஆம் ஆண்டின் மொத்த உற்பத்தியான 2,073 மெட்ரிக் டன் பட்டில், வெண்பட்டு 1,926 மெட்ரிக் டன் ஆகும். வெண்பட்டு உற்பத்தியினைப் பொறுத்தமட்டில் **தேசிய அளவில் தமிழ்நாடு முன்னோடி மாநிலமாக இருந்து வருகிறது.** பட்டு நூலின் சராசரி விலை ரூ.2,814/- என்ற அடிப்படையில் உற்பத்தி செய்யப்பட்ட பட்டு நூலின் மதிப்பு ரூ.542 கோடி ஆகும்.

**10. பயிர்க் காப்பீடு**

பட்டுக்கூடு மகசூலில் இழப்பினை ஈடுகட்டவும், பட்டு வளர்ப்பில் விவசாயிகள் ஈடுபடுவதை ஊக்குவிக்கவும் பயிர் காப்பீடு திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. 2017-2018 ஆம் ஆண்டு வரை பயிர் காப்பீட்டுப் பிரிமியத் தொகையில் 90 சதவீதம் அரசால் இத்திட்டத்தின் கீழ் பட்டு விவசாயிகளுக்கு வழங்கப்பட்டது 2018-2019 ஆம் ஆண்டில் 100 சதவீத பயிர் காப்பீட்டு பிரிமியத் தொகையும் அரசால் பட்டு விவசாயிகளுக்கு வழங்கப்பட்டது. பட்டு விவசாயிகளின் புழுவளர்ப்பு குடில் மற்றும் தனி நபர் விபத்துக்கான காப்பீடு அடங்கிய இத்திட்டத்தில் 21,500 விவசாயிகள் பயனடையும் வகையில், 100 கலப்பின (மஞ்சள்) முட்டைத் தொகுதிகளுக்கு ரூ.165/-ம், 100 வெண்பட்டு முட்டைத் தொகுதிகளுக்கு ரூ.180/-ம், பயிர் காப்பீட்டிற்கான பிரிமியத் தொகையாக செலுத்தப்படுகிறது. பட்டு விவசாயிகளுக்கு, பட்டுப்புழு பாதிக்கப்பட்ட பருவத்தின்

அடிப்படையில் காப்பீட்டு நிறுவனம் மூலம், இழப்பீட்டுத் தொகை வழங்கப்படுகிறது.

## 11. 2018-2019-ஆம் ஆண்டு நடைமுறைப்படுத்தப்பட்ட திட்டங்கள்

### 11.1 மாநிலத் திட்டம்

இந்திய அரசாங்கத்தின், ஜவுளி அமைச்சகம் ‘கிரியா ஊக்கித் திட்டத்தின்’ கீழ் வழங்கி வந்த நிதி உதவியில் குறிப்பிட்ட சில திட்டங்களுக்கான நிதியுதவியை 2015-2016-ஆம் ஆண்டு முதல் நிறுத்திவிட்டது. இருப்பினும், பட்டு விவசாயிகளின் நலனை பாதுகாக்கும் வகையில் முக்கிய திட்டங்களை தொடர்ந்து செயல்படுத்திட மத்திய அரசின் பங்கினையும் சேர்த்து வழங்கிட மாநில அரசு முடிவெடுத்து 2018-2019-ஆம் ஆண்டிற்கு ரூ.18.36 கோடி மாநிலத் திட்டத்தின் கீழ் பின்வருமாறு நிதி ஒப்பளிப்பு செய்துள்ளது.

**மாநிலத் திட்டம் - 2018-2019 – முன்னேற்றம்**

| வ. எண். | திட்டத்தின் பெயர் | அலகு இயல்பு | அலகு மதிப்பீடு (ரூபாய்) | மொத்த தொகை (ரூபாய் இலட்சத்தில்) | நிதி பங்கீடு (ரூபாய் இலட்சத்தில்) | |
|---|---|---|---|---|---|---|
| | | | | | மாநில பங்கு | பயனாளி பங்கு |
| 1 | உயர் விளைச்சல் தரும் மல்பெரி இரகங்கள் நடவு செய்ய ஊக்கத் தொகை வழங்குதல் | 3500 ஏக்கர் | 14,000 | 490.00 | 367.50 (75%) | 122.50 (25%) |
| 2 | மல்பெரித் தோட்டங்களில் சொட்டு நீர்ப்பாசனம் அமைத்தல் | 1000 ஏக்கர் | 33,600 | 250.00 | 250.00 (100%) | - |
| 3 | நவீன புழுவளர்ப்பு தளவாடங்கள்/ பண்ணை உபகரணங்கள் கொள்முதல் செய்து வழங்குதல் | 1000 எண்ணிக்கை | 70,000 | 700.00 | 525.00 (75%) | 175.00 (25%) |
| 4 | தனி பட்டுப்புழு வளர்ப்பு குடில் கட்ட உதவியளித்தல் | | | | | |
| அ | பட்டுப்புழு வளர்ப்பு குடில் கட்ட உதவியளித்தல் நிலை-I | 50 எண்ணிக்கை | 275,000 | 137.50 | 41.25 (30%) | 96.25 (70%) |

| வ. எண். | திட்டத்தின் பெயர் | அலகு இயல்பு | அலகு மதிப்பீடு (ரூபாய்) | மொத்த தொகை (ரூபாய் இலட்சத்தில்) | நிதி பங்கீடு (ரூபாய் இலட்சத்தில்) | |
|---|---|---|---|---|---|---|
| | | | | | மாநில பங்கு | பயனாளி பங்கு |
| ஆ | பட்டுப்புழு வளர்ப்பு குடில் கட்ட உதவியளித்தல் நிலை-II | 550 எண்ணிக்கை | 175,000 | 962.50 | 481.25 (50%) | 481.25 (50%) |
| இ | பட்டுப்புழு வளர்ப்பு குடில் கட்ட உதவியளித்தல் நிலை-III | 200 எண்ணிக்கை | 90,000 | 180.00 | 126.00 (70%) | 54.00 (30%) |
| 5 | சிறந்த பட்டு விவசாயிகளுக்கு பரிசுத் தொகை வழங்குதல் | 96 எண்ணிக்கை | - | 20.85 | 20.85 (100%) | - |
| 6 | அரசு விதைப் பண்ணைகளை வலுப்படுத்த உதவியளித்தல். | 5 எண்ணிக்கை | 500,000 | 25.00 | 25.00 (100%) | |
| | | | மொத்தம் | 2765.85 | 1836.85 | 929.00 |

## 11.2 பரிசுகளும் வெகுமதிகளும்

சிறந்த பட்டு விவசாயிகளுக்கு ரொக்கப் பரிசுகள் வழங்கிட 2018-2019-ஆம் ஆண்டில் அரசால் ரூ.20.85 இலட்சம் நிதி ஒப்பளிப்பு வழங்கப்பட்டது. மாவட்ட அளவில் சென்னை நீங்கலாக, 31 மாவட்டங்களில் தலா மூன்று சிறந்த பட்டு விவசாயிகளுக்கும், மாநில அளவில் மூன்று சிறந்த பட்டு விவசாயிகளுக்கும் ரொக்கப் பரிசுகள் வழங்கிட தேர்வு செய்யப்பட்டு பரிசுகள் வழங்கப்பட்டது.

மாநில அளவில் முதலாவது, இரண்டாவது மற்றும் மூன்றாவது ரொக்கப் பரிசுகளாக முறையே ரூ.1,00,000/-, ரூ.75,000/- மற்றும் ரூ.50,000/-ம் 2019 பிப்ரவரி 19 அன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் வழங்கப்பட்டது.

## 11.3 பட்டுவளர்ச்சி மேம்பாடு மற்றும் விலை உறுதிப்படுத்தும் நிதி

2018-2019-ஆம் ஆண்டில் பட்டு வளர்ச்சி மேம்பாடு மற்றும் விலை உறுதிப்படுத்தும் நிதியின் கீழ் ரூ.205.440 இலட்சம், துறையின் வளர்ச்சிப் பணிகளுக்காக ஒப்பளிப்பு செய்யப்பட்டது. திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டதன் முன்னேற்ற விவரம் பின்வருமாறு:

| வ. எண் | பணிகள் | மொத்த ஒப்பளிப்பு (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|
| 1 | வெண்பட்டு நூல் உற்பத்திக்கு ஊக்கத்தொகை வழங்குதல் (பலமுனை பட்டு நூற்பக பட்டு நூல்) | 18.750 |
| 2 | 'பட்டு மலர்' மாத இதழ் 2018-2019 -ஆம் ஆண்டுக்கு அச்சிட்டு வழங்குதல் | 14.760 |
| 3 | பயிர் காப்பீடு உதவி (20 இலட்சம் முட்டைத் தொகுதிகள்) | 53.740 |
| 4 | கைப்பேசி வாடகை கட்டணத்திற்கு ஒதுக்கீடு (89 கைப்பேசிகள்) | 1.370 |
| 5 | கணினி, அச்சு இயந்திரம் மற்றும் ஸ்கேனர் கொள்முதல் செய்தல் | 6.650 |
| 6 | மின்ஆக்கிகள் கொள்முதல் செய்தல் (10 கிலோவாட்-3, 62.5 கிலோவாட் -1) | 21.250 |
| 7 | குளிர் பதன நிலையம், கிருஷ்ணகிரி மற்றும் ஆவலப்பள்ளிக்கு இயந்திரங்கள் கொள்முதல் செய்தல். | 4.690 |
| 8 | ஒளி நகல் இயந்திரங்கள் கொள்முதல் செய்தல் | 1.800 |
| 9 | அரசு கட்டடங்கள் புனரமைத்தல் (கட்டடப் பணிகள்) | |
| i) | தொழில் நுட்ப சேவை மைய கட்டடங்கள் | 19.800 |
| ii) | அரசு வித்தக கட்டடங்கள் | 15.000 |
| iii) | அரசு பட்டுக்கூடு அங்காடி கட்டடம் | 9.750 |
| iv) | அரசு விதைப் பண்ணைகள் கட்டடங்கள் | 5.500 |

| வ. எண் | பணிகள் | மொத்த ஒப்பளிப்பு (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|
| v) | அரசு பட்டுப் பண்ணை கட்டடங்கள் | 11.780 |
| vi | உதவி இயக்குநர் அலுவலகக் கட்டடம் | 18.100 |
| vii) | உப்பிலியாபுரம் செயல்விளக்க மற்றும் பயிற்சி மையத்தில் ஆழ்துளைக் கிணறு தோண்டுதல் | 2.500 |
| | **மொத்தம்** | **205.440** |

## 11.4 மத்திய பகுதித் திட்டம், 'சில்க் சமக்ரா'

கிரியா ஊக்கித் திட்ட மறு சீரமைப்புக்குப் பின், மத்திய பட்டு வாரியம், ஒரு சில உட்கூறு இனங்களுக்கு மட்டும் நிதியுதவி அங்கீகரித்து 2018-2019-ஆம் ஆண்டிற்கு கீழ்கண்டுள்ளவாறு ரூ. 972.524 இலட்சம் மத்திய பகுதி திட்டமான 'சில்க் சமக்ரா' திட்டத்தின் கீழ் ஒப்பளிப்பு செய்துள்ளது.

**மத்திய பகுதித் திட்டம் - 2018-2019**

| வ. எண் | திட்டத்தின் பெயர் / உட்கூறு | இயல்பு (எண் ணிக்கை / ஏக்கர்) | அலகு மதிப்பீடு (ரூபாய் இலட்சத் தில்) | பங்கு விகிதம் (ரூபாய் இலட்சத்தில்) | | | மொத்தம் (ரூபாய் இலட்சத் தில்) |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | மத்திய பட்டு வாரியம் | மாநில அரசு | பயனாளி பங்கு | |
| I | **தாழ்த்தப்பட்டவர்களுக்கான துணைத் திட்டம்** | | | | | | |
| 1 | கிசான் மல்பெரி நாற்றுகள் உற்பத்திக்கு உதவியளித்தல் | 11.00 | 1.500 | 10.73 | 4.13 | 1.65 | 16.50 |
| 2 | உயர் விளைச்சல் தரும் மல்பெரி இரக சாகுபடிக்கு உதவியளித்தல் | 100.00 | 0.500 | 32.50 | 12.50 | 5.00 | 50.00 |
| 3 | சொட்டு நீர்ப்பாசனம் மற்றும் நீர்சேமிக்கும் தொழில்நுட்ப பயன்பாட்டிற்கு உதவியளித்தல் | 10.00 | 0.336 | 2.18 | 1.18 | 0.00 | 3.36 |

| வ. எண் | திட்டத்தின் பெயர் / உட்கூறு | இயல்பு (எண்ணிக்கை / ஏக்கர்) | அலகு மதிப்பீடு (ரூபாய் இலட்சத்தில்) | பங்கு விகிதம் (ரூபாய் இலட்சத்தில்) | | | மொத்தம் (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | மத்திய பட்டு வாரியம் | மாநில அரசு | பயனாளி பங்கு | |
| 4 | நவீன புழுவளர்ப்பு தளவாடங்கள் மற்றும் பண்ணை உபகரணங்கள் வழுங்குதல் | 10 | 0.750 | 4.88 | 1.88 | 0.75 | 7.50 |
| 5 | தனி பட்டுப்புழு வளர்ப்பு மனை கட்ட உதவியளித்தல் (600 சதுர அடி) (ஒரு அறு வடைக்கு 100 முட்டைத் தொகுதிகள் வளர்ப்பு) | 10 | 2.500 | 16.25 | 6.25 | 2.50 | 25.00 |
| 6 | பயிற்சி – முற்போக்கு விவசாயிகளது தோட்டத்திற்கு சுற்றுலா அழைத்து செல்லுதல் | 50 | 0.070 | 3.50 | 0.00 | 0.00 | 3.50 |
| 7 | தகவல் கல்வி மற்றும் தகவல் தொடர்பு (பரப்புரை) | ரொக்கமாக | 2.000 | 2.00 | 0.00 | 0.00 | 2.00 |
| 8 | தகவல் கல்வி மற்றும் தகவல் தொடர்பு (பரப்புரை) பட்டு வளர்ச்சிக்கான கைப்பேசி செயலி தயாரித்தல் | ரொக்கமாக | 2.000 | 2.00 | 0.00 | 0.00 | 2.00 |
| | **கூடுதல்** | | | **74.03** | **25.93** | **9.90** | **109.86** |

| வ. எண் | திட்டத்தின் பெயர் / உட்கூறு | இயல்பு (எண் ணிக்கை / ஏக்கர்) | அலகு மதிப்பீடு (ரூபாய் இலட்சத் தில்) | பங்கு விகிதம் (ரூபாய் இலட்சத்தில்) | | | மொத்தம் (ரூபாய் இலட்சத் தில்) |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | மத்திய பட்டு வாரியம் | மாநில அரசு | பயனாளி பங்கு | |
| II | **பழங்குடியினருக்கான துணைத் திட்டம்** | | | | | | |
| 9 | ஈரி பட்டுக்கான ஆமணக்கு செடி நடவு | 25.00 | 0.170 | 2.76 | 1.06 | 0.43 | 4.25 |
| 10 | ஈரி பட்டுப் புழுவளப்பு குடில் (500 சதுர அடி) | 25 | 0.700 | 11.38 | 4.38 | 1.75 | 17.50 |
| 11 | ஈரி பட்டு வளர்ப்பு தளவாடங்கள் | 25 | 0.290 | 4.71 | 1.81 | 0.73 | 7.25 |
| 12 | மருந்துப் பொருட்கள் கொள்முதல் | 25 | 0.030 | 0.48 | 0.18 | 0.09 | 0.75 |
| 13 | பழங்குடியின ருக்கான ஈரி புழுவளர்ப்பு பயிற்சி | 25 | 0.070 | 1.75 | 0.00 | 0.00 | 1.75 |
| 14 | துறை பணியாளர்-களுக்கான பயிற்சி | 20 | 0.100 | 2.00 | 0.00 | 0.00 | 2.00 |
| 15 | தகவல், கல்வி, பரப்புரை | ரொக்க மாக | 1.680 | 1.68 | 0.00 | 0.00 | 1.68 |
| | **கூடுதல்** | | | **26.76** | **7.43** | **2.99** | **35.18** |
| III | பொது | | | | | | |
| 16 | கூடுதல் குளிர் பதன நிலையம் கோவையில் நிறுவுதல் | 1 | 150.000 | 0.00 | 150.00 | 0.00 | 150.00 |
| 17 | தானியங்கி பட்டு நூற்பு அலகு நிறுவுதல் (400 முனை) | 3 | 141.018 | 211.53 | 105.76 | 105.76 | 423.05 |

| வ. எண் | திட்டத்தின் பெயர் / உட்கூறு | இயல்பு (எண்ணிக்கை / ஏக்கர்) | அலகு மதிப்பீடு (ரூபாய் இலட்சத்தில்) | பங்கு விகிதம் (ரூபாய் இலட்சத்தில்) | | | மொத்தம் (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | மத்திய பட்டு வாரியம் | மாநில அரசு | பயனாளி பங்கு | |
| 18 | தானியங்கி டூபியான் பட்டு நூற்பு அலகு நிறுவுதல் (200 முனை) | 1 | 79.830 | 39.92 | 19.96 | 19.96 | 79.83 |
| 19 | தானியங்கி பட்டு நூற்பு அலகு நிறுவுதல் (142 முனை) | 1 | 45.760 | 22.88 | 11.44 | 11.44 | 45.76 |
| 20 | பல்முனை நூற்பு இயந்திர அலகு நிறுவுதல் (10 பேசின்) | 25 | 17.090 | 213.63 | 106.81 | 106.81 | 427.25 |
| 21 | பட்டுநூல் முறுக்கேற்றும் அலகுநிறுவுதல் (தனியார்) | 2 | 10.040 | 10.04 | 5.02 | 5.02 | 20.08 |
| 22 | பட்டுநூல் முறுக்கேற்றும் அலகுநிறுவுதல் (அரசு) | 1 | 10.040 | 5.02 | 5.02 | 0.00 | 10.04 |
| 23 | சொட்டுநீர் பாசனம் அமைத்திட உதவியளித்தல். (2017-2018 நிலுவை) | | 0.336 | 58.92 | 0.00 | 0.00 | 58.92 |
| 24 | பயனாளி -களுக்கு திறன் மேம்பாட்டு பயிற்சி வழங்குதல் | 2000 | 0.070 | 140.00 | 0.00 | 0.00 | 140.00 |
| 25 | சொட்டுநீர் பாசனம் அமைத்திட உதவியளித்தல் | 600.00 | 0.336 | 100.80 | 100.80 | 0.00 | 201.60 |
| 26 | மின்ஆக்கிகள் குளிர்பதன நிலையத்திற்கு கொள்முதல் செய்தல் | 1 | 10.000 | 5.00 | 5.00 | 0.00 | 10.00 |

| வ. எண் | திட்டத்தின் பெயர் / உட்கூறு | இயல்பு (எண்ணிக்கை / ஏக்கர்) | அலகு மதிப்பீடு (ரூபாய் இலட்சத்தில்) | பங்கு விகிதம் (ரூபாய் இலட்சத்தில்) | | | மொத்தம் (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | மத்திய பட்டு வாரியம் | மாநில அரசு | பயனாளி பங்கு | |
| 27 | அரசு வித்தகங்களை மேம்படுத்த சுழல்நிதி அளித்தல் | 2 | 18.000 | 18.00 | 18.00 | 0.000 | 36.00 |
| 28 | பெரிய அளவு இளம்புழு வளர்ப்பு மையம் நிறுவிட உதவியளித்தல் | 8 | 12.000 | 48.00 | 24.00 | 24.00 | 96.00 |
| | **கூடுதல்** | | | **873.73** | **551.81** | **272.99** | **1698.53** |
| | **நிகர மொத்தம்** | | | **972.52** | **585.17** | **285.88** | **1843.57** |

## 12. பட்டுச் சுற்றுலா

ஏற்காடு அரசு பட்டுப் பண்ணையில் பட்டுச் சுற்றுலாத்தலம் அமைத்திடதமிழ்நாடு புதுமைத் திட்டத்தின் கீழ் 2015-2016-ஆம் ஆண்டில் ரூ.250.00 இலட்சம் மாநில அரசு நிதி ஒதுக்கீடு செய்தது. சுற்றுலா மேம்பாடு மற்றும் சுற்றுலாப் பயணிகளிடையே பட்டுத் தொழில் குறித்த விழிப்புணர்வு ஏற்படுத்துதல் என்ற இரட்டை குறிக்கோள்களுடன் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டுள்ளது. குழந்தைகளிடையே அறிவியல் அறிவைப் பயிற்றுவிக்கும் குறிக்கோளினையும் இத்திட்டம் உள்ளடக்கியுள்ளது.

இப்பட்டுச் சுற்றுலா மையத்திற்கு ‘பட்டு உலகம்’ என பெயரிடப்பட்டுள்ளது. இம்மையத்தைப் பார்வையிட மே 2018 முதல் சுற்றுலாப் பயணிகள் அனுமதிக்கப்பட்டு வருகின்றனர்.

ஏற்காட்டில் தோற்றுவிக்கப்பட்டுள்ள இப்பட்டுச் சுற்றுலா மையம் சுற்றுலா பயணிகளுக்கு பட்டுத் தொழில் குறித்த

விழிப்புணர்வு ஏற்படுத்தவும், ஒரு நல்ல பொழுதுபோக்கு இடமாகவும் பயன்படுகிறது.

இப்பட்டுச் சுற்றுலா மையம் பட்டுத் தொழில் மேற்கொள்ள விவசாயிகளுக்கும் பண்ணை சாரா செயல்பாடுகளான பட்டு நூற்பு, பட்டு முறுக்கேற்றுதல் மற்றும் பட்டு நெசவு போன்ற தொழில்களில் ஈடுபட இளைய தலைமுறையினருக்கும் போதுமான தொழில்நுட்ப தகவல்களையும் பரப்புகிறது. இம்மையத்தில் நிறுவப்பட்டுள்ள அறிவியல் உபகரணங்கள் மாணவ சமுதாயத்தால் வெகுவாக கண்டு மகிழப்படுகிறது. மாணவர்கள் மத்தியில் பட்டு தொழில் குறித்த அறிவை கற்பிப்பதால் இம்மையம் அருகில் உள்ள பள்ளிகள் மற்றும் கல்லூரிகளுக்கு ஒரு கவரும் இடமாக உள்ளது.

## 13. பட்டுவளர்ச்சித் துறையின் சாதனைகள் மற்றும் விருதுகள்

### 13.1 சாதனைகள்


கீழ்க்கண்ட இனங்களில் சாதனை கடந்த ஆண்டுகளை விட மேம்பட்டு **தேசிய அளவில் தமிழ்நாடு தொடர்ந்து முன்னிலை வகித்து வருகிறது.**

- 2018-2019-ஆம் ஆண்டில் 100 முட்டைத் தொகுதிகளுக்கான தேசிய சராசரி பட்டுக்கூடு உற்பத்தித் திறன் 60.240 கிலோகிராமாக உள்ள நிலையில், **மாநில சராசரி பட்டுக்கூடு உற்பத்தித் திறன் 78.000 கிலோகிராம்** ஆக உள்ளது.

- 2018-2019-ஆம் ஆண்டில் தமிழ்நாட்டின் **மொத்த பட்டு உற்பத்தியில், வெண்பட்டு உற்பத்தி 93 சதவீதம்** ஆகும். தமிழ்நாட்டில் 2018-2019-ஆம் ஆண்டில் 1,926 மெட்ரிக் டன் வெண்பட்டு உற்பத்தி செய்யப்பட்டுள்ளது.

2017-2018-ஆம் ஆண்டின் வெண்பட்டு உற்பத்தி சதவீதமான 89 சதவீதத்தை விட இது கூடுதலாகும்.

- வெண்பட்டுக்கூடு உற்பத்தியினை அதிகரித்திட 28 கிராமங்களில் தொகுப்பு அபிவிருத்தி திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. 2018-2019 ஆம் ஆண்டில், **தொகுப்பு அபிவிருத்தி திட்டப்பகுதிகளில்** 100 நோயற்ற முட்டைத் தொகுதிகளுக்கு **பட்டுக்கூடு உற்பத்தித் திறன் 80.000 கிலோ கிராம்** ஆகம்.




**2018-2019-ஆம் ஆண்டில் 100 முட்டைத் தொகுதிகளுக்கு சராசரி பட்டுக்கூடு அறுவடை**

## 13.2 சில்க் சமக்ரா திட்டத்தை சிறந்த முறையில் செயல்படுத்திய மாநிலம் - விருது

இந்திய அரசின் ஜவுளித்துறையை சேர்ந்த மத்திய பட்டு வாரியம், குறிப்பிட்ட இனங்களில் சிறந்த சாதனையாளர்களை கௌரவிக்கும் வகையில் 'சர்ஜிங் சில்க்' என்ற மாபெரும் பட்டு

நிகழ்ச்சியினை விஞ்ஞான் பவன், புதுடெல்லியில் 09.02.2019 அன்று நடத்தியது.

இந்நிகழ்வில், இந்தியாவின் ஒட்டுமொத்த பட்டுத்தொழில் வளர்ச்சிக்கு தமிழ்நாடு ஆற்றியுள்ள பங்கினை அங்கீகரிக்கும் வகையில், சில்க் சமக்ரா திட்டத்தை சிறப்பாக செயலாக்கியதை பாராட்டும் விதமாகவும் “சில்க் சமக்ரா திட்டத்தை சிறந்த முறையில் செயல்படுத்திய மாநிலம்” என்று தமிழ்நாடு கௌரவிக்கப்பட்டது.

## 14. தமிழ்நாட்டில் பட்டுத் தொழில் அபிவிருத்திக்காக மேற்கொள்ளப்படவுள்ள நடவடிக்கைகள்

### 14.1 பட்டுக்கூடுகளுக்கு முந்தைய நிலை

- சிறு, குறு விவசாயிகளுக்கு உதவியளித்தல்.
- தீவிர மல்பெரி சாகுபடியினை ஊக்குவித்தல்.
- பட்டு வளர்ச்சியில் விரிவாக்க அணுகுமுறை.
- அத்தியாவசிய உட்கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்துதல்.
- திறன்மேம்பாடு மற்றும் பயிற்சிக்கு முக்கியத்துவம் அளித்தல்.
- சந்தை நுண்ணறிவு, ஒருங்கிணைப்பு மற்றும் வளர்ச்சி அளித்தல்.
- பட்டுத் தொழில் விரிவாக்க அமைப்புக்களை வலுப்படுத்துதல்.
- அங்கக வேளாண்மைக்கு முக்கியத்துவம் அளித்தல்.
- பிற தொடர்புடைய துறைகளுடன் ஒருங்கிணைந்து செயல்படுதல்.

- நோயற்ற முட்டைத் தொகுதிகள் உற்பத்தி மற்றும் விநியோகம்.
- வருவாயினை பெருக்குவதற்காக பட்டு உபபொருட்களை (உலர்ந்த கூட்டுப்புழு) கோழி மற்றும் மீன் தீவனமாக பயன்படுத்துவதை ஊக்குவித்தல்.
- வித்தகங்கள் மற்றும் பயிற்சி நிலையத்திற்கு தரச்சான்று பெறுதல்.
- தொழில்நுட்ப மேம்பாடு.
- பொருளாதார ரீதியில் பின்தங்கியுள்ள மக்களுக்கு, குறிப்பாக மலைவாழ் மக்களுக்கு, வேலைவாய்ப்பினை ஏற்படுத்தித் தரவும் ‘அஹிம்சா பட்டினை’ உற்பத்தி செய்யவும், மாநிலத்தில் ஈரி பட்டுப்புழு வளர்ப்பை ஊக்கப்படுத்துதல்.

### 14.2 பட்டுக்கூடுகளுக்கு பிந்தைய நிலை

- இறக்குமதி பட்டுக்கு ஈடான தரம் வாய்ந்த வெண்பட்டு உற்பத்திக்கு முக்கியத்துவம் அளித்தல்.
- அதிக அளவில் தானியங்கி பட்டு நூற்பு அலகுகளையும் பலமுனை பட்டு நூற்பு அலகுகளையும் ஏற்படுத்துதல்.
- கூட்டுப்புழுக்களை பதப்படுத்தும் இரண்டு அலகுகளை தோற்றுவித்தல்.
- தரம், உற்பத்தித் திறன், உற்பத்திச் செலவினம் குறைப்பு மற்றும் பட்டுக்கழிவு மேலாண்மை ஆகியவற்றில் தொழில்முனைவோர்க்கு திறன் பயிற்சி அளித்தல். அதிக அளவில் பட்டுநூற்பு தொழிலாளர்களுக்கும், தொழில் முனைவோர்களுக்கும் நூற்பு பயிற்சி அளித்தல்.

## 15. 2019-2020-ஆம் ஆண்டிற்கான நிதி ஒதுக்கீடு

பட்டுவளர்ச்சித் துறைக்கான 2019-2020-ஆம் ஆண்டு வரவு-செலவு திட்டத்தில், திட்டம் மற்றும் திட்டம் சாரா பணிகளுக்கென கீழ்க்கண்டுள்ளவாறு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

| வ. எண் | | திட்டத்தின் பெயர் | | 2019-2020 ஆண்டுக்கான நிதி ஒதுக்கீடு (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|---|---|
| 1 | அ | **திட்டப் பணிகள்** | | |
| | | **1. பட்டுவளர்ச்சி மேம்பாடு மற்றும் விலை உறுதிப்படுத்தும் நிதியின் கீழ் வளர்ச்சித் திட்டங்கள்** | **100.00** | 290.00 |
| | | **2. பட்டுவளர்ச்சி மேம்பாடு மற்றும் விலை உறுதிப்படுத்தும் நிதி** (கணக்குகள் இடையே மாற்றம்) | **190.00** | |
| | ஆ | **புதிய திட்டங்கள்** | | 1,126.86 |
| | இ | **மேற்குத் தொடர்ச்சி மலைகள் அபிவிருத்தித் திட்டம்** | | 0.01 |
| | ஈ | **மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டம்** | | 0.01 |
| | | **திட்டப் பணிகள் மொத்தம்** | | 1,416.88 |
| 2 | | **திட்டம் சாரா பணிகள்** அரசு அலகுகளைப் பராமரித்தல், ஊதியம் மற்றும் கூலித்தொகைகள் முதலியன | | 5,996.75 |
| | | **ஒட்டு மொத்தம் (திட்டப் பணிகள் + திட்டம் சாரா பணிகள்)** | | 7,413.63 |

# தமிழ்நாடு கைத்திறத் தொழில்கள் வளர்ச்சிக் கழகம்

தமிழ்நாடு கைத்திறத் தொழில்கள் வளர்ச்சிக் கழகம் பொதுத் துறை நிறுவனமாக 26.07.1973 அன்று தொடங்கப்பட்டது. "பூம்புகார்" என அனைவராலும் அறியப்படும் இந்நிறுவனம் 01.08.1973 அன்று முதல் வணிக நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. தமிழக கைவினைஞர்களின் திறமை மற்றும் கடுமையான உழைப்பினால் உருவாக்கப்பட்ட பித்தளை, பஞ்சலோகம், மரம், கல் போன்றவற்றால் தயாரிக்கப்பட்ட தனித்தன்மை வாய்ந்த கைவினைப் பொருட்களை சந்தையில் நுகர்வோருக்கு வெளிப்படுத்துவதை குறிக்கோளாக கொண்டு தமிழ்நாடு கைத்திறத் தொழில்கள் வளர்ச்சிக் கழகம் முனைப்புடன் செயல்பட்டு வருகிறது. இக்கழகத்தின் முக்கிய நோக்கங்கள் பின் வருமாறு :

- தமிழ்நாடு கைவினைஞர்களின் வாழ்வாதாரம் மற்றும் வாழ்கைத் தரத்தை உயர்த்துதல்
- கைவினைஞர்களின் திறமையை மேம்படுத்த உரிய பயிற்சிகள் அளித்தல்
- கைவினைஞர்களின் உற்பத்தித்திறனை மேம்படுத்துதல்
- உற்பத்தி செய்யப்படும் கைவினைப் பொருட்களின் தரத்தை உயர்த்துதல்
- கைவினைப் பொருட்கள் உற்பத்தியில் ஏற்படும் பணிப்பளுவை குறைத்தல்

- கைத்திறத் தொழிலில் நேரிடும் இடர்பாடுகளைக் குறைத்தல் / நீக்குதல்
- வடிவமைப்புகளில் புதுமையை ஊக்குவித்தல்
- கைவினைஞர்களுக்கு சமூக பொருளாதார பாதுகாப்பு அளித்தல்
- மாநிலத்தில் உற்பத்தி செய்யப்படும் கைவினைப் பொருட்களின் விவரங்களை ஆவணமாக்குதல் மற்றும் பதிவு செய்தல்
- கைவினைஞர்களுக்கு சந்தை வாய்ப்பினை ஏற்படுத்துதல்
- கைத்திறத் தொழிலில் கைவினைஞர்களின் கலைப்படைப்பு மற்றும் அர்ப்பணிப்பை அங்கீகரித்தல்

**2. விற்பனை நிலையங்கள்**

இந்நிறுவனம் சென்னை, சென்னை விமான நிலையம், வண்டலூர் உயிரியல் பூங்கா, எழும்பூர் அருங்காட்சியகம், கோயம்புத்தூர், ஈரோடு, சேலம், தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி, மதுரை, திருநெல்வேலி, கன்னியாகுமரி, சுவாமிமலை, மாமல்லபுரம், புதுதில்லி மற்றும் கொல்கத்தா ஆகிய இடங்களில் அமைந்துள்ள தனது 16 விற்பனை நிலையங்கள் மூலம் கைவினைப்பொருட்களை விற்பனை செய்து ஆயிரத்திற்கும் மேற்பட்ட கைவினைஞர்களுக்கு சந்தை வாய்ப்பை ஏற்படுத்தித் தருகிறது.

**3. கண்காட்சிகள்**

தமிழ்நாடு கைத்திறத் தொழில்கள் வளர்ச்சிக் கழகம் நாடெங்கும் உள்ள முக்கிய நகரங்களிலும், தமிழகத்திலுள்ள நகரங்களிலும் விற்பனையுடன் கூடிய கைத்திறக் கண்காட்சிகளை நடத்தி வருகிறது. காந்தி சில்ப் பஜார் மற்றும்

கிராப்ட் பஜார் போன்றவற்றை இந்நிறுவனம் நடத்தும் பொழுது இவற்றில் பங்குகொள்ள, நாடெங்கிலுமுள்ள கைவினைஞர்கள் அழைக்கப்படுவர். பூம்புகார் நிறுவனம் மலேசியாவில் 27.10.2018 முதல் 05.11.2018 முடிய கைவினைப்பொருட்களை வர்த்தகம் செய்யும் பொருட்டு ஒரு கண்காட்சியினை சிறப்பாக நடத்தியது.

**2018-2019 ஆம் ஆண்டில் கண்காட்சி மூலம் பெறப்பட்ட விற்பனை விவரம்**

| விற்பனை நிலையங்கள் மற்றும் வெளியூர் கண்காட்சிகள் | மொத்தம் நடத்தப்பட்ட கண்காட்சிகள் | மொத்த விற்பனை (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|
| விற்பனை நிலைய கண்காட்சிகள் | 83 | 374.57 |
| வெளியூர் கண்காட்சிகள் | 18 | 162.65 |
| **மொத்தம்** | **101** | **537.22** |

## 4. உற்பத்தி நிலையங்கள்

பூம்புகார் நிறுவனம் நாச்சியார்கோவில் (பாரம்பரிய பித்தளை விளக்குகள்), மதுரை (பித்தளை விளக்குகள் மற்றும் பித்தளை கலைப்பொருட்கள்), வாகைகுளம் (பித்தளை மலபார் விளக்குகள் மற்றும் பிற விளக்குகள்), சுவாமிமலை (பஞ்சலோக சிற்பங்கள்), தஞ்சாவூர் (தஞ்சாவூர் கலைத்தட்டுகள்), கள்ளக்குறிச்சி (மரச்சிற்பங்கள்) மற்றும் மாமல்லபுரம் (கற்சிற்பங்கள்) ஆகிய 7 இடங்களில் சொந்தமாக உற்பத்தி நிலையங்களை நடத்திவருகிறது. இந்த உற்பத்தி நிலையங்களில் நிரந்தர கைவினைஞர்களும், துண்டு கூலி பணியாளர்கள் (கைவினைஞர்கள்) பணியாற்றி வருகின்றனர்.

கடந்த ஆண்டில் (2018-2019) மேலே குறிப்பிட்டுள்ள உற்பத்தி நிலையங்களின் மொத்த உற்பத்தி மதிப்பு ரூ.312.91 இலட்சம் ஆகும். இந்த ஆண்டு (2019-2020) ரூ.550.00 இலட்சம் உற்பத்தி இலக்காக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

## 5. விற்பனை அளவு

இந்நிறுவனம் தொடங்கப்பட்டதிலிருந்து தன்னுடைய வருடாந்திர விற்பனையில் மாபெரும் வளர்ச்சியை அடைந்து வருகிறது. 2018-2019 ஆம் ஆண்டில் விற்பனை மதிப்பு ரூ.4,135.08 இலட்சம் அடைந்தது. இது சென்ற ஆண்டைவிட ரூ.605.08 இலட்சங்கள் அதிகமாகும். இதுவரையில் பதிவாகியுள்ள விற்பனையில் இதுவே அதிகபட்சமாகும். பூம்புகார் நிறுவனம் 2019-2020 ஆம் ஆண்டிற்கான விற்பனை இலக்கினை ரூ.5,000.00 இலட்சமாக நிர்ணயம் செய்துள்ளது. கடந்த ஐந்து ஆண்டுகளில் இந்நிறுவனத்தின் விற்பனை விவரங்கள் பின்வருமாறு :

| வருடம் | விற்பனை (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|
| 2014 - 2015 | 3369.00 |
| 2015 - 2016 | 3450.00 |
| 2016 - 2017 | 4036.00 |
| 2017 - 2018 | 3530.00 |
| 2018 - 2019 | 4135.08 (தணிக்கைக்கு முன்) |

## 6. விலைக்கொள்கை

பூம்புகார் விற்பனை நிலையங்களில் விற்பனையாகும் கைவினைப் பொருட்களுக்கு தனித்துவமான விலைக்கொள்கை பின்பற்றப்படுகிறது. பொருட்களின் தரம் மற்றும் பணித்திறனைச் சமரசம் செய்யாமல், தனியார் மற்றும்

மொத்த சந்தைக்கு நிகராக இந்த விலை நிர்ணயிக்கப்படுகிறது. இந்த திருத்தப்பட்ட விலைக்கொள்கை மூலம் விரைவாக விற்பனையாகும் பொருட்களுக்கு குறைந்த பட்ச விலையில் விற்பனை நிலையங்களிலும் மற்றும் இணையதளத்தின் மூலமாகவும் தரமான கைவினைப்பொருட்கள் விற்பனை செய்யப்படும். இது பூம்புகார் நிறுவனத்தின் மீது வாடிக்கையாளர்களுக்கு மேலும் அதிக நம்பிக்கையை உருவாக்கும்.

### 7. புதிய நிர்வாகம், சந்தை மற்றும் உற்பத்தி முயற்சிகள்

பூம்புகார் சந்தை மற்றும் நுகர்வோர் தேவையினை மேம்படுத்த மேலும் குறைந்தபட்ச விலையில் உற்பத்திச் செய்யும் திறனை அதிகரிக்க தகவல் மற்றும் தொடர்பு தொழில்நுட்பத்தை பயன்படுத்தி நிறுவனத்தின் நிர்வாகம், சந்தைப்படுத்துதல், வடிவமைப்பு மற்றும் உற்பத்தி ஆகிய முக்கிய நடவடிக்கைகளை மாற்றியமைத்து புதிய தொழில்நுட்ப முறையில் செயல்பட்டு வருகிறது. இது பல்வேறு வகையான பங்குதாரர்களை மையப்படுத்தி கீழ்க்கண்ட வளர்ச்சிக் குறிக்கோள்களை கொண்டு செயல்படுத்தப்பட்டுள்ளது.

**கைவினைஞர்கள்:** கைவினைஞர்கள் மற்றும் கைவினைஞர்களின் திறமைக்கான மின் தொகுப்பை உருவாக்கியதன் மூலம் அவர்களின் விவரங்கள், பணித்திறன் மற்றும் படைப்புகள் ஆகியவற்றை பார்த்து, கைவினைஞர்களை நேரடியாக தொடர்பு கொள்ள வழிவகுக்கப்படும். மேலும் சமூக பாதுகாப்பு நலத்திட்டங்கள் சரியான முறையில் பெண் கைவினைஞர்கள் மற்றும் நலிவுற்றோருக்கும் சென்றடைய இதன் மூலம் முன்னுரிமை வழங்கப்படும். இது புதிய வடிவமைப்புகள் மற்றும் உற்பத்தி தொழில்நுட்பங்களை மேம்படுத்த வழிவகை செய்யும்.

**வாடிக்கையாளர்கள்/வாங்குவோர்:** குறைந்தபட்ச வர்த்தக பரிவர்த்தனை நேரம், நம்பிக்கை மற்றும் நுட்பமான அணுகுமுறை போன்றவற்றின் மூலம் வாடிக்கையாளர்கள்/வாங்குவோரின் ஏற்புத்தன்மை மற்றும் அனுபவங்களை மேம்படுத்துதல்.

**நிறுவனம்:** டிஜிட்டல் ஆளுமை மூலம் வர்த்தக ரீதியில் நிலைத்தன்மையோடு பாரம்பரியத் தொழிலை மேம்படுத்தி கைவினைஞர்களின் வாழ்வாதாரத்திற்கு பாதுகாப்பு அளிப்பதுடன் பொறுப்பு மற்றும் வெளிப்படைத் தன்மையை மேம்படுத்துதல்.

பூம்புகார் ஏற்கனவே தனது குறிக்கோளில் வெற்றி பெற்று அதன் பயனை அடைய தொடங்கிவிட்டது. இம்மாற்றத்தின் விரிவான விவரங்கள் கீழ்வருமாறு:

**7.1 நிர்வாக சீர்த்திருத்தங்கள்**

**மின்தளம்:** பூம்புகார் தனக்கென உருவாக்கியுள்ள பல்நோக்கு இணையதளம் www.tnhdcltd.com வாயிலாக பூம்புகார் மற்றும் தொடர்புடைய பிரிவுகளின் வளர்ச்சியினை தொழில் முனைவோர் அறிந்து கொள்ளலாம்.

**மின் தொகுப்பு களஞ்சியம்:** தமிழக அரசு, மாநில புதுமை நிதி திட்டத்தின்கீழ் கைவினைஞர்கள் மற்றும் கைவினைஞர்களின் திறமைக்கான மின் தொகுப்பு www.tnartisaan.com ஏற்படுத்த ரூ.100.00 இலட்சம் நிதி வழங்கியுள்ளது. இது தமிழக கைவினைஞர்கள் அனைவருக்கும் நிலையான வடிவமைப்புடன் ஒவ்வொரு கைவினைஞருக்கும் தனித்தனியாக மின் பக்கங்களை கொண்ட, விரிவாகவும் தொடர்ந்து புதிய தகவல்களை பதிவேற்றம் செய்து கொள்ளும் வகையில் உருவாக்கப்பட்ட மின் தொகுப்பு ஆகும். இம்மின் தொகுப்பில் நலிவுற்ற

கைவினைஞர்களை மேம்படுத்தும் பிரத்யேக அம்சங்களும் அடங்கும். தற்போது இந்நிறுவனம் 13,000 கைவினைஞர்களின் விவரங்களை பதிவேற்றம் செய்துள்ளது. வாடிக்கையாளர்கள் அவர்களுக்குத் தேவைப்படும் பொருட்களின் வகைகள் வாரியாகவும், கைவினைஞர்களின் வேலைப்பாடுகளையும் இவ்வலைத்தளம் மூலம் காண இயலும்.

**மின் வருகைப்பதிவு:** இந்நிறுவனத்தின் அனைத்து விற்பனை நிலையங்கள் மற்றும் உற்பத்தி நிலையங்களிலும் பயோ மெட்ரிக் வருகை பதிவு பயன்படுத்தப்படுகிறது.

**மின்தொடர்பு:** நிறுவன வள திட்டத்தின் உபயோகம் மற்றும் வாடிக்கையாளர்களுக்காக சென்னை பூம்புகார் விற்பனை நிலையத்தில் அருகலை (Wi-Fi) வசதி செய்யப்பட்டுள்ளது.

**மின் கண்காணிப்பு:** 16 விற்பனை நிலையங்கள், 7 உற்பத்தி நிலையங்கள், நகர்புறத்திடல் மற்றும் நிறுவன அலுவலகத்திலும் 129 கண்காணிப்பு கேமராக்கள் (CCTV) பொருத்தப்பட்டுள்ளன. இதன் மூலம் அனைத்து இடங்களும் சரியான முறையில் தலைமை அலுவலகத்தால் கண்காணிப்படுகின்றன.

### 7.2 சந்தை வாய்ப்பில் சீர்த்திருத்தங்கள்

**மின் வணிகம்:** பூம்புகார் தனது பொருட்களை நேரடியாக ஆன்லைன் மூலம் விற்பனை செய்வதற்கு www.poompuhar.org என்ற பெயரில் சொந்த மின் வணிக இணைய தளத்தினை அமைத்துள்ளது. கைபேசி செயலியுடன் இணைந்த வேன்/மோட்டார் சைக்கிள் மூலம் வாடிக்கையாளர்களுக்கு பொருட்கள் நேரடியாக வழங்கப்படுகிறது. இந்நிறுவனம் மின் வணிக ஜாம்பவான்களான ஸ்னாப் டீல், பிளிப்கார்ட், கிராப்ட் வில்லா, ஷாப் க்ளூஸ் மற்றும் இன்டியா மார்ட் போன்ற நிறுவனங்கள் மூலம் பூம்புகார் தயாரிப்புகளை விற்பனை செய்வதற்காக புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்துள்ளது. மேற்கண்ட

அனைத்து வலைதளங்களிலும் பிரத்யேக மின்வலை தள பக்கங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. 2018-2019 ஆம் ஆண்டு ரூ.10.25 இலட்சம் வணிகம் எட்டப்பட்டுள்ளது.

**மின் ஊடகங்கள்:** பூம்புகார் முகநூல், லிங்க்டுஇன், டுவிட்டர், குவாரா, பின்டிரஸ்ட், யூடியூப் (Youtube) மற்றும் கூகுள் போன்ற பிரம்மாண்ட இணையதள சமூக ஊடகங்கள் வாயிலாக சந்தை வாய்ப்பை உலகளவில் பெற பிரச்சாரத்தை மேற்கொண்டு வருகிறது. இதற்கான செலவு, செய்தித்தாள்கள் மற்றும் பத்திரிகைகளில் வெளியிடப்படும் விளம்பரத்திற்கு ஆகும் நடைமுறை விளம்பரச் செலவில் ஒரு சிறு பகுதியே ஆகும்.

**மின் குறியீடு:** அனைத்து 16 விற்பனை நிலையங்களிலுள்ள கைவினைப் பொருட்கள் அனைத்திற்கும் மின்னணு விலை குறியீடு உருவாக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் இந்நிறுவனம் விற்பனை புள்ளி விவரங்களை பரிசீலித்து சந்தையில் வேகமாக விற்பனையாகும் வாய்ப்புள்ள பொருட்களை முன்னுரிமை அடிப்படையில் உற்பத்தி செய்திட திட்டமிட முடிகிறது.

**மின் விலைச்சீட்டு:** பூம்புகார் மின் விலைச்சீட்டு இயந்திரத்தை பயன்படுத்துவதன் மூலம் 16 விற்பனை நிலையங்களும் பரவலாக்கப்பட்ட மின் விலைச்சீட்டினை சுலபமாகவும், வேகமாகவும் தயாரிக்க இயலுவதுடன் வர்த்தக பரிமாற்ற நேரமும் குறைந்துள்ளது.

**மின் தகவல் வழங்கல்:** அனைத்து 21 மேலாளர்களுக்கும் சந்தைப்படுத்தும் கருவியாக ஐ-பேட் வழங்கப்பட்டுள்ளது. இதன் மூலம் மேலாளர்கள் சாத்தியமான வாடிக்கையாளரை சந்திக்கும் போது கைவினைப் பொருட்களின் உயர்தர புகைப்படங்களை அவர்களுக்கு காண்பிப்பதுடன் அவர்களுடன் பேஸ்டைம் (facetime) மூலம் கலந்துரையாடலாம். இதன் மூலம் நிறுவனத்தின் அறிமுக உரையும் நிகழ்த்தலாம்.

## 8. தகவல் தொழில்நுட்பம் சாரா முயற்சிகள்

மேற்கூறப்பட்டுள்ள தகவல் தொழில்நுட்ப முறைகள் மட்டுமல்லாமல் பின்வரும் தகவல் தொழில்நுட்பம் சாரா அம்சங்களாலும் இந்நிறுவனம் முன்னேற்ற பாதையில் சென்று கொண்டுள்ளது:

- அரசு துறை மற்றும் அரசு முகமைகள் தங்களுக்குத் தேவைப்படும் கைவினைப் பொருட்களை கொள்முதல் செய்வதற்கு பூம்புகார் நிறுவனத்தை, தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப்புள்ளிகள் சட்டம் 1998 பிரிவு 16 (f)ன் கீழ் ஒரு "**விருப்ப கொள்முதல் முகமை**" (Optional Procurement Agency) என அரசு அறிவிக்கை வெளியிட்டுள்ளது.
- தற்போதைய பூம்புகாரின் இலச்சினை (logo) மறு வடிவமைத்து வர்த்தக குறியீட்டுக்கான பதிவு அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.
- இந்திய தபால் துறையுடன் கைவினைப்பொருள் விநியோகத்திற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்டுள்ளது.
- நட்சத்திர ஓட்டல்களுடன் வர்த்தக புரிந்துணர்வு ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்டுள்ளது.
- தேசிய சணல் மேம்பாட்டு கழகத்துடன் (National Jute Development Corporation) ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளது.
- மத்திய அரசு நிறுவனமான TRIFED நிறுவனத்துடன் ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளது.
- அனைத்து பூம்புகார் விற்பனை நிலையங்களிலும் வாடிக்கையாளர்கள் கருத்து கோரும் பின்னூட்ட படிவம் வடிவமைத்து அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

- வாடிக்கையாளர்கள் வாங்கிய கைவினைப் பொருட்களை எடுத்து செல்ல புதிய **காகித விளம்பர பை** வடிவமைத்து அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.
- வர்த்தக நிறுவனங்கள் மற்றும் இதர நிலையங்களில் சந்தை பிரச்சாரத்தை மேம்படுத்த நடமாடும் கூடாரம் (KIOSK) வடிவமைத்தல்.
- சென்னையில் உள்ள வாடிக்கையாளர்களுக்கு பொருட்களை வீடுகளுக்கு சென்று விநியோகம் செய்தல்.

## 9. புதிய வருவாய் முறைகள்

பூம்புகார் புதிய வருவாயினை ஏற்படுத்திட மேற்கொண்ட முயற்சிகள் பலனளித்துள்ளன. அதனடிப்படையில் கீழ்க்காணும் நிறுவனங்களிடமிருந்து அழகுபடுத்தும் பணிகளை பூம்புகார் நிறுவனம் மேற்கொண்டுள்ளது.

**நிறைவேற்றப்பட்ட சிறப்பு ஆணைகள்**

| வரிசை எண் | நிறுவனம் | தொகை (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|
| 1 | தமிழ் நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் - புல்வெளி அழகுபடுத்தும் பணி | 92.24 |
| 2 | திருச்சி, தூத்துக்குடி, மற்றும் திருப்பதி (பகுதி) விமான நிலையங்களை அழகுபடுத்தும் பணி | 56.43 |
| 3 | புதுடெல்லியில் உள்ள தமிழ் நாடு இல்லத்தை அழகு படுத்தும் பணி | 109.00 |
| 4 | மலை மாதேஸ்வரன் கோவில் – தேர் வேலை | 23.46 |
| 5 | திரைப்பட விருதுகள் | 310.72 |
| 6 | தங்கப்பதக்கம் | 100.31 |
| 7 | சலவைப்பெட்டி | 93.72 |
| 8 | காமராஜர் துறைமுகம் - அழகுபடுத்தும் பணி | 68.74 |
| 9 | தமிழ் நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் - தகவல் மையம் "KIOSK" அமைத்தல் | 152.00 |
| | **மொத்தம்** | **1,008.13** |

**எதிர்பார்க்கப்படும் சிறப்பு ஆணைகள் 2019-2020**

| வரிசை எண் | நிறுவனம் | தொகை (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|
| 1 | காமராஜர் துறைமுகம் - எண்ணூர் | 107.00 |
| 2 | விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் விருதுகள் | 700.00 |
| 3 | பித்தளை சலவைப்பெட்டி - மிகவும் பிற்படுத்தப்பட்டோர் நலத்துறையினருக்காக | 125.00 |
| 4 | தங்கப்பதக்கம் பல்வேறு அரசுத்துறைகளிடமிருந்து | 100.00 |
| 5 | வெள்ளிப்பதக்கம் பல்வேறு அரசுத்துறைகளிடமிருந்து | 25.00 |
| 6 | இயல் இசை நாடக மன்றம் - தங்கப்பதக்கம் | 225.00 |
| 7 | மதுரை உலக தமிழ் சங்கம் (இரண்டு ஆண்டுகள் திட்டம்) | 5,250.00 |
| | **மொத்தம்** | **6,532.00** |

## 10. ஏற்றுமதி

கைவினைப்பொருட்களின் வர்த்தகத்தைப் பெருக்குவதில் ஏற்றுமதி ஒரு முக்கிய யுக்தியாகும். பூம்புகார் சிங்கப்பூர், மலேசியா, இங்கிலாந்து மற்றும் அமெரிக்கா ஆகிய நாடுகளுக்கு பாரம்பரியமிக்க கைவினைப் பொருட்களை ஏற்றுமதி செய்து வருகிறது. பஞ்சலோகச் சிலைகள், பித்தளை அலங்கார விளக்குகள், நூக்கமர அறைகலன்கள் மற்றும் தஞ்சாவூர் ஓவியங்கள் ஆகியவை இந்நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படும் முக்கிய கைவினைப்பொருட்களாகும். 2018-2019 ஆம் ஆண்டில் ரூ.63.85 இலட்சம் மதிப்பில் ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளது.

## 11. கைவினைஞர்களுக்கான நலன்

### 11.1 விருதுகள்:

ஒவ்வொரு ஆண்டும் பூம்புகார் நிறுவனம் கீழ்கண்ட விருதுகளை வழங்குகின்றது.

1. வாழும் கைவினைப் பொக்கிஷம் விருது
2. பூம்புகார் மாநில விருது
3. பூம்புகார் மாவட்ட கைத்திறன் விருது
4. பயன்பாடு சார்ந்த கைவினைப்பொருட்கள் விருது
5. கைவினைப்பொருட்கள் ஏற்றுமதி விருது
6. குழு உற்பத்தி விருது மற்றும்
7. அடுத்த தலைமுறை கைவினைஞருக்கான கைத்திறப் போட்டி

போன்ற விருதுகளை கைத்திறத் தொழிலில் சிறந்த திறமைக் கொண்ட கைவினைஞர்களுக்கு வழங்கி அங்கீகரிக்கப்படுகிறது.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் 2018-2019 ஆம் ஆண்டிற்கான வாழும் கைவினைப் பொக்கிஷம் விருது மற்றும் பூம்புகார் மாநில விருதினை தேர்வு பெற்ற கைவினைஞர்களுக்கு 19.02.2019 அன்று வழங்கி சிறப்பித்தார்கள்.

**விருதுகளின் விவரங்கள்:**

| வ. எண் | விருதுகளின் பெயர்கள் | விருதுகளின் விவரம் | விருதுகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1 | வாழும் கைவினைப் பொக்கிஷம் விருது | ரூ.1.00 லட்சம் ரொக்கம், 8 கிராம் தங்கப்பதக்கம், தாமிரப்பத்திரம் மற்றும் சான்றிதழ் | 7 |
| 2 | பூம்புகார் மாநில விருது | ரூ.50,000/- ரொக்கம், 4 கிராம் தங்கப்பதக்கம், தாமிரப்பத்திரம் மற்றும் சான்றிதழ் | 10 |
| 3 | பூம்புகார் மாவட்ட கைத்திறன் விருது | ரூ.10,000/- ரொக்கம், வெள்ளிப்பதக்கம் மற்றும் சான்றிதழ் | 85 |
| 4 | கைவினைப் பொருள் ஏற்றுமதி விருது | ரூ.40,000/- ரொக்கம்,\ 4 கிராம் தங்கப்பதக்கம், தாமிரப்பத்திரம் மற்றும் சான்றிதழ் | - |
| 5 | குழு உற்பத்தி விருது | ரூ.40,000/- ரொக்கம், 4 கிராம் தங்கப்பதக்கம், தாமிரப்பத்திரம் மற்றும் சான்றிதழ் | 3 குழுக்கள் |
| 6 | பயன்பாடு சார்ந்த கைவினைப் பொருட்கள் விருது | ரூ.40,000/- ரொக்கம், 4 கிராம் தங்கப்பதக்கம், தாமிரப்பத்திரம் மற்றும் சான்றிதழ் | 3 |
| 7 | அடுத்த தலைமுறை கைவினைஞர்-களுக்கான கைத்திறப் போட்டி | ரூ.2,000/- ரொக்கம், வெள்ளிப்பதக்கம் மற்றும் சான்றிதழ் | 150 |
| | | மொத்தம் | 258 |

நாட்டிலேயே கைவினைஞர்களுக்கு அதிக எண்ணிக்கையிலான விருதுகளை வழங்கும் தனித்துவமிக்க மாநிலமாக இம்மாநிலம் திகழ்கிறது.

### 11.2 கைவினைஞர்கள் தினம்

பொது மக்களிடையே கைத்திறப்பொருட்களை பற்றிய விழிப்புணர்வு ஏற்படுத்தவும் மற்றும் கைவினைஞர்களை அங்கீகரிக்கவும் தமிழ்நாடு அரசு ஒவ்வொரு ஆண்டும் மார்ச் 5ஆம் நாள் “கைவினைஞர்கள் தினம்" என அறிவித்தது. இந்த தினத்தன்று தேர்ந்தெடுக்கப்பட்ட கைவினைஞர்களுக்கு பூம்புகார் விருதுகள் வழங்கும் நிகழ்ச்சியும் நடைபெறும். இதற்காக தமிழக அரசு ரூ.35.00 இலட்சம் வழங்குகிறது.

2018-2019 ஆம் ஆண்டு மாண்புமிகு ஊரகத் தொழிற்துறை அமைச்சர் அவர்கள், அரசு முதன்மைச் செயலர், கைத்தறி, கைத்திறன் துணிநூல் மற்றும் கதர்த் துறை மற்றும் தலைவர் மற்றும் மேலாண் இயக்குநர், தமிழ்நாடு கைத்திறத் தொழில்கள் வளர்ச்சி கழகம் அவர்கள் முன்னிலையில் 01.03.2019 அன்று “கைவினைஞர்கள் தினம்" சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. தேர்ந்தெடுக்கப்பட்ட கைவினைஞர்களுக்கு மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள் விருதுகளை வழங்கி கௌரவித்தார்கள்.

### 11.3 பயிற்சி திட்டங்கள்

- மத்திய அரசின் திட்டமான ஒருங்கிணைந்த கைவினைப் பொருட்கள் மேம்பாடு மற்றும் வளர்ச்சித் திட்டத்தின் (Integrated Development and Promotion of Handicrafts) கீழ் 40 கைவினைஞர்களுக்கு ரூ.16.85 இலட்சம் செலவில் தஞ்சாவூர் (கலைத்தட்டு), நாச்சியார்கோவில் (பித்தளை விளக்குகள்), மதுரை (பித்தளை விளக்குகள் மற்றும் கலைப்பொருட்கள்)

கைத்திறத்தொழிலில் 5 மாதகால பயிற்சித்திட்டம் பூம்புகார் உற்பத்தி நிலையங்களில் நடந்து முடிந்தது. இதுவரை இத்திட்டத்தின் மூலம் மொத்தம் 160 கைவினைஞர்கள் பயனடைந்துள்ளனர். மேலும் பூம்புகார் உற்பத்தி நிலையம் தஞ்சாவூர் மாவட்டம், சுவாமிமலையில் பஞ்சலோக சிற்ப கலையில் இப்பயிற்சி நடைபெற்று 03.06.2019 அன்று முடிவடைந்துள்ளது.

இந்த ஆண்டு ஒருங்கிணைந்த கைவினைப் பொருட்கள் மேம்பாடு மற்றும் வளர்ச்சித் திட்டத்தின் மூலம் மேலும் 7 பயிற்சிகள் தலா ரூ. 16.85 இலட்சம் செலவில் நடத்தப்படவுள்ளது.

- வடிவமைப்பு மற்றும் தொழில்நுட்ப மேம்பாட்டு பயிற்சி பட்டறை திட்டத்தின் கீழ் – 2 மாத பயிற்சி இதுவரையில் 20 பயிற்சிகள் நடத்தப்பட்டுள்ளது. ஒவ்வொரு பயிற்சியும் 30 கைவினைஞர்களுக்கு ரூ.4.60 இலட்சம் செலவில் கைத்திறத் தொழிலில் பயிற்சி அளிக்கப்பட்டது. இதுவரை இத்திட்டத்தின் கீழ் 600 கைவினைஞர்கள் பயனடைந்துள்ளனர்.

  இந்த ஆண்டு வடிவமைப்பு மற்றும் மேம்பாட்டு பயிற்சிப் பட்டறை திட்டத்தின் மூலம் மேலும் 21 பயிற்சிகள் தலா ரூ.4.60 இலட்சம் செலவில் நடத்தப்பட உள்ளது.

- கைத்திறத் தொழிலில் பஞ்சலோகச் சிலைகளை தயாரிக்கும் 3 ஆண்டு பயிற்சி திட்டம் ஒன்றினை “குருகுலம்” என்ற திட்டத்தின் கீழ் தமிழக அரசின் நிதியுதவியுடன் 5 கைவினைஞர்களுக்கு ரூ.30.00 இலட்சம் செலவில் ஈரோடு மாவட்டத்தில் 30.03.2015 முதல் 31.03.2018 வரை நடைபெற்றது.

## 12. நகர்ப்புற கண்காட்சித்திடல்

கைவினைஞர்கள் மற்றும் கைத்தறி நெசவாளர்களுக்கு பெருநகரங்கள்/சுற்றுலாத் தலங்கள் போன்ற இடங்களில் நிரந்தர சந்தை வாய்ப்பிற்கான உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்துவது நகர்ப்புறக் கண்காட்சித் திடலின் முக்கிய நோக்கமாகும். இத்திடல் மூலம் கைவினைஞர்கள் தங்களது பொருட்களை ஆண்டு முழுவதும் விற்பனை செய்வதுடன் பெருமளவில் வாடிக்கையாளர்களை ஈர்க்க இயலும். இத்திடல் உணவு மற்றும் விற்பனைக் கூடம், உள்நாடு/சர்வதேச சுற்றுலா பயணிகள்/நுகர்வோர்க்கு ஏற்ப கலைநயத்துடன் பொழுதுபோக்கு அம்சங்கள் கொண்டதாக அமைக்கப்பட்டுள்ளது.

### 12.1 கன்னியாகுமரி நகர்ப்புற கண்காட்சித்திடல்

பூம்புகார், கன்னியாகுமரியில் ரூ.245.00 இலட்சம் மதிப்பீட்டில் ஒரு நகர்புறக் கண்காட்சித் திடல் அமைக்கும் பணியை மேற்கொண்டது. இதில் மத்திய அரசின் பங்கு ரூ.140.00 இலட்சம், மாநில அரசின் பங்கு ரூ.60.00 இலட்சம் மற்றும் இதர அரசு நிறுவனங்களின் பங்கு ரூ.45.00 இலட்சம் ஆகும். இக்கண்காட்சித்திடல் 36 கடைகள், உணவுக் கூடம், ஓய்வறை, காட்சி அரங்கம், குழந்தைகள் பூங்கா மற்றும் வாகனம் நிறுத்தும் இடம் ஆகிய வசதிகளைக் கொண்டுள்ளது. இந்நகர்புற கண்காட்சித்திடல் மூலம் மாதந்தோறும் சராசரியாக 30 கைவினைஞர்கள் பங்குபெறுகின்றனர். இக்கண்காட்சித் திடல் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் 08.03.2017 அன்று துவக்கி வைக்கப்பட்டது.

### 12.2 மாமல்லபுரம் நகர்ப்புற கண்காட்சித்திடல்

இதேபோன்று மற்றுமொரு நகர்ப்புற கண்காட்சித்திடல் சென்னையை அடுத்து மாமல்லபுரத்தில் ரூ.500.00 இலட்சம் செலவில் கட்டப்பட்டுள்ளது. இதில் மத்திய அரசின் பங்கு

ரூ.210.00 இலட்சம், மாநில அரசின் பங்கு ரூ.190.00 இலட்சம் ஆகும். இக்கண்காட்சி திடல் விற்பனை செய்வதற்கு ஏற்ப 36 விற்பனை அரங்குகள், உணவுகூடம், ஓய்வறை, காட்சி அரங்கம், குழந்தைகள் பூங்கா, கைவினைஞர்கள் தங்குமிடம் மற்றும் வாகனம் நிறுத்துமிடம் கொண்டதாகும். இக்கண்காட்சி திடல் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களால் 08.03.2018 அன்று கைவினைஞர் தின விழாவின்போது துவக்கி வைக்கப்பட்டது.

## 13. ஒருங்கிணைந்த கைவினைப் பொருட்கள் மேம்பாடு மற்றும் வளர்ச்சி

இந்திய அரசு ஒருங்கிணைந்த கைவினைப் பொருட்கள் மேம்பாடு மற்றும் வளர்ச்சித் திட்டத்தின்கீழ் ரூ.2,038.00 இலட்சத்தினை பூம்புகாருக்கு அனுமதித்துள்ளது. இத்திட்டத்தில் தமிழக அரசின் பங்கு ரூ.324.00 இலட்சம் ஆகும். இத்திட்டத்தின் முக்கிய குறிக்கோள் கைவினைஞர்களுக்கு சிறந்த பணி சூழல், திறன் மேம்பாடு, சந்தை வசதி, புதிய வடிவமைப்புக்களை அறிமுகப்படுத்துதல் போன்றவற்றில் உதவிடுதல் ஆகும்.

**ஒருங்கிணைந்த கைவினைப் பொருட்கள் மேம்பாடு மற்றும் வளர்ச்சி-முன்னேற்றம்**

| வ. எண் | ஒப்பளிப்பு செய்யப் பட்ட திட்டம் | ஒப்பளிப்பு செய்யப் பட்ட திட்டங் களின் எண்ணி க்கை | ஒப்பளிப்பு செய்யப் பட்ட தொகை | நிறைவேற்றப் பட்ட திட்டங்கள் | | 2018/19-2020-ஆம் ஆண்டில் நடைமுறைப் பட்டுத்தப்பட்டு வரும் திட்டங்கள் | | மொத்த செலவினத் தொகை |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | இயல்பு | நிதி | இயல்பு | நிதி | |
| | | | (ரூபாய் இலட்சத்தில்) | | | | | |
| 1. | பொது வசதி மையம் | 13 | 780.00 | 6 | 251.71 | 7 | 35.53 | 287.24 |
| 2. | கண்காட்சி | 22 | 362.00 | 22 | 142.00 | - | - | 142.00 |
| 3. | கிராப்ட் பஜார் | 12 | | 12 | 143.00 | - | - | 143.00 |

| வ. எண் | ஒப்பளிப்பு செய்யப் பட்ட திட்டம் | ஒப்பளிப்பு செய்யப் பட்ட திட்டங் களின் எண்ணிக்கை | ஒப்பளிப்பு செய்யப் பட்ட தொகை | நிறைவேற்றப் பட்ட திட்டங்கள் | | 2018/19-2020-ஆம் ஆண்டில் நடைமுறைப் பட்டுத்தப்பட்டு வரும் திட்டங்கள் | | மொத்த செலவினத் தொகை |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | இயல்பு | நிதி | இயல்பு | நிதி | |
| | | | (ரூபாய் இலட்சத்தில்) | | | | | |
| 4. | வடிவ-மைப்பு கருத் தரங்கு | 41 | 189.00 | 1 | 3.00 | 19 | 81.16 | 84.16 |
| 5. | ஒருங் கிணைந்த பயிற்சி | 12 | 177.45 | 1 | 16.90 | 3(1) | 9.52 | 26.42 |
| 6. | உபகரணப் பொருட் கள் | 10000 | 500.00 | 1000 | 43.00 | 2400 | 95.57 | 138.57 |
| 7. | உற்பத்தி யாளர்/ நுகர்வோர் கூட்டம் | 2 | 30.00 | 1 | 15.00 | 1 | - | 15.00 |
| | **மொத்தம்** | | **2038.45** | | **614.61** | | **221.78** | **836.39** |

## 13.1 பொது வசதி மையம்

பொது வசதி மையங்களில் பல கைவினை குழுமங்களைச் சேர்ந்த கைவினைஞர்கள் ஒன்று கூடி இம்மையத்தில் ஏற்படுத்தப்பட்டுள்ள உட்கட்டமைப்பு வசதியை பயன்படுத்தி, இங்குள்ள உற்பத்தி இயந்திரங்கள் மற்றும் கருவிகள் மூலம் இவர்கள் செய்யும் கைவினைப்பொருட்களை மிக குறைந்த விலையில் துரிதமாக செய்யமுடியும்.

சுவாமிமலை, நாச்சியார்கோவில், தஞ்சாவூர், மதுரை, கன்னியாகுமரி மற்றும் வாகைக்குளம் ஆகிய 6 இடங்களில் ரூ.360.00 இலட்சம் செலவில் கட்டப்பட்ட பொது வசதி மையங்களை கைவினைஞர்கள் தின விழாவின் போது மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் 08.03.2018 அன்று துவக்கி வைத்தார்கள். இந்த பொது வசதி மையங்களின் மூலம் 2,450 கைவினைஞர்கள் பயனடைவார்கள்.

மேலும் 7 பொது பயன்பாட்டு மையங்கள் தலா ரூ.60.00 இலட்சம் செலவில் தமிழ்நாட்டில் பல்வேறு இடங்களில் கைவினைஞர்களுக்காக பல்வேறு கைத்திறத் தொழிற் பயிற்சிக்காக 2019–2020 ஆம் ஆண்டில் அமைக்கப்பட்டு வருகிறது.

## 14. நலிந்த கைத்திறத்தொழில்களுக்கு பொது பயன்பாட்டு மையம் அமைத்தல்

தமிழ்நாட்டில் நலிந்த கைவினைத் தொழில்களான சுடுகளிமண், பனை ஓலைப் பொருட்கள், கோரைப்புல் மற்றும் களிமண் ஆகியவற்றிலான கைவினைப் பொருட்களுக்கு புத்துயிர் அளிக்கும் பொருட்டு 4 பொது பயன்பாட்டு மையங்கள் அமைக்க தமிழக அரசு ரூ.188.00 இலட்சம் நிதியுதவி அளித்துள்ளது. பொது பயன்பாட்டு மைய கட்டடங்கள் அமைப்பதற்கான ஏற்பாடுகள் துரிதமாக நடைபெற்று வருகிறது.

## 15. இலவச உபகரணங்கள் வழங்குதல்

கைவினைஞர்களின் திறமையை உயர்த்தவும் அவர்களின் உற்பத்தித்திறனை அதிகரிக்கவும் இந்நிறுவனம் ரூ.5,000.00 மதிப்பிலான கைத்திறத் தொழிலின் மேம்படுத்தப்பட்ட உபகரணங்களை இலவசமாக வழங்குகிறது. தமிழ்நாட்டிலுள்ள 10,000 கைவினைஞர்களுக்கு இலவச உபகரணங்கள் மார்ச் மாதம் 2020-க்குள்ளாக விநியோகிக்கப்படும்.

## 16. சென்னை பூம்புகார் விற்பனை நிலையத்தில் கூடுதல் உள்கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்துதல்

சென்னை பூம்புகார் விற்பனை நிலையத்தில் அதிக தேவைப்பாடு உள்ள பயன்பாட்டு பொருட்களை காட்சிப்படுத்தி விற்பனை செய்ய தமிழ்நாடு அரசு ரூ.50.00 இலட்சம் மதிப்பீட்டில் இரண்டாவது தளம் அமைக்க நிதியுதவி வழங்கியுள்ளது.

## 17. உலக கற்சிற்ப நகரம்

பூம்புகார் நிறுவனத்தின் முயற்சியால், மாமல்லபுரத்தை "உலக கற்சிற்ப நகரம்" என்று உலக கைத்திற குழுமம் (World Crafts Council) அங்கீகரித்துள்ளது. இது மாமல்லபுர கற்சிற்ப கலைக்கு அளிக்கப்பட்ட மிகப் பெரிய அங்கீகாரம் ஆகும்.

## 18. மாமல்லபுர கற்சிற்பங்களுக்கு புவிசார் குறியீடு

பூம்புகார் அளித்த விண்ணப்பத்தின் அடிப்படையில் மத்திய அரசின் புவிசார் குறியீடு பதிவகம் மாமல்லபுரத்தில் உள்ள கற்சிற்ப கலைகளுக்கு "புவிசார் குறியீடு" சான்றிதழினை 15.11.2017 அன்று வழங்கியது.

கீழ்க்கண்ட கைவினைப் பொருட்களுக்கு அபிவிருத்தி ஆணையர் (கைத்திறன்), புதுதில்லி அவர்களால் ஏற்கனவே புவிசார் குறியீடு பெறப்பட்டுவிட்டது.

(1) சுவாமிமலை பஞ்சலோகச் சிலைகள்

(2) வடசேரி கோயில் நகைகள்

(3) தஞ்சாவூர் ஓவியங்கள்

(4) தஞ்சாவூர் கலைத்தட்டுகள்

(5) தஞ்சாவூர் பொம்மைகள்

பூம்புகார் நிறுவன நடவடிக்கையால் கீழ்க்கண்ட கைவினைப் பொருட்களுக்கு புவிசார் குறியீடு பெறப்பட்டுவிட்டது.

(1) நாச்சியார்கோயில் பித்தளை விளக்குகள்

(2) பத்தமடை பாய்கள்

(3) தோடா சித்திரத் தையல்

(4) மாமல்லபுரம் கற்சிற்பங்கள்

மேலும் ஒன்பது கைத்திறத் தொழில்களுக்கு புவிசார் குறியீடு பெற விண்ணப்பித்துள்ளது.

## 19. தொலைநோக்கு பார்வை

கடந்த மூன்று ஆண்டுகளில் பூம்புகாரின் மூலம் கைவினைஞர்களுக்கு நன்மை பயக்கும் வகையில் எடுக்கப்பட்ட புதிய முயற்சிகள் மற்றும் புதுமைத் திட்டங்கள் மூலமாக பூம்புகாரின் விற்பனை வரும் காலங்களில் கணிசமான அளவு அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

## தமிழ் நாடு கதர் கிராமத் தொழில் வாரியம்

**“சுதேசி நோக்கத்தோடு பார்த்தால், கதர் அணிபவன், தன் நுரையீரல்களை பயன்படுத்திக் கொள்ளுபவனைப் போன்றவன். மற்றவர்கள் தவறான நோக்கத்தின்பேரில் செய்தாலும் சரி, அதன் அவசியம் அல்லது பயன்பாட்டில் நம்பிக்கை இல்லாததால் முழுமையாக செய்யாமல் இருந்தாலும் சரி, இயற்கையான மற்றும் கடமையானதோர் காரியத்தை நாம் செய்தே ஆகவேண்டும்."**

**- மகாத்மா காந்தியடிகள்**

கிராம வளர்ச்சிப் பணியில் ஈடுபட்டுள்ள மற்ற நிறுவனங்களின் ஒத்துழைப்புடன் கிராமப் பகுதிகளில் கதர் மற்றும் கிராமத் தொழில்களை அமைத்தல், ஊக்குவித்தல் மற்றும் மேம்படுத்துதல் ஆகியவற்றை முக்கியக் குறிக்கோளாகக் கொண்டு தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம் 1960 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்களில் நிறுவப்பட்டது.

கைவினைஞர்கள், மற்றும் கிராமப்புற ஏழை மக்களின் பொருளாதார நிலையினை மேம்படுத்திடும் வகையில் தேவைக்கேற்ற இலாபகரமான சுயதொழில் வாய்ப்புகளை உருவாக்குவதே இதன்முக்கிய நோக்கமாகும்.

## 1. வாரியத்தின் நோக்கங்கள்

அ) கதர் மற்றும் கிராமத் தொழில்களின் வளர்ச்சியினை ஊக்குவித்தல்.

ஆ) ஊரகப் பகுதியில் உள்ள ஏழை மக்களுக்கு வேலைவாய்ப்புகளை உருவாக்கிடும் சமூக நோக்கத்தினை நிறைவேற்றுதல்.

இ) சுற்றுச்சூழலுக்கு இணக்கமான, எளிதில் விற்கக் கூடிய கிராமத் தொழில் பொருட்களை உற்பத்தி செய்யும் பொருளாதார நோக்கங்களை செயல்படுத்துதல்.

ஈ) ஏழை மக்களிடையே தற்சார்பு நம்பிக்கையினை உருவாக்கும் ஒரு வலுவான கிராம சமூக உணர்வினை வளர்க்கும் பரந்த நோக்கத்தினை அடைதல்.

உ) கிராம கைவினைஞர்கள் ஒருங்கிணைந்து செயல்படுவதன் மூலம் அவர்களின் உற்பத்தி திறன் மற்றும் இலாபத்தினை உயர்த்துதல்.

## 2. நிர்வாகம்

மாண்புமிகு கதர் மற்றும் கிராமத் தொழில்கள் வாரியத் துறை அமைச்சர் அவர்களே தமிழ்நாடு கதர் கிராமத்தொழில் வாரியத்தின் தலைவராவார் மற்றும் அரசினால் நியமனம் செய்யப்படும் அலுவலர்கள் வாரியத்தின் உறுப்பினர்கள் ஆவர். திட்டங்களை செயல்படுத்துவதற்காக மேற்கொள்ளப்படும் முக்கிய கொள்கை முடிவுகளை வாரியம் மேற்கொள்கின்றது. அதே நேரத்தில் வாரியத்தின் அன்றாட நடவடிக்கைகள் வாரிய உறுப்பினராக உள்ள தலைமைச் செயல் அலுவலரால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்தின் முக்கிய செயல்பாடுகள் கதர் மற்றும் கிராமத் தொழில்கள் ஆகிய இரண்டு முக்கிய பிரிவுகளை உள்ளடக்கியதாகும்.

## 3. கதர்

இந்திய சுதந்திர போராட்டத்தில் "கதர்" முக்கிய பங்கு வகித்தது. கதர் இந்திய மக்களிடையே தேச பக்தி, அமைதி மற்றும் எளிமை போன்ற உணர்வுகளை ஏற்படுத்தியும், இந்திய சுதந்திர இயக்க போராட்டத்திலும் நெருங்கிய தொடர்பு கொண்டதாக விளங்கியது. இந்திய கலாச்சாரம் மற்றும் வாழ்வின் வழிமுறை ஆகியவைகளை கதர் தாங்கி நிற்கிறது. இராட்டைகள் மூலம் பஞ்சிலிருந்து கையினால் நூற்கப்படும் நூலைக் கொண்டு கதர் துணி நெய்யப்படுகிறது. கதர் துணி இந்திய நாட்டின் தட்பவெட்ப நிலைக்கு ஏற்ப இயற்கையானது திடமானது மற்றும் கதர் ஆடை உடலுக்கு இதமானது.

சந்தையில் பாலியஸ்டர் வந்த பின்பு கையினால் நூற்கப்பட்ட 67% கதர் நூலும் மற்றும் 33% பாலியஸ்டர் நூலும் சேர்க்கப்படுவதினால் தற்போது "கதர் பருத்தி" "பாலிவஸ்திரா" மற்றும் "கதர் பட்டு" ஆகிய மூன்று வகைகளை கதர் உள்ளடக்கியது.

### 3.1 கதர் பருத்தி மற்றும் பாலிவஸ்திரா

கதர் வாரியத்தின் முக்கியச் செயல்பாடுகளுள் ஒன்று கதர் உற்பத்தியாகும். இது கிராமபுற கைவினைஞர்களுக்கு வேலை வாய்ப்பினை உருவாக்குவதில் பெரும் பங்கு வகிக்கிறது. அனைத்து கதர் இரகங்கள் உற்பத்தியின்கீழ் நூல் நூற்றல், நெசவு நெய்தல், சலவை மற்றும் அச்சிடுதல் போன்றவை முக்கிய செயல்பாடுகளாக விளங்குகின்றன.

இப்பிரிவில் செய்யப்படும் உற்பத்தி செயல்கள் அனைத்தும் கையினால் செய்யப்படுவதால் கிராமப்புறத்தில் உள்ள கைவினைஞர்களுக்கு அதிகளவில் வேலை வாய்ப்பு கிடைக்க வழிவகை ஏற்படுத்துகிறது.

தற்போது கதர் வாரியத்தில் கீழ்க்குறிப்பிட்ட கதர் அலகுகள் செயல்பட்டு வருகின்றன.

| வ.எண். | அலகுகள் | எண்ணிக்கை |
|---|---|---|
| 1. | கிராமிய நூற்பு நிலையம் | 107 |
| 2. | கதர் உபகிளை | 40 |
| 3. | நேபாளி தறி அலகு | 9 |
| 4. | கதர் பட்டு உபகிளை | 16 |
| 5. | கதரங்காடி | 51 |

2018 – 2019 - ஆம் ஆண்டில் மேற்குறிப்பிட்ட கதர் உற்பத்தி அலகுகளில் 2304 நூற்பாளர்கள் மற்றும் 407 நெசவாளர்கள் மூலம் கதர் உற்பத்தி செய்யப்படுகிறது.

2016-2017 முதல் 2018-2019 வரையிலான கதராணைக்குழு சான்றளிக்கப்பட்ட நிறுவனத்திடமிருந்து கொள்முதல் செய்யப்பட்ட பட்டை பஞ்சு, துணி உற்பத்தி மதிப்பு, நூற்பாளர்களின் எண்ணிக்கை, வழங்கப்பட்ட நூற்பு கூலி மற்றும் நெசவாளர்களின் எண்ணிக்கை, வழங்கப்பட்ட நெசவு கூலி ஆகிய விபரங்கள் பின்வருமாறு:-

| வருடம் | கொள் முதல் செய்யப் பட்ட பட்டை பஞ்சு (கிலோ) | மதிப்பு (ரூ.இலட் சத் தில்) | உற்பத்தி செய்யப் பட்ட துணி மதிப்பு (ரூ.இலட்ச த்தில்) | நூற் பாளர் களின் எண்ணிக் கை | நூற்பு கூலி (ரூ.இலட் சத்தில்) | நெச வாளர் களின் எண் ணிக் கை | நெசவு கூலி (ரூ இலட்சத் தில்) |
|---|---|---|---|---|---|---|---|
| 2016-17 | 124903 | 202.63 | 929.73 | 1386 | 205.08 | 356 | 95.94 |
| 2017-18 | 124908 | 213.06 | 980.66 | 1539 | 209.21 | 356 | 166.71 |
| 2018-19 | 129493 | 237.70 | 923.33 | 2304 | 247.25 | 407 | 172.16 |

கதர் கிராமத் தொழில் ஆணைக்குழுவின் வழிகாட்டுதலின்படி 2017-18 மற்றும் 2018-19 ஆம் ஆண்டில்

நூற்பாளர்கள் மற்றும் நெசவாளர்களுக்கு வழங்கப்படும் கூலி தொகையானது 34% அதிகரித்து வழங்கப்பட்டு வருகிறது.

2018-2019-ஆம் ஆண்டில் 765 நூற்பாளர்கள் மற்றும் 51 நெசவாளர்கள் கதர் வாரியத்தில் புதியதாக சேர்ந்துள்ளார்கள். கூடுதலாக 800 நூற்பாளர்களுக்கு உற்பத்தியினை அதிகரிக்க பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது.

கதர் வாரியம் கடந்த மூன்று ஆண்டுகளின் உற்பத்தி மற்றும் விற்பனை விபரங்கள் கீழ்கண்டவாறு:-

| வ. எண். | வருடம் | உற்பத்தி | விற்பனை |
|---|---|---|---|
| | | (ரூ.இலட்சத்தில்) | |
| 1 | 2016-17 | 929.70 | 1348.37 |
| 2 | 2017-18 | 980.66 | 1157.16 |
| 3 | 2018-19 | 923.33 | 1044.55 |

**3.2 கதர் பட்டு**

வாரியத்திலுள்ள 16 கதர் பட்டு உற்பத்தி அலகுகள் மூலம் பாரம்பரியம் வாய்ந்த பட்டுப் புடவைகள் தூய வெள்ளி சரிகை மற்றும் வேலைபாடுகளுடன் குறைந்தபட்சம் ரூ.5,000 முதல் அதிகபட்சம் ரூ.35,000 மதிப்பில் தயாரிக்கப்பட்டு விற்பனை செய்யப்படுகின்றன. இவை தமிழகத்தில் உள்ள அனைத்து கதரங்காடிகள் நகராட்சி, மாவட்ட ஆட்சியர் அலுவலகம் மற்றும் இதர பொது அலுவலகங்களில் தற்காலிக விற்பனை நிலையம் அமைத்து விற்பனை மேற்கொள்ளப்படுகிறது.

மேலும், பட்டு உற்பத்தியினை அதிகப்படுத்தும் வகையில் புதிய நெசவாளர்களை சேர்க்கும்போது கும்பகோணம், சேலம் பகுதி பட்டு நெசவாளர்களுக்கு தேவையுள்ள அச்சு மற்றும் விழுது ரூ.4.80 இலட்சம் மதிப்பில் வழங்கப்பட்டுள்ளது.

கோயம்புத்தூர் மாவட்டத்தில் வாகாரம்பாளையம் பகுதியில் புதியதாக நெசவாளர்கள் கண்டறியப்பட்டு அவர்கள் மூலம் கோம்பை என்ற இரகத்திலான பட்டு புடவைகள் உற்பத்தியினை துவக்கியுள்ளார்கள்.

தற்போது, கதர் பட்டு உற்பத்தி அலகுகள் மூலம் 310 பட்டு நெசவாளர்களுக்கு ஆண்டு முழுவதும் வேலைவாய்ப்பை அளித்து வருகிறது. வாரியத்தால் உற்பத்தி செய்யப்படும் பட்டு ரகங்களுக்கு மத்திய பட்டு வாரியத்தால், "தரம் வாய்ந்த பட்டு" என்பதற்கு சான்றாக "சில்க் மார்க்" முத்திரை வழங்கப்பட்டுள்ளது.

கடந்த மூன்று ஆண்டுகளின் கதர் பட்டு உற்பத்தி மற்றும் விற்பனை விபரம் கீழ்கண்டவாறு:-

| வ. எண் | வருடம் | உற்பத்தி | விற்பனை |
|---|---|---|---|
| | | (ரூ.இலட்சத்தில்) | |
| 1 | 2016-17 | 539.66 | 658.46 |
| 2 | 2017-18 | 503.75 | 659.30 |
| 3 | 2018-19 | 601.13 | 409.93 |

## 4. கதர் நூற்போர் மற்றும் நெசவாளர் நலத்திட்டங்கள்

### 4.1 கதர் நூற்போர் மற்றும் நெசவாளர் நல வாரியம்

கதர் வாரியம் மற்றும் சர்வோதய சங்கங்களில் பணிபுரியும் நூற்பாளர்கள் மற்றும் நெசவாளர்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கிட ஏதுவாக, அரசினால் நல வாரியம் அமைக்கப்பட்டுள்ளது. இந்த நல வாரியத்தில் உறுப்பினராகப் பதிவு செய்துள்ள நூற்பாளர்கள் மற்றும் நெசவாளர்களுக்கு நலத்திட்ட உதவி வழங்கிட ஏதுவாக அரசு மானியமாக 2010-2011 மற்றும் 2011-2012-ஆம் ஆண்டுகளுக்கும் தலா ரூ.50.00 இலட்சம் மானியமாக வழங்கியுள்ளது.

இத்திட்டத்தின் கீழ் வழங்கப்படும் பல்வேறு உதவிகள் பின்வருமாறு:-

| வ. எண். | | உதவிகளின் தன்மை | தொகை (ரூபாயில்) |
|---|---|---|---|
| 1 | | விபத்து ஈட்டுறுதி திட்டத்தின் கீழ் | |
| | அ | விபத்தினால் மரணம் ஏற்பட்டால் | 1,00,000/- |
| | ஆ | விபத்தினால் ஊனம் ஏற்பட்டால் ஊனத்தின் தன்மைகேற்ப | 10,000/- முதல் 1,00,000/- வரை |
| 2 | | இயற்கை மரணத்திற்கான உதவித் தொகை | 15,000/- |
| 3 | | ஈமச்சடங்கு செலவு | 2,000/- |
| 4 | | கல்வி உதவித் தொகை | |
| | அ | 10-ஆம் வகுப்பு படித்து வரும் பெண் குழந்தைகளுக்கு | 1,000/- |
| | ஆ | 10-ஆம் வகுப்பு தேர்ச்சி பெற்றவர்களுக்கு | 1,000/- |
| | இ | 11-ஆம் வகுப்பு படித்து வரும் பெண் குழந்தைகளுக்கு | 1,000/- |
| | ஈ | 12-ஆம் வகுப்பு படித்து வரும் பெண் குழந்தைகளுக்கு | 1,500/- |
| | உ | 12-ஆம் வகுப்பு தேர்ச்சி பெற்றவர்களுக்கு | 1,500/- |
| | ஊ | முறையான பட்டப்படிப்புக்கு | 1,500/- |
| | | மாணவர் விடுதி வசதியுடன் முறையான பட்டப்படிப்புக்கு | 1,750/- |
| | எ | முறையான பட்ட மேற்படிப்புக்கு | 2,000/- |
| | | மாணவர் விடுதி வசதியுடன் முறையான பட்ட மேற்படிப்புக்கு | 3,000/- |
| | ஏ | தொழில் கல்வி பட்டப்படிப்புக்கு | 2,000/- |
| | | மாணவர் விடுதி வசதியுடன் தொழில் கல்வி பட்டப்படிப்புக்கு | 4,000/- |
| | ஐ | தொழில் கல்வி பட்ட மேற்படிப்புக்கு | 4,000/- |
| | | மாணவர் விடுதி வசதியுடன் தொழில் கல்வி பட்டமேற்படிப்புக்கு | 6,000/- |
| | ஒ | ஐ.டி.ஐ. தொழிற்பயிற்சி படிப்புக்கு | 1,000/- |
| | | மாணவர் விடுதி வசதியுடன் ஐ.டி.ஐ. தொழிற்பயிற்சி படிப்புக்கு | 1,200/- |
| 5 | | திருமண உதவித் தொகை | 2,000/- |
| 6 | | மகப்பேறு உதவித் தொகை | |

| வ. எண். | | உதவிகளின் தன்மை | தொகை (ரூபாயில்) |
|---|---|---|---|
| | அ | மகப்பேறு மாதம் ஒன்றுக்கு ரூ.1000/- வீதம் (மகப்பேறுக்கு முன் 3 மாதங்கள் மகப்பேறுக்கு பின் 3 மாதங்கள்) | 6,000/- |
| | ஆ | கருக்கலைப்பு/கருச்சிதைவு | 3,000/- |
| 7 | | மூக்குக்கண்ணாடி செலவுத் தொகையை ஈடுசெய்தல் | 500/- வரை |
| 8 | | முதியோர் ஓய்வூதியம் (மாதந்தோறும்) | 1,000/- |

இந்த நல வாரியத்தில் 9042 நபர்கள் உறுப்பினர்களாக பதிவு செய்துள்ளனர். இவ்வாரியத்தின் மூலம் 2018-2019-ஆம் ஆண்டு வரை, 1159 பயனாளிகளுக்கு இதுவரை ரூ.57.52 இலட்சம் மதிப்பில் நலதிட்ட உதவிகள் வழங்கப்பட்டுள்ளன.

## 4.2 நூற்போர் மற்றும் நெசவாளர்களுக்கான நலநிதி

தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்தில் நூற்போர் மற்றும் நெசவாளர்களுக்காக நலநிதி 1990-ஆம் ஆண்டிலிருந்து செயல்படுத்தப்பட்டு வருகிறது. இதில் கைவினைஞர்கள், அவர்கள் பெறும் கூலித்தொகையில் 12 விழுக்காடு தொகையினை பங்களிப்பதோடு வாரியமும் அதற்கு ஈடான தொகையினை பங்களிக்கிறது. கைவினைஞர்களின் கணக்கில் இருக்கும் கையிருப்பு தொகையின் அடிப்படையில் 840 நூற்போர் மற்றும் நெசவாளர் குடும்பத்தினரின் திருமணம், கல்வி, மருத்துவச் செலவு மற்றும் பண்டிகைக் காலங்கள் போன்றவற்றிற்கு நிதி உதவி வழங்கப்படுகிறது. நூற்போர் மற்றும் நெசவாளர்கள் ஓய்வு பெறும்பொழுது அவர்களது கணக்கில் உள்ள முழுத்தொகையும் திரும்ப வழங்கப்படுகிறது. நூற்போர் மற்றும் நெசவாளர்களுக்கு நிர்ணயிக்கப்பட்ட கூலித்தொகை தவிர அவர்களது அடிப்படை கூலியில் 10 விழுக்காடு ஊக்கத் தொகையாக வாரியம் வழங்கி வருகிறது.

இத்திட்டத்தின் கீழ் 2018-2019-ஆம் ஆண்டில் 840 கைவினைஞர்களுக்கு ரூ.32.00 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

### 4.3 உற்பத்தி திறனை மேம்படுத்திட உதவி

தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்தில் உற்பத்தி செய்யப்படுகின்ற பல்வேறு கதர் மற்றும் கிராமப் பொருட்களின் விற்பனையை மேம்படுத்துவதன் மூலம் அவைகளின் உற்பத்தியினை அதிகரித்து அதன் மூலம் உற்பத்தியாளர்களாகிய கிராமப்புற கைவினைஞர்களுக்கும் ஏழை எளிய தொழிலாளர்களுக்கும் கூடுதல் பலன் கிடைக்கும் வகையில் திருப்பூர், தூத்துக்குடி, சிவகங்கை மற்றும் இராமநாதபுரம் ஆகிய மாவட்டங்களில் செயல்பட்டு வரும் கதரங்காடிகளை ரூ.50.95 இலட்சம் செலவில் புனரமைக்கும் பணி மேற்கொள்ள அரசு நிதி ஒப்பளிப்பு செய்துள்ளது. அதன்படி இக்கதர் அங்காடிகளில் புனரமைப்பு பணி நடைபெற்று வருகிறது.

மேற்கண்ட மையங்களை தவிர மதுரை மாவட்டத்தில் கோடாங்கிபட்டி அலகில் ரூ. 7.00 இலட்சம் செலவில் மராமத்து பணிகள் மற்றும் நவீன இயந்திரங்கள் கொள்முதல் செய்யப்பட்டு நவீனபடுத்தப்பட்டுள்ளது.

மேலும், கதராணைக்குழுவால் கதரங்காடிகளை புனரமைப்பு பணிமேற்கொள்ள கீழ்க்குறிப்பிட்ட கதரங்காடிகளுக்கு வாரிய பங்கு தொகை 15% கதர் மற்றும் கிராமத் தொழில்கள் ஆணையத்தின் பங்கு தொகையாக 85% ஒதுக்கீடு செய்து அனுமதிக்கப்பட்டுள்ளது.

| வ எண். | கதர் அங்காடியின் பெயர் | மொத்த நிதி ஒதுக்கீடு (ரூபாய் இலட்சத்தில்) | கதர் மற்றும் கிராமத் தொழில்கள் ஆணையத்தின் பங்கு 85% | வாரிய பங்கு 15% |
|---|---|---|---|---|
| 1 | கதர் அங்காடி, திருநெல்வேலி | 14.00 | 11.90 | 2.10 |
| 2 | கதர் அங்காடி, கடலூர் | 23.82 | 17.00 | 6.82 |
| 3 | கதர் அங்காடி, திருவண்ணாமலை | 14.65 | 12.45 | 2.20 |

**5. வணிக அபிவிருத்தி நிதியுதவி திட்டம்**

கதர் உற்பத்தி மற்றும் விற்பனையினை ஊக்குவிக்கும் வகையில் கதர் கிராமத் தொழில்கள் ஆணையம் 2010-2011-ம் ஆண்டு ''வணிக அபிவிருத்தி நிதியுதவி திட்டத்தினை'' (MDA) அறிமுகப்படுத்தியது.

2016-2017 ஆண்டு முதல், வணிக அபிவிருத்தித் திட்டம் என்பதை திருத்திய வணிக அபிவிருத்தித் திட்டம் (MMDA) என மாற்றம் செய்து கதர் உற்பத்தி செய்யும் ஆரம்ப விலைக்கு 30% நிதியுதவி கணக்கிடப்பட்டு கீழ்கண்டவாறு காலாண்டு வாரியாக பிரித்து வழங்கப்படுகிறது.

| | | |
|---|---|---|
| 1. | நூற்போர் / நெசவாளர்களுக்கான ஊக்கத் தொகை | 30% |
| 2. | கைவினைஞர்களுக்கான ஊக்கத் தொகை | 10% |
| 3. | உற்பத்திக்கான உட்கட்டுமான பணி மற்றும் திறன் மேம்பாட்டு பயிற்சிக்காக (உற்பத்தி நிறுவனங்கள் ) | 20% |
| 4. | விற்பனை கூடங்களை கணினி மயமாக்குதல் (உற்பத்தி நிறுவனங்கள்) | 20% |
| 5. | வணிகம் மற்றும் விற்பனை அதிகரிப்பு (விற்பனை நிறுவனங்கள்) | 20% |

இத்திட்டத்திற்கு தேவையான வழிமுறைகள் கதர் கிராமத் தொழில் ஆணைக்குழுவால் அளிக்கப்பட்டு சர்வோதய சங்கங்களுக்கான மானியம் நேரடியாக நூற்பாளர்கள் மற்றும் நெசவாளர்களுக்கு மின்னணுத் தீர்வை மூலம் வழங்கப்படுகிறது. இதன் விவரம் கதர் கிராமத் தொழில்கள் ஆணைக்குழு இணையதளத்தில் உடனுக்குடன் பதிவேற்றம் செய்யப்படுகிறது.

30% ஊக்கத் தொகையானது, நூற்பாளர்/நெசவாளர்களின் வங்கிக் கணக்கிற்கு கதராணையம் மூலமாக ஒவ்வொரு

காலாண்டிற்கும் அனுப்பப்பட்டு வருகிறது. எஞ்சியுள்ள தொகை வாரியக் கணக்கில் வரவு வைக்கப்படுகிறது.

மாநில அரசு, கதர் உற்பத்தி மதிப்பின் மீது 20% வணிக அபிவிருத்தி நிதியுதவியாக வழங்கி வருகிறது. கதராணையத்திடமிருந்து பெறப்பட்ட வணிக அபிவிருத்தி நிதியுதவி விவரங்கள் கீழ்க்கண்டவாறு:

| வ.எண் | வருடம் | கதராணையத்திலிருந்து பெறப்பட்ட தொகை (ரூ.இலட்சத்தில்) |
|---|---|---|
| 1 | 2014-2015 | 208.94 |
| 2 | 2015-2016 | 287.99 |
| 3 | 2016-2017 | 290.44 |
| 4 | 2017-2018 | 325.66 |
| 5 | 2018-2019 | 210.43 |

2017-2018-ம் ஆண்டிலிருந்து மாநில அரசு, சர்வோதய சங்கங்களுக்கு வழங்கப்படும் நிதியுதவியின் உச்சவரம்பினை ரூ.15.00 கோடியிலிருந்து ரூ.30.00 கோடியாகவும் கதர் வாரியத்திற்கு வழங்கப்படும் நிதியுதவியின் உச்சவரம்பினை ரூ.2.00 கோடியிலிருந்து ரூ.4.00 கோடியாகவும் உயர்த்தியுள்ளது.

## 6. கிராமத் தொழில்கள்

கிராமப்புறத்தில் வேலைவாய்ப்பை உருவாக்குவதிலும், கிராமப்புற கைவினைஞர்களின் வருமானத்தை உயர்த்துவதிலும் கிராமத்தொழில்கள் முக்கிய பங்கு வகிக்கின்றன. தச்சு மற்றும் கருமாரத்தொழில், தோல் பொருட்கள், சோப்பு உற்பத்தி, கைமுறைகாகிதம், மண்பாண்டம், தேனீவளர்ப்பு மற்றும் பூஜைப் பொருட்கள் ஆகிய பல்வேறு தொழில்களுக்கு வாரியம் ஊக்கமளித்து வருகிறது. மாநிலம்

முழுவதும் உள்ள அரசு, அரசு சார்ந்த நிறுவனங்கள், சில்லறை விற்பனை நிலையங்கள் மற்றும் பொது விநியோக திட்டத்தின் மூலம் இப்பொருட்களின் விற்பனையினை ஊக்குவித்து அபிவிருத்தி செய்திட வாரியம் தொடர்ந்து நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

**6.1 சோப்பு அலகுகள்**

தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்தால் செயல்படுத்தப்படும் கிராமத் தொழில்களில் சோப்புத் தொழில் முதன்மை இடத்தை வகிக்கிறது. வாரிய கட்டுப்பாட்டில் செயல்படும் 13 சோப்பு அலகுகளில், 7 குளியல் சோப்பு அலகுகளும், 3 டிடர்ஜென்ட் சோப்பு அலகுகளும், 2 சலவை சோப்பு அலகுகளும் மற்றும் ஒரு திரவ சோப்பு மற்றும் ஷாம்பூ அலகும் அடங்கும்.

குளியல் சோப்பு அலகுகள் மூலம் வேம்பு, சந்தனம், கிளிசரின், மூலிகை, கார்பாலிக், குமரி, லாவண்டர் மற்றும் சிவப்பு சந்தனம் ஆகிய சோப்பு வகைகள் உற்பத்தி செய்யப்பட்டு வருகின்றன. இதனில் குமரி நறுமண சோப்பு வகையில் கற்றாழை கூழ் சேர்க்கப்படுவதால் நல்ல வரவேற்பை பெற்றுள்ளது.

மேற்படி குளியல் சோப்பு வகைகளை தவிர்த்து, டிடர்ஜென்ட் சோப்பு அலகுகள் மூலம் டிடர்ஜென்ட் சோப்பு மற்றும் பவுடர் ஆகியவை உற்பத்தி செய்யப்படுகின்றன. "கோபுரம்" எனும் பெயருடைய வாரிய டிடர்ஜென்ட் சோப்பு வகையானது மாநிலத்திலுள்ள பொது விநியோகத் திட்டத்தின்கீழ் செயல்படும் கூட்டுறவு நியாய விலை அங்காடிகளில் விற்பனை செய்யப்பட்டு வருகிறது. சோப்பு வகைகள் வாரிய கதரங்காடிகளின் மூலம் விற்பனை செய்யப்படுவதுடன் இணைய தள (ஆன்லைன்) வர்த்தகம்

மற்றும் பல்பொருள் அங்காடிகளின் மூலமாகவும் விற்பனை செய்திட வாரியம் அனைத்து வகைகளிலும் நடவடிக்கை மேற்கொண்டு வருகிறது.

வாரிய சோப்பு வகைகள் 2018-2019ம் ஆண்டில் முறையே ரூ. 1123.14 இலட்சம் மற்றும் ரூ. 1113.29 இலட்சம் மதிப்பிற்கு உற்பத்தி மற்றும் விற்பனையை எய்துள்ளன.

வாரியமானது சிவகங்கை மாவட்டம் கண்டனூர் கதர்வளாகத்தில் ரூ.30.00 இலட்சம் மதிப்பில் ஒரு திரவ சோப்பு மற்றும் ஷாம்பு தயாரிக்கும் அலகினை நிறுவியுள்ளது. இவ்வலகில் கை கழுவும் திரவம், குளியல் திரவம் மற்றும் ஷாம்பு ஆகியவை உற்பத்தி செய்யப்பட்டுவருகின்றன.

திண்டுக்கல் மாவட்டம் வேடப்பட்டியில் மெழுகுவர்த்தி உற்பத்திக்கு புதிய இயந்திரங்கள் நிறுவப்பட்டு கவரும் விதமாக வெவ்வேறு அளவுகளில் மெழுகுவர்த்திகள் உற்பத்தி செய்யப்பட்டு வருகின்றன. காஞ்சிபுரம் மாவட்டம் திருக்கழுக்குன்றம் சோப்பு அலகில் புதிய திட்டங்களின் மூலம் தானியங்கி சோப்பு முத்திரை பதிக்கும் இயந்திரம் நிறுவ நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

### 6.2 தச்சு மற்றும் கருமார அலகுகள்

கிராமப்புற கைவினைஞர்களுக்கு சிறந்த வேலைவாய்ப்பு அளிப்பதில் தச்சு மற்றும் கருமாரத் தொழில் மற்றொரு முக்கிய கிராமத் தொழிலாகக் கருதப்படுகிறது. வீரராகவபுரம், அரக்கோணம், பள்ளிகொண்டா, நாகமலை-புதுக்கோட்டை, நாஞ்சிக்கோட்டை, பேட்டை மற்றும் திருப்பூர் ஆகிய 7 இடங்களில் வாரிய கட்டுப்பாட்டின் கீழ் தச்சு மற்றும் கருமார அலகுகள் இயங்கி வருகின்றன.

அரசுத் துறைகள், நீதிமன்றங்கள், பல்கலைக் கழகங்கள், இந்து சமய அறநிலையத் துறை, கல்வி நிறுவனங்களுக்கு தேவையான மரம் மற்றும் இரும்பு தளவாடங்கள் சிறந்த முறையில் நல்ல தரத்துடன் தயார் செய்யப்பட்டு விநியோகம் செய்யப்பட்டு வருகின்றன.

மண்பாண்ட தொழிலாளர்களின் பொருளாதார நிலை மேம்பட நவீன தொழில் நுட்பத்துடனும், மாறுபட்ட வேகத்துடனும் கூடிய சீலாவீல் மின்சக்கரம் அரக்கோணம் மற்றும் பள்ளிகொண்டா, தச்சுக் கொல்லு அலகுகளில் உற்பத்தி மேற்கொண்டு 2000 பயனாளிகளுக்கு விநியோகம் செய்யப்பட்டன.

திருப்பூர் மாவட்டத்தில் உள்ள தச்சு கருமார அலகில் ரூ.2.00 இலட்சம் செலவில் நவீன இயந்திரங்கள் நிறுவப்பட்டுள்ளது. மேலும், மதுரை மாவட்டத்தில் உள்ள நாகமலை-புதுக்கோட்டை தச்சு கருமார அலகில் ரூ.4.00 இலட்சம் செலவில் புதிய இயந்திரங்கள் மற்றும் மின் சாதனங்கள் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது.

2018-19ஆம் ஆண்டு இவ்வலகுகளில் ரூ.631.59 இலட்சம் அளவிற்கு உற்பத்தியும், ரூ. 562.38 இலட்சம் அளவிற்கு விற்பனையும் எய்தப்பட்டுள்ளன.

### 6.3 தோல் அலகுகள்

தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்தின் கீழ் செயல்படும் பல்வேறு தொழில்களில், தோல் தொழில் முக்கியமான இடத்தை பெற்றுள்ளது. இவ்வாரியத்தின் கட்டுப்பாட்டில் 13 காலணி உற்பத்தி அலகுகள் செயல்பட்டு வருகின்றன. காவல் துறைக்கு தேவையான அம்யூனிஷன் பூட்ஸ், ஷூ, பெல்ட், துப்பாக்கி உறை, கிரவுண்டு சீட் போன்ற பொருட்கள் திருவள்ளூர் மாவட்டத்தில் உள்ள அம்பத்தூர்

காலணி அலகில் நவீன இயந்திரங்களைக் கொண்டு உற்பத்தி மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. போக்குவரத்துக் கழகங்கள், உள்ளாட்சி நிறுவனங்களுக்குத் தேவையான நடத்துனர் பணப்பைகள், கையுறை, காலணிகள், கோப்புப் பெட்டிகள், இரப்பர் நார் மெத்தைகள் போன்றவை இதர தோல் உற்பத்திக் கூடங்கள் மூலம் உற்பத்தி செய்யப்பட்டு வருகின்றன. இதன் மூலம் சுமார் 300 கைவினைஞர்கள் நேரிடையாகவும் 500 கைவினைஞர்கள் மறைமுகமாகவும் வேலை வாய்ப்பினை பெற்று வருகிறார்கள்.

2018-2019-ம் ஆண்டு காலணி அலகுகளில் ரூ.421.13 இலட்சம் மதிப்பிற்கு உற்பத்தியும் ரூ.428.44 இலட்சம் அளவிற்கு விற்பனையும் எய்தப்பட்டுள்ளன.

## 6.4 தேன் பதப்படுத்தப்படும் அலகு

வாரிய கிராமத் தொழில்களில் தேனீ வளர்ப்பு தொழிலும் முதன்மை இடத்தைப் பெறுகிறது. கன்னியாகுமரி மாவட்டத்தில் சுமார் 2000 தேனீ வளர்ப்போரும் மற்றும் 10,000 தேனீ விவசாயிகளும் இத்தொழிலில் ஈடுபட்டுள்ளனர். தேனீ விவசாயிகளிடமிருந்து கொள்முதல் செய்யப்படும் பச்சை தேன், அம்சி தேன் பதப்படுத்தும் நிலையத்தில் பதப்படுத்தப்பட்டு, "**அக்மார்க்**" தரச்சான்றிதழுடன் வாரிய கதரங்காடிகள் மூலம் விற்பனை செய்யப்படுகிறது.

"**காதி கிராப்ட்**" மூலம் விற்பனை செய்யப்படும் தேன் நல்ல தரத்துடன் இருப்பதால் வாடிக்கையாளர்களிடம் மிகுந்த வரவேற்பை பெற்றுள்ளது. 2018 – 2019ம் ஆண்டில் தேன் உற்பத்தி மற்றும் விற்பனை முறையே ரூ.154.45 இலட்சம் மற்றும் ரூ. 161.19 இலட்சம் எய்தப்பட்டுள்ளது.

### 6.5 கைமுறை காகித அலகுகள்

வாரியத்தின் கட்டுப்பாட்டின்கீழ் நான்கு கைமுறை காகித அலகுகள் பிடாகம் (விழுப்புரம் மாவட்டம்), செண்பகபுதூர் (ஈரோடு மாவட்டம்), கோவனூர் மற்றும் ஊட்டி ஆகிய இடங்களில் செயல்பட்டு வருகின்றன. இவற்றைத் தவிர்த்து பிளாஸ்டிக் பொருட்கள் தடை செய்யப்பட்டதைத் தொடர்ந்து காகிதப் பொருட்களுக்கான தேவையினை பூர்த்தி செய்யும் பொருட்டு கடலூர் மாவட்டம் வடலூரில் ஒரு புதிய அலகு நிறுவப்பட்டு வருகிறது.

இவ்வலகுகளில் உற்பத்தி செய்யப்படும் கச்சா அட்டைகள், கோப்பு அட்டைகள், மெல்லிய காகித உறைகள், தடித்த தாள்கள், அலுவலக உறைகள், மேலுறைகள், அட்டைப் பெட்டிகள் ஆகியவற்றுடன் அரசுத்துறைகளிடமிருந்து கோப்பு உறைகள் விநியோகம் செய்வதற்கான தேவை நமூனா அதிக அளவில் வாரியத்திற்கு கிடைக்கப் பெறுகிறது.

சுமார் 130 தொழிலாளர்கள் வாரிய கைமுறை காகித அலகுகள் மூலம் தொடர் வேலைவாய்ப்பை பெற்று வருகின்றனர். இவ்வலகுகள் மூலம் 2018-2019ம் ஆண்டிற்கு உற்பத்தி மற்றும் விற்பனை முறையே ரூ.55.58 இலட்சம் மற்றும் ரூ.54.80 இலட்சம் எய்தப்பட்டுள்ளது.

### 6.6 மண்பாண்டத் தொழில்

வாரிய கிராமத் தொழில்களில் மண்பாண்டத் தொழிலும் ஒரு ஊக்குவிக்கும் தொழிலாக விளங்குவதோடு கிராமப்புறங்களில் வசிக்கும் மண்பாண்டத் தொழிலாளர்கள் இத்தொழில் மூலம் ஒரு நிலையான வருமானத்தை ஈட்டுகின்றனர். வாரியத்தின் கட்டுப்பாட்டின்கீழ் இயங்கும் 34 மண்பாண்ட கூட்டுறவுச் சங்கங்களில் சுமார் 3500 நபர்கள் உறுப்பினர்களாக உள்ளனர்.

மழைக்காலங்களில் இத்தொழிலில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்களுக்கு ஏற்படும் இன்னல்களை கருத்தில்கொண்டு, வருடந்தோறும் தொழிலாளர் குடும்பம் ஒன்றுக்கு ரூ.5000/- மழைக்கால நிவாரணமாக வழங்கப்பட்டு வருகிறது. இதனால் சுமார் 12,111 மண்பாண்ட தொழிலாளர்கள் பயனடைகின்றனர்.

## 6.7. இதர கிராமத் தொழில் அலகுகள்

திண்டுக்கல் மாவட்டம் வேடப்பட்டியில் ஜவ்வாது உற்பத்தி அலகு செயல்பட்டு வருகிறது. இவ்வலகில் ஜவ்வாது பவுடர், அகர்பத்தி, சாம்பிராணி, சந்தன மாலைகள், மூலிகை பல்பொடி மற்றும் இதர பூஜை பொருட்கள் வருடத்திற்கு சுமார் ரூ.60.00 இலட்சம் மதிப்பில் உற்பத்தி செய்யப்பட்டு வாரிய கதரங்காடிகளின் மூலம் விற்பனை செய்யப்பட்டு வருகின்றன.

நீலகிரி மாவட்டம் உதகையில் நீலகிரி தைல உற்பத்தி அலகு ஒன்றும் செயல்பட்டு வருகிறது. இவ்வலகில் பச்சைத் தைலத்தினை கொள்முதல் செய்து பதப்படுத்தி நீலகிரி தைலம் உற்பத்தி செய்வதோடு, தரை சுத்தம் செய்யும் திரவ உற்பத்தியும் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேலும் நீலகிரி தைலம், மென்தால், கற்பூரம் மற்றும் இதர மூலப்பொருட்களை கொண்டு "சுகப்பிரியா" என்ற பெயரில் வலி நிவாரணி தைலம் இவ்வலகில் உற்பத்தி செய்யப்பட்டு கதரங்காடிகள் மூலம் விற்பனை செய்யப்பட்டு வருகிறது. மேற்படி பொருட்கள் வருடத்திற்கு சுமார் ரூ.10.00 இலட்சம் மதிப்பிற்கு கதரங்காடிகள் மூலம் விற்பனை செய்யப்பட்டு வருகின்றன.

## 7. விற்பனை நிலையங்கள்

தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்தால் பல்வேறு விற்பனை நிலையங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. இவற்றில் தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்தின் பல்வேறு அலகுகளில் உற்பத்தி செய்யப்படும் கதர் மற்றும்

கிராமப் பொருட்களை பெரிய அளவில் சந்தைப்படுத்திட ஏதுவாக சென்னை குறளக கட்டடத்தில் ‘**காதி கிராப்ட்**’ பிரதான கதர் அங்காடி செயல்பட்டு வருகிறது. மாநிலம் முழுவதும் 51 கதர் அங்காடிகள் செயல்பட்டு வருகின்றன. வாரிய அலகுகளில் உற்பத்தி செய்யப்படும் பொருட்களைத் தவிர, சுய உதவிக்குழுக்கள் மற்றும் பாரம்பரிய கைவினைஞர்கள் உற்பத்தி செய்யும் கைவினைப் பொருட்களும் இந்த கதரங்காடிகள் மூலம் விற்பனை செய்யப்பட்டு வருகின்றன.

கண்காட்சிகள் மற்றும் கிராமப்புறங்களில் சிறப்பு முகாம்கள் நடத்துவதன் மூலம் கதர் மற்றும் கிராமத் தொழில் உற்பத்தி பொருட்களின் விற்பனையினை மக்களிடையே பிரபலப்படுத்திட சிறப்புக் கவனம் செலுத்தப்படுகின்றது. தசரா பண்டிகை காலத்தில் சென்னை குறளக கதரங்காடியில் நடைபெறும் வருடாந்திர நவராத்திரி பொம்மை கொலு விற்பனை கண்காட்சி பிரசித்தி பெற்றதாகும். இக்கண்காட்சியில், மண்பாண்ட கூட்டுறவு சங்க உறுப்பினர்களால் உற்பத்தி செய்யப்படும் பாரம்பரிய மற்றும் நிகழ்கால கலைநயம் மிக்க காகித கூழ் மற்றும் மண் பொம்மைகளைச் சந்தைப்படுத்தி விற்பனை செய்திடுவதற்கு உகந்த தளமாகத் திகழ்கிறது.

கடந்த மூன்று ஆண்டுகளின் உற்பத்தி மற்றும் விற்பனை விபரம் கீழ்கண்டவாறு:-

| வ. எண் | வருடம் | உற்பத்தி | விற்பனை |
|---|---|---|---|
| | | (ரூ.இலட்சத்தில்) | |
| 1 | 2016-17 | 2512.78 | 3005.44 |
| 2 | 2017-18 | 2345.40 | 2278.12 |
| 3 | 2018-19 | 2445.92 | 2481.26 |

## 8. பிரதம மந்திரியின் வேலை வாய்ப்பு உருவாக்கும் திட்டம்

மத்திய அரசின் குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில்கள் அமைச்சகம் "**பிரதம மந்திரியின் வேலை வாய்ப்பு உருவாக்கும் திட்டம்**" என்ற பெயரில் 2008-09 ஆம் ஆண்டு முதல் தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம், தமிழ்நாடு தொழில் வணிகத் துறை மற்றும் கதர் கிராமத் தொழில் ஆணைக்குழு ஆகியவற்றின் மூலம் இத்திட்டம் சிறப்பாக செயல்படுத்தப்பட்டு வருகிறது. பிரதம மந்திரியின் வேலைவாய்ப்பு உருவாக்கும் திட்டமானது கடந்த 01.07.2016 முதல் கணினி இணைய வாயிலாக நடைமுறைப்படுத்தப்பட்டு சிறப்பாக செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இத்திட்டத்தின் மூலம் வங்கி கடனாக உற்பத்திப் பிரிவிற்கு அதிகபட்சம் 25 இலட்ச ரூபாயும் மற்றும் சேவைப் பிரிவிற்கு அதிகபட்சம் 10 இலட்ச ரூபாய்க்கு தொழில் துவங்க அனுமதிக்கப்படுகிறது. கல்வித் தகுதியானது உற்பத்திப் பிரிவின் கீழ் 10 இலட்ச ரூபாய் மேற்பட்ட திட்டங்களுக்கும் சேவைப்பிரிவின் கீழ் 5 இலட்ச ரூபாய்க்கு மேற்பட்ட திட்டங்களுக்கும், பயனாளிகள் குறைந்தபட்சம் 8ஆம் வகுப்பு தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். தொழில்முனைவோர்களுக்கு 10 தினங்களுக்கு தொழில் மேம்பாட்டு பயிற்சி சம்பந்தப்பட்ட வங்கியாளர்களால் வழங்கப்படுகிறது.

**இந்த திட்டத்தின் கீழ் மானியத்தின் அளவு**

| பயனாளிகள் வரும் பிரிவு | சொந்த முதலீடு | மானியத்தின் அளவு | |
|---|---|---|---|
| இடம் | திட்ட மதிப்பீடு | | |
| | | நகர்ப்புறம் | கிராமப்புறம் |
| பொதுப் பிரிவு | 10% | 15% | 25% |
| சிறப்பு பிரிவினர் (தாழ்த்தப்பட்டோர் / பழங்குடியினர் / இதர பிற்படுத்தப்பட்டோர் / சிறுபான்மையினர் / முன்னாள் இராணுவத்தினர் / மாற்றுத் திறனாளிகள் / பெண்கள்) | 5% | 25% | 35% |

2014-15 ஆம் ஆண்டு முதல் 2018-19 ஆம் ஆண்டு வரை வழங்கப்பட்ட விளிம்புத் தொகை மானிய விவரம் பின்வருமாறு:

| ஆண்டு | (திட்டம் எண்ணிக்கையில்/ரூபாய் இலட்சத்தில்) | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | குறியீடு | | | சாதனை | | |
| | செயல் இலக்கு | நிதி இலக்கு | வேலை வாய்ப்பு எண்ணிக் கை | செயல் இலக்கு | நிதி இலக்கு | வேலை வாய்ப்பு எண்ணிக் கை |
| 2014-15 | 1218 | 1447.49 | 9744 | 845 | 1726.62 | 9151 |
| 2015-16 | 765 | 1530.24 | 6120 | 686 | 1605.56 | 6021 |
| 2016-17 | 1261 | 2521.50 | 10088 | 745 | 2166.48 | 8384 |
| 2017-18 | 1810 | 3570.00 | 14480 | 882 | 1680.74 | 6723 |
| 2018-19 | 822 | 2400.94 | 6576 | 1078 | 2236.49 | 6106 |

**மேம்படுத்த/விரிவுப்படுத்த பிரதம மந்திரியின் வேலை வாய்ப்பு உருவாக்கும் திட்டத்தின் கீழ் கடன் வசதி**

பிரதம மந்திரியின் வேலைவாய்ப்பு உருவாக்கும் திட்டத்தில் 2018-2019 ஆம் ஆண்டு முதல் ஏற்கனவே மானியம் பெற்று திறம்பட செயல்பட்டுக் கொண்டிருக்கும் பழைய யூனிட்டுகள், தங்களுடைய யூனிட்டை விரிவுபடுத்தவும், நவீனமயமாக்கவும், அவர்களுக்கு மீண்டும் ஒருமுறை கடன்தொகை கொடுத்து உதவிட, “இரண்டாம் முறை பிரதம மந்திரியின் வேலைவாய்ப்பு உருவாக்கும் திட்ட கடன்தொகை" என்ற திட்டத்தை இந்திய அரசாங்கம் அறிமுகப்படுத்தியுள்ளது. இதற்காகவே, PMEGP e-portal வலைதளத்தில் தனியாக இணையதள (ஆன்லைன்) பகுதி உருவாக்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்தில், உற்பத்தி சார்ந்த தொழில்களுக்கு ரூ.1.00 கோடி வரையிலும், சேவை சார்ந்த தொழில்களுக்கு ரூ.25.00 இலட்சம் வரையிலும் கடன்தொகை அனுமதிக்கப்படும். மேலும், அனைத்து பிரிவினருக்கும், திட்ட மதிப்பீட்டில் பயனாளியின் சொந்த முதலீடு 10% ஆகவும்

வங்கிக்கடன் 90% ஆகவும் நிர்ணயிக்கப்பட்டு மொத்த திட்ட மதிப்பீட்டில், அனைத்து பிரிவினருக்கும் மானியத் தொகையாக 15 சதவீதம் வழங்கப்படும்.

**9. வாரியத்திற்கு சொந்தமான கட்டடங்களை புனரமைத்தல்**

குறளக கட்டடத்தில் தரைதளத்தில் இயங்கும் பிரதான கதர் அங்காடியில் பட்டுப்புடவைகளின் விற்பனையை அதிகரித்திட பட்டுபுடவை விற்பனைக்கென பிரத்யேகமாக வடிவமைக்கப்பெற்ற உள் அலங்கார வசதியுடன் கூடிய நவீன விற்பனை பிரிவு தொகை ரூ.9.60 இலட்சத்தில் அமைக்கப்பட்டுள்ளது.

குறளக கட்டடத்தில் உரிய தீயணைப்பு கருவிகளை பொருத்தி பாதுகாப்பு அம்சத்துடன் பராமரிக்க தமிழ்நாடு தீயணைப்பு மற்றும் மீட்பு பணிகள் துறையினர் வழங்கிய ஆலோசனைப்படி ஐந்து மாடிகள் கொண்ட குறளக கட்டடத்தில் **Fire Fighting Equipments with Fire Hydrant System, Electric Fire alarm** ஆகியவை தொகை ரூ.22.56 இலட்சத்தில் பொருத்தப்பட்டுள்ளது.

சென்னை கோயம்பேடு புறநகர் பேருந்து நிலைய வளாகத்தில் இயங்கி வரும் கதர் அங்காடியில் உள்ள வாரிய விற்பனை பொருட்கள் விற்பனையினை அதிகரித்திட கோயம்பேடு கதர் அங்காடியினை நவீன முறையில் ரூ.9.23 இலட்சத்தில் புனரமைக்கப்பட்டுள்ளது.

## 10. கதர் மற்றும் கிராமத் தொழில் பொருட்களின் உற்பத்தி மற்றும் விற்பனை

2018-2019-ஆம் ஆண்டில் தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரிய அலகுகளின் மூலம் மேற்கொள்ளப்பட்ட ஒட்டு மொத்த உற்பத்தி மற்றும் விற்பனை விவரங்கள் பின்வருமாறு:-

| வ. எண் | தொழில்களின் பெயர் | 2018-2019-ஆம் ஆண்டில் எய்தப்பட்டது (ரூ. இலட்சத்தில்) | |
|---|---|---|---|
| | | உற்பத்தி | விற்பனை |
| 1. | கதர் | 1524.46 | 1454.48 |
| 2. | கிராமத் தொழில்கள் | | |
| | அ. தோல் | 421.13 | 428.44 |
| | ஆ. தச்சு மற்றும் கருமாரத் தொழில் | 631.59 | 562.38 |
| | இ. சோப்பு | 1123.14 | 1113.29 |
| | ஈ. கைமுறைக் காகிதம் | 55.58 | 54.80 |
| | உ. தேனீ வளர்ப்பு | 154.45 | 161.19 |
| | ஊ. இதர தொழில்கள் | 60.03 | 161.16 |
| | **கூடுதல்** | 2445.92 | 2481.26 |
| | **மொத்த கூடுதல்** | **3970.38** | **3935.74** |

## 11. அரசிடமிருந்து பெறப்படும் நிதியுதவி

தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரிய பணியாளர்களுக்கு ஊதியம் மற்றும் ஓய்வூதியம் வழங்கிட நிகர ஈட்டு மானியமும், கதர் பொருட்களுக்கு வணிக அபிவிருத்தி நிதியுதவியினையும் மாநில அரசு ஒப்பளித்து வருகிறது. 2019-2020–ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டில் தமிழ்நாடு கதர்

கிராமத் தொழில் வாரியம் மற்றும் தமிழ்நாடு பனை பொருள் வளர்ச்சி வாரியத்திற்கு அரசு ஒப்புதல் வழங்கிய நிதியுதவி விவரம் பின்வருமாறு:

<table>
<tr><th>வ. எண்</th><th colspan="2">விபரம்</th><th>தொகை (ரூ. இலட்சத்தில்)</th></tr>
<tr><td>1.</td><td colspan="2">கதர் மேம்பாட்டிற்கான மானியங்கள்</td><td>8605.00</td></tr>
<tr><td rowspan="2">2.</td><td rowspan="2">தள்ளுபடி</td><td>கதர் வாரியம்</td><td>400.00</td></tr>
<tr><td>சான்றளிக்கப்பட்ட நிறுவனங்கள்</td><td>3000.00</td></tr>
<tr><td>3.</td><td colspan="2">தணிக்கை கட்டணம்</td><td>394.69</td></tr>
<tr><td>4.</td><td colspan="2">கிராமத் தொழில் மேம்பாட்டிற்கு உதவி</td><td>0.01</td></tr>
<tr><td>5</td><td colspan="2">தமிழ்நாடு பனை பொருள் வளர்ச்சி வாரியம்</td><td>0.01</td></tr>
<tr><td>6.</td><td colspan="2">மண்பாண்ட தொழிலாளர்களுக்கு பராமரிப்பு உதவித்தொகை</td><td>594.25</td></tr>
<tr><td>7.</td><td colspan="2">கதர் நூல் நூற்போர் மற்றும் நெசவாளர் நலவாரியம்</td><td>0.01</td></tr>
<tr><td>8.</td><td colspan="2">மண்பாண்ட தொழிலாளர்களுக்கு சீலா சக்கரங்கள் வழங்குதல்</td><td>408.00</td></tr>
<tr><td></td><td colspan="2">மொத்தம்</td><td>13401.97</td></tr>
</table>

# தமிழ்நாடு பனை பொருள் வளர்ச்சி வாரியம்

## 1. நோக்கங்கள்

தமிழ்நாடு பனை பொருள் வளர்ச்சி வாரியம், தமிழ்நாடு சட்டம் 15-ன் கீழ் 1994-1995-ஆம் ஆண்டில் சென்னையை தலைமை இடமாகக் கொண்டு துவங்கப்பட்டது. பனைத் தொழிலில் ஈடுபட்டுள்ள பனைத் தொழிலாளர்களின் வாழ்கைத் தரத்தை மேம்படுத்தும் வகையில் பனை பொருட்களின் உற்பத்தியை அதிகரித்திட நிறுவன ரீதியான உதவிகளை வழங்குதல், பனைத் தொழிலாளர்களை ஒருங்கிணைத்து கூட்டுறவு அமைப்புகள் மூலம் பனை தொழிலை நிலைபெறச் செய்து மேம்படுத்துதல் போன்றவை பனை பொருள் வளர்ச்சி வாரியத்தின் முக்கிய நோக்கங்கள் ஆகும்.

## 2. பனை வெல்ல கூட்டுறவு சங்கங்கள் மற்றும் சம்மேளனங்கள்

720 ஆரம்ப பனை வெல்ல உற்பத்தி கூட்டுறவு சங்கங்கள், எட்டு மாவட்ட பனை வெல்ல விற்பனை கூட்டுறவு சம்மேளனங்கள் மற்றும் ஒரு மாநில பனை வெல்ல மற்றும் தும்பு விற்பனை கூட்டுறவு இணையம் ஆகியவை தமிழ்நாடு பனை பொருள் வளர்ச்சி வாரியத்தின் கட்டுப்பாட்டில் செயல்பட்டு வருகின்றன. இவை அனைத்தும் நேரடியாக பனை பொருட்கள் உற்பத்தி மற்றும் விற்பனையில் ஈடுபட்டு வருகின்றன.

## 3. பனை பொருட்கள்

“பதநீர்” பனை பொருட்களில் முதன்மையானதாகும். பதநீரை மூலப் பொருளாகக் கொண்டே கருப்பட்டி என அழைக்கப்படும் பனை வெல்லம், பனஞ்சீனி, பனங்கற்கண்டு, பனங்கற்கண்டு மிட்டாய், கருப்பட்டி அல்வா, பனை சாக்லேட் மற்றும் பனம் பழகூழ் போன்ற பல்வேறு உணவுப் பொருட்கள்

உற்பத்தி செய்யப்படுகின்றன. பனை மரங்கள் அதிகமாக உள்ள பகுதிகளில், பருவ காலத்தில் பனை மரத்திலிருந்து இறக்கப்படும் பதநீர் மிகவும் விரும்பி அருந்தக் கூடிய ஒரு பிரபலமான பானமாகும்.

பனையிலிருந்து உண்ணாப் பொருட்களான பல்வேறு வகையான பனந்தும்பு தூரிகைகள், விசிறிகள், பாய்கள், பனை ஓலையினாலான பல்வேறு வகை கூடைகள், பனை நார் பொருட்கள், பொம்மைகள் மற்றும் பல்வேறு வகையான இயற்கையான மற்றும் வண்ணம் பூசப்பட்ட கைவினைப் பொருட்கள் போன்றவை பனைத் தொழில் கைவினைஞர்களால் தயாரிக்கப்படுகின்றன.

## 4. பதநீர் இறக்குவதற்கான உரிமம்

பனை மரத்திலிருந்து இறக்கப்படும் பதநீர் தவறாக பயன்படுத்தப்படுவதைத் தடுக்கும் வகையில் பதநீர் இறக்கவும், விற்பனை செய்யவும் உரிமம் பெற அரசாணை வழங்கியுள்ளது. அவ்வரசாணையில் ஒவ்வொரு நிதி ஆண்டு காலத்திலும் தமிழ்நாடு பனை பொருள் வளர்ச்சி வாரியம் இதற்கான உரிமத்தினை புதுப்பித்து வழங்க அனுமதி அளித்துள்ளது.

2018 – 2019-ஆம் ஆண்டில், கதர் கிராமத் தொழில்கள், உதவி இயக்குநர்கள் மூலமாக அந்தந்த மாவட்டங்களைச் சேர்ந்த 9768 பனைத் தொழிலாளர்களுக்கு பதநீர் இறக்கவும் விற்பனை செய்யவும் உரிமம் வழங்கப்பட்டுள்ளது.

## 5. நிர்வாகம்

தமிழ்நாடு பனை பொருள் வளர்ச்சி வாரியத்திற்கென தனியே வரவு செலவு திட்ட ஒதுக்கீடு ஏதுமில்லை. தலைமைச் செயல் அலுவலர் (அலுவலால்) உட்பட தமிழ்நாடு பனை பொருள் வளர்ச்சி வாரியத்தின் பணியாளர் அனைவரும்,

தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்தின் பணியமைப்பிலிருந்து பணியமர்த்தப்பட்டு பணிபுரிந்து வருகின்றனர். தமிழ்நாடு பனை பொருள் வளர்ச்சி வாரியத்தின் கட்டுப்பாட்டிலுள்ள ஆரம்ப பனை வெல்ல உற்பத்தி கூட்டுறவு சங்கங்கள், மாவட்ட மற்றும் மாநில பனை வெல்ல கூட்டுறவு சம்மேளனங்கள் ஆகியவற்றிற்கு தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்தின் தலைமைச் செயல் அலுவலரே "செயற்பதிவாளர்" ஆவார்.

## 6. பனைத் தொழிலாளர்களுக்கான உதவிகள்

நவீன கருவிகள் மூலம் பனைமரம் ஏறுவதற்கான பயிற்சி வகுப்புகள் நடத்துதல், பதநீர் இறக்கவும், பனை வெல்லம் காய்ச்சவும் தேவையான கருவிகளை வழங்குதல் மற்றும் பனை பொருட்களை விற்பனை செய்ய உதவுதல் ஆகியவற்றின் மூலம் பனைத் தொழிலாளர்களுக்கு தமிழ்நாடு பனை பொருள் வளர்ச்சி வாரியம் உதவி வருகிறது.

2018-2019-ஆம் ஆண்டில் பனை தொழிலை மேம்படுத்திடவும் குறிப்பாக பனை வெல்லம் கொண்டு தயாரிக்கப்பட்ட உடனடி சுக்கு காபி பவுடர் (Palm Jaggery MixedInstant Sukku Coffee Powder) நவீன முறையில் மூலப் பொருட்களின் படங்களுடன் வண்ண லேபிள் கொண்ட அழகிய 100 கிராம் அளவு கொண்ட பைகளில் தானியங்கி இயந்திரம் மூலம் அடைத்து அனைத்து மக்களும் உபயோகிக்கும் வண்ணம் ரூ.1.65 லட்சம் மதிப்பீட்டில் பனை வெல்லம் கலந்த சுக்கு காபி பவுடர் அடைக்கும் தானியங்கி இயந்திரம் கொள்முதல் செய்திட தமிழ்நாடு மாநில பனைவெல்லம் மற்றும் தும்பு விற்பனை கூட்டுறவு இணையத்திற்கு அரசு அனுமதி அளித்துள்ளது. இவ்வியந்திரத்தை வாங்குவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

பனை மரத்தில் இருந்து கிடைக்கும் இயற்கை சுவைநீரான பதநீரை காய்ச்சி, அதனைக் கொண்டு உற்பத்தி செய்யும் பனை வெல்லத்தை அதிக காலம் பயன்படுத்திட ஏதுவாக ரூ.3.50 இலட்சம் செலவில் பனை வெல்லம் உலர வைக்கும் (Palm Jaggery Drier) நவீன தானியங்கி இயந்திரம் ஒன்றினை, தமிழக அரசு வழங்கிய அனுமதியின் அடிப்படையில், தமிழ்நாடு மாநில பனைவெல்லம் மற்றும் தும்பு விற்பனை கூட்டுறவு இணையம் கொள்முதல் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

“பனை மரம்" தமிழ்நாட்டின் “மாநில மரமாகும்". பனை மரத்தில் இருந்து கிடைக்கும் அனைத்து வகையான மூல பொருட்களையும் பயன்படுத்தி அதிக அளவில் உற்பத்தி செய்யப்படும் பலவகைப்பட்ட உண்ணும் மற்றும் உண்ணா பொருட்களையும் கதர் கிராமப் பொருட்களையும் சென்னை நகரைச் சுற்றியுள்ள அனைத்து பகுதிகளிலும் விற்பனை செய்யப்பட்டு வருகிறது.

### 7. பனை பொருட்கள் மற்றும் சுக்கு காபி விற்பனை

பொதுமக்களிடம் தற்போது இயற்கை உணவு குறித்த விழிப்புணர்வு ஏற்பட்டுள்ள நிலையில், ஒன்பது மூலிகைப் பொருட்களைக் கொண்டு தயாரிக்கப்படும் “**பனைவெல்லம் கலந்த சுக்கு காபி**" சென்னையில் பல்வேறு பிரதான இடங்களான சென்னை மெரினா கடற்கரை, தலைமைச் செயலகம், குறளகம் மெட்ரோ இரயில் நிலையம் அருகில், கோயம்பேடு பேருந்து நிலையம், தீவுத்திடல் போன்ற இடங்களில் விற்பனை செய்யப்பட்டு வருகிறது. மேலும், சேலம், ஏற்காடு, சென்னை உயர்நீதிமன்ற மதுரைகிளை, திருநெல்வேலியிலுள்ள பாளையம்கோட்டை, ஊட்டி, டாக்டர் A.P.J அப்துல்கலாம் நினைவிடம், மற்றும் திருவண்ணாமலை மாவட்டத்தில் மாதந்தோறும் பௌர்ணமி தினத்தன்று கிரிவலம்

பாதையில் சுக்கு காபி, கதர் மற்றும் பனை பொருட்கள் விற்பனை செய்யப்பட்டு வருகிறது.

பனை பொருட்களின் விற்பனை மேற்கொள்ள பிரத்யேகமான ஒரு பனை பொருள் விற்பனை அங்காடி சென்னை குறளக வளாகத்தில் இயங்கி வருகிறது.

**8. பனை பொருட்களின் உற்பத்தி மற்றும் விற்பனை**

2018 – 2019 ஆம் ஆண்டில், ரூ.1516.95 இலட்சம் மதிப்பிலான பனை பொருட்கள் உற்பத்தி செய்யப்பட்டு, ரூ.1658.96 இலட்சத்திற்கு விற்பனை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**கடந்த ஐந்து ஆண்டுகளில் உற்பத்தி மற்றும் விற்பனை**

| ஆண்டு | உற்பத்தி (ரூ. இலட்சத்தில்) | விற்பனை (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|
| 2014-2015 | 1241.00 | 1373.00 |
| 2015-2016 | 1337.03 | 1462.09 |
| 2016-2017 | 1344.97 | 1484.30 |
| 2017-2018 | 1463.12 | 1629.23 |
| 2018-2019 | 1516.95 | 1658.96 |


மேற்கண்ட அட்டவணையிலிருந்து பனை பொருட்களின் உற்பத்தி மற்றும் விற்பனை கடந்த ஐந்து ஆண்டுகளில் ஆண்டுதோறும் சீரான வளர்ச்சியடைந்து வருவதை அறிய முடிகிறது.

**க.பாஸ்கரன்**
கதர் மற்றும் கிராமத் தொழில்கள்
வாரியத்துறை அமைச்சர்


# பட்டுவளர்ச்சித் துறை




பட்டுப்புழுவின் வாழ்க்கைச் சுழற்சி




**பட்டுவளர்ச்சி செயல்வழி வரைபடம்**




**பட்டுவளர்ச்சித் துறை அலகுகள் அமைவிட மாநில வரைபடம்**



**பி2 விதைப்பண்ணை, மசினகுடி**




**பல்நிலை குளிர்பதன அலகு, ஒசூர்**




**தொழில்நுட்ப சேவை மையம், ஓசூர், கிருஷ்ணகிரி மாவட்டம்**




**அரசு பி2 பட்டுப் பண்ணை, மயிலாடும்பாறை, தேனி மாவட்டம்**



இளம்புழு வளர்ப்பு மையம், உடுமலைப்பேட்டை



அரசு பலமுனை பட்டு நூற்பு அலகு, ஓசூர்



தானியங்கி பட்டு நூற்பு அலகு, உடுமலைப்பேட்டை



தமிழ்நாடு பட்டுவளர்ச்சி பயிற்சி நிலையம், ஓசூர்



காஞ்சிபுரம் அரசு அண்ணா பட்டு பரிமாற்றகத்தில்
கச்சாப் பட்டு ஏலம்




காஞ்சிபுரம் "டான்சில்க்" கிளையில் முறுக்கேற்றிய பட்டு விற்பனை




மாநில அளவில் சிறந்த பட்டு விவசாயிகளுக்கான பரிசு



பட்டுச் சுற்றுலா – "பட்டு உலகம்" ஏற்காடு, சேலம்




**முக்கிய மாநிலங்களின் 2018–2019–ஆம் ஆண்டு**
**கச்சாப்பட்டு நூல் உற்பத்தி**




**முக்கிய மாநிலங்களின் 2018–2019–ஆம் ஆண்டு**
**வெண்பட்டு நூல் உற்பத்தி**




**‘சில்க் சமக்ரா’ திட்டத்தினை சிறப்பாக செயல்படுத்தியதற்காக சிறந்த மாநிலத்திற்கான தேசிய விருது**

**தமிழ்நாடு கைத்திறத் தொழில்கள்**
**வளர்ச்சிக் கழகம்**



பூம்புகார் விற்பனை நிலையம், சென்னை



பஞ்சலோகத்திலான பெருமாள்



**மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் வாழும் கைவினைப் பொக்கிஷம் விருது பெற்றவர்களுடன்**



**மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் பூம்புகார் மாநில விருது பெற்றவர்களுடன்**




**மாண்புமிகு ஊரகத்தொழில் துறை அமைச்சர் அவர்கள் பூம்புகார் விருதுகளை கைவினைஞர்கள் தினத்தன்று வழங்கினார்கள்**



**கன்னியாகுமரி நகர்ப்புற கண்காட்சித்திடல்**




**பொது பயன்பாட்டு மையம் – சுவாமிமலை, தஞ்சாவூர் மாவட்டம்**
**(பஞ்சலோக சிலைகள்)**

**தமிழ் நாடு  கதர் கிராமத் தொழில் வாரியம்**



கிராமிய நூற்பு நிலையம், பூளவாடி திருப்பூர் மாவட்டம்



கதர் உபகிளை, வாட்ரப் விருதுநகர் மாவட்டம்



கதர் பட்டு பிரதான உற்பத்தி நிலையம் கும்பகோணம்



டிடர்ஜெண்ட் சோப்பு அலகு, சங்கரன்கோவில் – திருநெல்வேலி மாவட்டம்



**காலணி ஒப்பனை செய்யும் இயந்திரம்,**
**தோல் அலகு – அம்பத்தூர்**




**தேன் பதப்படுத்தும் நிலையம், அம்சி – கன்னியாகுமரி மாவட்டம்**



கைமுறை காகித அலகு – செண்பகபுதூர் ஈரோடு மாவட்டம்



ஜவ்வாது அலகு – வேடப்பட்டி திண்டுக்கல் மாவட்டம்

**தமிழ்நாடு பனை பொருள் வளர்ச்சி வாரியம்**





பனை வெல்லம்

இஞ்சி மிட்டாய்




பதநீர்





பனை வெல்லம்

சுக்கு காபி தூள்




**பனை பொருள் விற்பனை ஊர்தி**



**பனை ஓலை கூடை**



**பனை ஓலைப் பெட்டி**